விலை:
ரூபா 25.00

# உதயன்

பக்கங்கள் – 28

சுடர் 28 | கதிர் 114 | வள்ளுவர் ஆண்டு2044 | பங்குனி 7 புதன் 20.03.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

இல்லை 8

தலிபான்களுடன் பேசும் ஆப்கன் எதிர்கட்சிகள் 9

மக்களை நரகத்துக்கு இழுக்கிறது அரசு 11

தொடர் இலங்கை வசம் 19

## தி.மு.க. அதிரடி: அரசிலிருந்து வெளியேற்றம்

சென்னை, மார்ச் 20

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்திய மத்திய அரசு தொடர்ந்து எடுக்கத் தவறியமையால் மத்திய அரசுக்கான தனது ஆதரவை நேற்று விலக்கிக் கொண்டது கலைஞர் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம். தி.மு.கவின் இந்த நிலைப்பாட்டை கலைஞர் கருணாநிதி நேற்றுமுற்பகல் அறிவித்தார்.

பார்க்க பக்கம் 04



“சொல்லில் மட்டுமன்றி செய்தும் காட்டினார் கருணாநிதி”

# சர்வதேச விசாரணைக்கு ஆதரவு தர காங். முடிவு



### இலங்கைத் தமிழருக்காக தொடர்ந்தும் குரல்கொடுப்போம்

### காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் சோனியா நேற்று அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 20

இலங்கையில் நடந்த போரின்போது தமிழ் இனப்படுகொலையில் ஈடுபட்ட இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை நடத்த இந்தியா ஆதரவு வழங்கும் என இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவியான சோனியா காந்தி நேற்று அறிவித்தார். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டுவரும் இலங்கை மீதான பிரேரணை தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றது என்று இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் மத்திய அரசுக்கு எதிராகக் கண்டனங்கள் வலுத்துவரும்

பார்க்க பக்கம் 04

## பிரேரணையில் திருத்தம் ராஜதந்திர காய்நகர்த்தல்

(ஜெனிவாவிலிருந்து ஆர்.சிவராஜா)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள இறுதிப் பிரேரணையில் பெரும்பாலான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளமையானது இராஜதந்திர ரீதியில் மேற்கொள்ளப்பட்ட காய்நகர்த்தல் என ஜெனிவாவில் உள்ள அமெரிக்க தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச போர்க்குற்ற விசாரணைகள் பற்றி பிரேரணையில் குறிப்பிடப்பட வேண்டுமென தமிழகம் உட்பட பல்வேறு தரப்புக்களில் வலியுறுத்தப்பட்டு வரும் சூழ்நிலையில் அது தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லையே என்று வினவியபோது கருத்து வெளியிட்ட ஜெனிவாவிலுள்ள அமெரிக்கத் தூதரக இராஜதந்திரியொருவர், சில இராஜதந்திர விடயங்கள் குறித்து பகிரங்கமாகப் பேச முடியாது, பேசக்கூடாதென்று தெரிவித்தார்.

‘‘இராஜதந்திரச் செயற்பாடுகளின்போது கடுமையான சொற்களைப் பயன்படுத்துவது கடினமான விடயமாக இருக்கும். அப்படிப் பயன்படுத்தப்பட்டால் அப்படியான

பார்க்க பக்கம் 04

## இயல்பை இழந்தது தமிழகம்



யாழ்ப்பாணம், மார்ச் 20

ஈழத் தமிழர்களுக்காகத் தமிழக மாணவர்கள் பற்றவைத்த போராட்டத் தீ முழுத் தமிழ் நாட்டையும் செயலிழக்கச் செய்துள்ளது.

அத்துடன் தமிழ் நாட்டிலுள்ள மத்திய அரசின் அலுவலகங்களை முற்றுகையிட்ட

பார்க்க பக்கம் 04

## ஈழத் தமிழர் தொடர்பில் முக்கிய தீர்மானம் இன்று

### இந்திய நாடாளுமன்றில் காங். கொண்டுவரும்

யாழ்ப்பாணம், மார்ச்20

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் இந்திய நாடாளுமன்றத்தில் இன்று புதன்கிழமை முக்கிய தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு காங்கிரஸ் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன் வெளிப்பாடாக இந்திய நாடாளுமன்றில் நேற்றுப் பேசிய மத்திய அமைச்சர் கமல்நாத், இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றில் இன்று விவாதிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை விலக்குவதாகவும், 9 வருடக் கூட்டணியை முறித்துக் கொள்வதாகவும் தி.மு.க.

பார்க்க பக்கம் 04

## அமெ. பிரேரணை மீது விவாதம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணையில் இனி எந்தவொரு பெரிய மாற்றங்களும் செய்ய முடியாத நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இறுதிப் பிரேரணை நாளை வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

‘‘இலங்கையில் நல்லிணக்கம்

பார்க்க பக்கம் 04

## காணாமற்போனோரின் உறவினருக்கு மிரட்டல்

### மனித உரிமைகள் குழுவில் முறைப்பாடு

கிளிநொச்சி, மார்ச் 20

காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்துள்ள உறவினர்கள் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் ஈ.ஏ.ஆனந்தராஜாவிடம் நேற்றுக் கிளிநொச்சியில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளிநொச்சிக்கு நேற்றுப் பயணம் செய்திருந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் ஆனந்தராஜா,

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களுக்கு நீதி கோரும் பணிக்காக ஜெனிவா சென்றார் சீமான்



நாம் தமிழர் இயக்கக் கட்சியின் தலைவர் சீமான் ஜெனிவா நகரில் தற்போது நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொண்டு ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை களுக்கு நீதி கோரும் பணியில் ஈடுபடுவதற்காக சுவிற்ஸர்லாந்துக்குச் சென்றுள்ளார்.

அவருடன் கட்சியின் சட்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான தடா சந்திரசேகரும் சென்றுள்ளார். ஜெனிவா விமான நிலையத்தில் அவர் கள் வந்திறங்கிய பொழுது அங்கு திரண்ட நூற்றுக் கணக்கான ஈழத் தமிழர்கள் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

மனித உரிமைகள் சபை கூட்டத்தொடரில் அமெரிக்க முன்மொழியும் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப் படவுள்ள இந்தத் தருணத் தில் அவரின் சுவிஸ் வருகை முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருதப்படுகின்றது.

மனித உரிமைகள் சபை கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் சீமான் நாளை மறுதினம் ஜெனி வாவில் ஐ.நா. முன்றிலில் நடை பெறவுள்ள மாபெரும் கவன ஈர்ப்பு நிகழ்விலும் கலந்து கொண்டு உரை யாற்ற உள்ளார். சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடை பெறவுள்ள கவன ஈர்ப்பு நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 - 5 மணிவரை நடைபெறும். (வ)

# ஈழத்தமிழருக்கு தனி ஈழம் கோரி ரஜினி ரசிகர்களும் உண்ணாவிரம்



இலங்கைத் தமிழர்களுக்கு தனி ஈழம், இனப்படுகொலை புரிந்த ராஜபக்ஷவுக்கு தண்டனை, கச்சதீவை திரும்பப் பெறுதல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி நடிகர் ரஜினிகாந்த் ரசிகர்கள் நேற்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைப் பிரச்சினையில் தமிழருக்கு ஆதரவான போராட்டம் இதுவரை இல்லாத அளவுக்கு இந்தியாவில் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. மாணவர்கள் ஆரம்பித்த இந்தப் போராட்டம் இதன்போது மக்கள் போராட்டமாக வடிவம் பெற்றுள்ளது. இப்போது இதில் ரஜினி ரசிகர்களும் கைகோர்த்துள்ளனர். வேலூர் மாவட்ட ரஜினி ரசிகர் மன்றம் சார்பில் சோளிங்கர் நகரில் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இந்தப் போராட்டத்தில் ஏராளமான ரஜினி ரசிகர்கள் பங்கேற்றனர். (வ)

# போர்க்குற்ற விசாரணை நடத்த இலங்கை உடன்பட வேண்டும்

## மார்க்சிஸ்ட் கம்யூ. வலியுறுத்து

சென்னை, மார்ச் 20

இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரணைகளை நடத்த இலங்கை அரசு உடன்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில், அந்தக்கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி. ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை இராணுவத்தால் பெருமளவு மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஏதுமறியாத அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர் குற்றங்கள் தொடர்பாக போதிய ஆதாரங்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக மாணவர்களும் மற்றும் அனைத்துப்



பகுதி மக்களும் குரல் கொடுத்து வருகின்றனர். இனியும் காலம் தாழ்த்தாமல் இந்தப் போர் குற்றங்கள் குறித்து சுயேச்சையான, நம்பகத்தன்மையுள்ள உயர் மட்ட விசாரணை நடத்த இலங்கை அரசு உடன்பட வேண்டும்.

மீள்குடியமர்த்தப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான பொருளாதார ஏற்பாடுகளை உறுதி செய்ய வேண்டும்.

தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவத்தை விலக்கி, அந்தப்பகுதிகளில் இயல்பு வாழ்வுக்கு உகந்த சூழலை ஏற்படுத்த வேண்டும்- என்றுள்ளது. (வ)

## இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கக் கோரி

# திரைப்பட இயக்குநர்கள் நேற்று சென்னையில் உண்ணாவிரதம்



சென்னை, மார்ச்.20

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கக்கோரி சென்னையில் திரைப்பட இயக்குநர்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் திரைப்பட இயக்குநர்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்.

இயக்குனர் அமீர், கவுதம் மேனன், லிங்குசாமி, ஜனநாதன், நடிகர்களான பாண்டியராஜன், எஸ்.ஜே. சூர்யா, மனோபாலா, பொன் வண்ணன், நடிகைகள் சுஹாசினி, குயிலி, சத்யபிரியா, திரைப்படத் தொழிலாளர் சம்மேளன பொதுச் செயலாளர் சிவா, பெப்சி விஜயன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

உண்ணாவிரதத்தில் இயக்குநர்கள் பேசுகையில்,

இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடைவிதிக்க வலியுறுத்தி தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தை இந்திய அரசு உடனே நடைமுறைப் படுத்த வேண்டும்.

போர்க்குற்றவாளி ராஜபக்ஷவை சுதந்திரமான பன்னாட்டு நீதி மன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

ஈழத் தமிழர்கள் மற்றும் புலம் பெயர்ந்த தமிழர்களிடம் தமிழ் ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

தமிழ் பகுதியில் திணிக்கப்பட்டிருக்கும் சிங்கள குடியேற்றத்தை உடனே நிறுத்த இலங்கையை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும். இனப்படுகொலை புரிந்த இலங்கையுடனான உறவை இந்தியா மறுபரிசீலனை செய்ய வேண்டும்

ஆகிய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

உண்ணாவிரதத்தில் உதவி இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள், நடன இயக்குநர்கள், உள்ளிட்ட பெப்சி தொழிற்சங்கத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சின்னத்திரை நடிகர் - நடிகைகளும் பங்கேற்றார்கள். உண்ணாவிரதத்தையொட்டி படப்பிடிப்புகள் நேற்று ரத்து செய்யப்பட்டன. (வ)

# அனைத்து உலக விசாரணைக்கு இந்தியா வலியுறுத்த வேண்டும்

## நாடுகடந்த தமிழீழ அரசு அவசர அழைப்பு

தமிழகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் ஓங்கி ஒலித்து வரும் குரல்களுக்கு மதிப்பளித்து ஐ.நா. மனித உரிமைச்சபையில் இலங்கை தொடர்பில் சுதந்திரமான பன்னாட்டு விசாரணைக்கு வலியுறுத் துமாறு இந்தியாவுக்கு நாடுகடந்த தமிழீழ அரசு அவசர அழைப்பு விடுத்துள் ளது.

நாளை வியாழக்கிழமை இலங்கை தொடர்பிலான பிரேரணை, ஐ.நா. மனித உரிமைச் சபைக்கு வரவுள்ள நிலையில், இந்த அவசர கோரிக்கையை நாடுகடந்த தமிழீழ அரசின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சகம் விடுத்துள்ளது. (வ)

# ஈழத்தமிழர் நல்வாழ்வுக்காக இந்தியா செயற்பட வேண்டும்

## ஆர்.எஸ்.எஸ். செயலர் வலியுறுத்து

இந்தியா மீது ஈழத் தமிழர்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில், அவர்க ளின் நல்வாழ்வுக்காக மத்திய அரசு செயற்படவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ்., தென் மாநிலங் களின் செயலர் ராஜேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கொள்கை முடிவுகளை எடுக்கும் உயர் அமைப்பான அகில இந்தியப் பிரதிநிதிகள் குழுக் கூட்டம் ராஜஸ் தான் மாநிலம் ஜெய்ப்பூரில் கடந்த 15, 16, 17 ஆகிய திகதி களில் நடைபெற்றது. அத னையடுத்து ராஜேந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை பிரச்சினையில், ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பின் போது, இந்திய அரசு உதவவில்லை.

**அமைப்பின் கொள்கை முடிவுகளை எடுக்கும் உயர் அமைப்பான அகில இந்தியப் பிரதிநிதிகள் குழுக் கூட்டம் ஜெய்ப்பூரில் நடைபெற்றது.**

இந்தியா உதவும் என, நம்பியிருந்த ஈழத் தமிழர்கள் ஏமாந்துள்ளனர். அவர்க ளுக்கு நம்பிக்கை ஏற்படுத் தும் வகையில், மத்திய அரசு இனி மேல் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களின் மறு வாழ்வு, இழந்த உரிமைகளை மீட்டல் போன்ற வற்றில், இந்தியா உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண் டும்-என்றார். (வ)

# இலங்கைக்கு எதிரான அமெ. பிரேரணை நகல்கள் பாடையில் கட்டி எரிப்பு

சென்னை, மார்ச் 20

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வருகிற தீர்மானத்துக்கு ஆதரவு வழங்க வலியுறுத்தி அமெரிக்கப் பிரேரணை நகல்களை தமிழக இளைஞர் முன்னணி அமைப்பினர் 'பாடை கட்டி' எடுத்துச் சென்று எரித்து போராட்டம் நடத்தினர்.

சென்னையில் நேற்று தமிழக இளைஞர் முன்னணி அமைப்பு சார்பில் நூதனப் போராட்டம் நடைபெற்றது.

லொயோலா கல்லூரி அருகில் இருந்து புறப்பட்ட மேற்படி ஊர்வலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இலங்கைக்கு எதிராக கோஷ மிட்டபடி சென்ற அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வருகின்ற தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும். அதில் சில திருத்தங்களைச் செய்ய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும். ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த ராஜபக்ஷ மீது பொது விசாரணை நடத்த வேண்டும். அப்பாவித் தமிழர்களை கொலை செய்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்று தமிழகம் முழுவதும் மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (வ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரிப் பயிலுநர்களில் 75 வீதமானோர் பெண்கள்

## இதன் மூலம் சம உரிமை உறுதியாகியுள்ளது என்கிறார் யாழ்.அரச அதிபர் அருமைநாயகம்

*யாழ்ப்பாணம், மார்ச் 20*

*யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நியமனத்தில் 75 வீதமானவர்கள் பெண்களே. இவர்களைவிட அரச அலுவலகங்களில் அதிகம் பெண்களே கடமையில் உள்ளனர். அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறுக்க முடியாது என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.*



யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பால் நிலை வன்முறைக்கு எதிரான செயற்குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் நினைவு கூரப்படுகிறது. இத்தகைய நிகழ்வுகளில் மகளிரின் எண்ணிக்கை மிகவும் குறைந்து காணப்படுகிறது. அவர்கள் இதனைத் தவிர்ப்பதைப் பார்க்கும் போது மகளிருக்குப் பிரச்சினைகள் இல்லையா? அல்லது நிறைவேற்றப்பட்டு விட்டதா? என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் மகளிரின் பங்களிப்பு மிக அவசியமாகவுள்ளது. மகளிர் தினம் உருவாக்கப்பட்டதன் நோக்கமே மகளிருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான்.

பெண்கள் தமது அநீதிகளைத் தட்டிக்கேட்கும் நாளாக இது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மகளிர் உரிமைகளுக்கு தொடர்ந்தும் குரல் கொடுக்கும் நாளாகவே இது உள்ளது.

ஆசியாவிலேயே பெண்களுக்கும் சம உரிமை முதன் முதலாக கிடைக்கப்பெற்றநாடு இலங்கை ஆகும். 1931 ஆம் ஆண்டு இந்த உரிமை கிடைக்கப்பெற்றது. மகளிருக்கு எமது நாட்டில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

தொழில்வாய்ப்புக்கள், கல்வி, அரசியல் எனப் பெண்கள் அனைத்திலும் பங்களிப்புடையவர்களாக உள்ளனர். 2005 ஆம் ஆண்டு பெண்களுக்கு எதிரான ஒழுங்கு விதிச் சட்டம் கொண்டு வரப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

தற்காலத்தில் பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வன்முறைச் சூழலுக்கு அகப்பட்டவர்களாக உள்ளனர். இதற்கான காரணத்தைக் கண்டறிந்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பெண்கள் சம உரிமையுடன் வாழ்வதற்கு அடிப்படைக் காரணமாகப் பொருளாதாரம் உள்ளதால் அதற்காக இன்னொருவரிடம் தங்கி வாழ வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதற்கான செயற்றிட்டமாக யாழ்.மாவட்டத்தில் பெண்கள் வ்ருமானத்தைப் பெறக் கூடியதாக ஊக்குவிப்புக் கடன் திட்டங்கள், தொழில் பயிற்சிகள், வாழ்வாதார கடன் உதவிகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

பெண்கள் தாமாகவே வருமானத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதே இதன் நோக்கமாகவுள்ளது. ஆனால் தற்போது சமூகத்தில் மரபு ரீதியான நடவடிக்கைகள் பேணப்பட்டு வருகின்றமையால் பெண்கள் உரிமை இழந்தவர்களாக இருக்க வேண்டிய நிலை உள்ளது.

எனவே பெண்கள் ஒன்றாகக் கூட்டிணைந்து தமது உரிமைப் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் சகல உரிமைகளுடனும் வாழ முடியும்- என்றார்.

யாழ்.மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் உதயணி நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் யாழ்ப்பாண உத்தியோகத்தர் காயத்திரி, புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய அறங்காவலர் பொன்னம்பலம் ஜமுனா தேவி, மருதங்கேணி பிரதேச செயலர் எஸ். திருலிங்கநாதன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இதில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-14)

## வேலணையில் எரிபொருள்களின் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்குக

### கூட்டுறவுச் சங்கத்திடம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 20

வேலணைப் பிரதேசத்தில் தட்டுப்பாடின்றி எரிபொருள்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக வேலணைப் பிரதேசத்தில் பெற்றோல் தட்டுப்பாடு தொடர்ச்சியாக நிலவிவந்ததை அடுத்து வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது குறித்துப் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

சங்கங்களுக்கு எரிபொருள் கொள்வனவுக்கென பண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

> தனியார் பலர் எரிபொருள் விற்பனைக்குத் தயாராக இருப்பதுடன் தமக்கு அதற்கான அனுமதியை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

அவற்றை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதாகவும், அதனாலேயே எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

எரிபொருளுக்கு வழங்கப்படும் பணம் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதை நிறுத்திக் கொள்வதுடன் எந்தக் காரணம் கொண்டும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவ இடமளிக்கக் கூடாதெனவும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தனியார் பலர் எரிபொருள் விற்பனைக்குத் தயாராக இருப்பதுடன் தமக்கு அதற்கான அனுமதியை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும், சங்கம் எரிபொருள் விநியோகத்தில் போதிய அக்கறை காட்டாதவிடத்து அனுமதியைத் தனியாருக்கு வழங்க வேண்டியேற்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரீன் கூட்டத்தில் தெரிவித்தார். (த-7)

## இரண்டு மாதங்களில் மட்டும் 2,500 மின் இணைப்புக்கள்

### யாழில் மின்சார சபை வழங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்.மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 2 ஆயிரத்து 500 மின் இணைப்புக்களை சுன்னாகம் மின்சார சபை வழங்கியுள்ளது என்று சுன்னாகம் மின்சார சபை பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின் வழங்கும் பணிகளை மின்சார சபை மேற்கொண்டு வருகின்றது.

இவற்றின் ஆரம்ப மின் இணைப்புக்களை வழங்கும் வேலைகள் இப்போது நடைபெறுகின்றன.

வீடுகளுக்கான மின் இணைப்புத் தொகையாக 15 ஆயிரத்து 900 ரூபாவும், கடைகள், தொழில்கூடங்கள், ஹோட்டல்கள் ஆகியவற்றுக்கான இணைப்புத் தொகையாக 17 ஆயிரத்து 750 ரூபாவும் அறவிடப்பட்டு வருகின்றன.

தற்போது மீளக்குடியமர்ந்த பகுதிகளான செம்பியன்பற்று, தாளையடி ஆகிய பகுதிகளில் இலவசமாக மின் இணைப்புக்கள் வழங்கப்படுவதுடன் தேவையான மின்கம்பங்களும் நடப்பட்டு வருகின்றன - என்றார். (த-13)

## பல வருடங்களாக புனரமைப்பின்றி நீர்வேலி தெற்கு கரந்தன் வீதி

யாழ்ப்பாணம், மார்ச் 20

நீர்வேலி தெற்கு கரந்தன் வீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் பெரும் சேதமுற்றுக் காணப்படுகிறது.

நீர்வேலி கந்தசுவாமி கோயில் சந்தியில் இருந்து ஊரெழு வரையான இந்த நீண்டதூரப் பிரதான வீதி நெடுங்காலமாகப் புனரமைக்கப்படாமல் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியை அண்டி விவசாய நிலங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த நிலங்களில் உற்பத்தியாகும் விளை பொருள்களை சந்தைக்கு எடுத்தச் செல்வதில் விவசாயிகள் இடர்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் மழை காலத்தில் இந்த வீதியில் வெள்ளம் தேங்குவதால் வீதியூடாகப் போக்குவரத்து செய்ய முடியாத நிலையும் ஏற்படுகிறது.

இதனைவிட நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் உற்சவம் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த வீதியின் சேதத்தால் திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்களுக்கும் பெரும் சிரமங்கள் ஏற்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த வீதிப் புனரமைப்புக் குறித்து வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தப் பிரதான வீதியை வீதி அபிவிருத்தி அதிகார சபையே புனரமைக்க வேண்டும்.

தற்போது மேற்கொள்ளப்படும் வீதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த வீதியையும் உடனடியாகப் புனரமைத்துத்தர வேண்டும் என்றார். (த-17)

## பொலிஸாரின் ரோந்து தீவிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்.குடாநாட்டில் தற்போது திருட்டுச் சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்கள் அதிகரித்ததை அடுத்து பொலிஸாரின் ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.நகரிலும் அதனை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் இரவு வேளையில் பொலிஸார் தமது ரோந்துப் பணிகளை முடுக்கி விட்டுள்ளனர்.

வாகனங்களிலும் கால் நடையாகவும் பொலிஸார் இந்த ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருவதுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவோரை விசாரணை செய்தும் வருகின்றனர். குடாநாட்டின் பல இடங்களிலும் தற்போது திருடர்களின் கைவரிசை அதிகரித்து வருகிறது. வர்த்தக நிலையங்கள், ஆலயங்கள் மற்றும் பொதுமக்களின் வீடுகள் என்பவற்றில் திருடர்கள் தொடர்ந்து கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.

இந்தத் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்கும் முகமாகவே பொலிஸார் தமது இரவு ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்தி உள்ளனர். (த-17)

## வேலணை, மண்டைதீவு பகுதிகளில் மீன் சந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 20

வேலணை, மண்டைதீவு பகுதிகளில் மீன் சந்தைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வேலணை பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா தெரிவித்தார். இந்தப் பகுதிகளில் மீன் சந்தைகள் இல்லாமையால் மக்கள் கடலுணவுகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் உள்ளதாகவும் எனவே மீன் சந்தைகளை அமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

மக்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணக் கூடியதாகத் தற்காலிக கொட்டகைகளை உடன் அமைக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வேலணை பிரதேச சபை செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (த-7)

## தவக்காலத்தை ஒட்டிய சிலுவைப்பாதை பேரணி

கொழும்புத்துறை,மார்ச் 20

தவக்காலத்தையொட்டிய சிலுவைப் பாதைப் பேரணி பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத்துக்குச் செல்லவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பாஷையூரில் ஆரம் பமாகும் சிலுவைப் பாதைப் பவனி கடற்கரை வீதி, எழிலூர், கொழும்புத்துறை வீதி வழியாக மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத்தைச் சென்றடையும், வழியில் பல இடங்களில் தரித்துநின்று சிலுவைப் பாதைத் தியானங்களைச் சிந்திக்கும் நிகழ்வுகளும் இடம்பெறும். தொடர்ந்து கர்த்தர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியுடன் நிறைவடையுமென பாஷையூர்ப் பங்குத் தந்தை ஜோய் பேடினன் அடிகள் தெரிவித்தார். (வ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ.பிரே..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மற்றும் பொறுப்புக் கூறுதலை ஊக்குவித்தல்'' என்ற தலைப்பில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிரான பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாளை சமர்ப்பிக்கப்படும் இந்தப் பிரேரணையில், இனிப் பெரியளவிலான மாற்றங்கள் எதனையும் செய்ய முடியாது என்று ஜெனிவா இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**ஆபிரிக்க நாடுகள் குறிவைப்பு**

நாளை சமர்ப்பிக்கப்படும் இந்தப் பிரேரணை விவாதத்துக்கு விடப்படவுள்ளது. இந்தப் பிரேரணைக்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கு நாடுகள் ஏற்கனவே எடுத்துள்ள நிலையில், எந்தத் தீர்மானமும் இதுவரை எடுக்காத ஆபிரிக்க நாடுகளை அமெரிக்காவும், இலங்கையும் குறிவைத்துள்ளன.

ஆபிரிக்கப் பிரதிநிதிகளை இலங்கை - அமெரிக்க அதிகாரிகள் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

**இந்தியா ஆதரவு**

அமெரிக்காவின், இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரிக்கும் என்று நம்பப்படுகின்றது. அத்துடன் அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவாக 25 முதல் 28 நாடுகள் வரையில் வாக்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**பிரேரணையை செயலிழக்கச் செய்த இந்தியா**

அமெரிக்காவினால் ஜெனிவா அமர்வில் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில் சொல்லப்பட்ட பல விடயங்களை நீக்கி, அதனை மென்மையாக்கும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபட்டதாகத் தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆகியோர் குற்றம் சுமத்தினர்.

**இலங்கை தப்பாது**

அமெரிக்கப் பிரேரணை ஆரம்பத்தில் இருந்ததைவிட மென்மையாக்கப்பட்டுள்ளதை ஒப்புக்கொண்ட ஜெனிவா இராஜதந்திரிகள், அமெரிக்கா - இலங்கை விடயத்தை இத்துடன் விடப்போவதில்லையென்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(த-5)

# பிரேரணையில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பிரேரணை வாக்கெடுப்புக்கு வரும்போது சில நாடுகள் நடுநிலைப் போக்கைக் கடைப் பிடிக்கலாம். இதனால் பிரேரணையின் வலு குறையும். வலுவற்ற பிரேரணை ஒன்றை தவிர்க்க வேண்டுமானால் இராஜதந்திர ரீதியில் நாம் செயற்பட வேண்டியுள்ளது'' என்றார் அந்த இராஜதந்திரி.

அப்படியானால் இலங்கைக்கு இதில் பெரிதளவில் அழுத்தங்கள் வழங்கப்பட மாட்டாதே என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர்,

''இல்லை சில விடயங்களை நாம் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி உள்ளோம். மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இறுதியாக சமர்ப்பித்த அறிக்கையை இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி உள்ளோம். அதில் இலங்கை குறித்து கடும்போக்கு விடயங்கள் உள்ளன. அந்த அறிக்கையை இலங்கை ஏற்றுக்கொள்வது என்பதன் அர்த்தம் இலங்கை ஒரு விசாரணைக்கு இணங்கி உள்ளது என்பதுதான். இதனை நேரடியாகச் சொல்லாமால், பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் சொல்ல வேண்டி உள்ளதால் சில நுட்பமான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியுள்ளது'' - என்று குறிப்பிட்டார் அந்த இராஜதந்திரி.

(த-சி)

# சர்வதேச...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நிலையிலும், மத்திய அரசில் இருந்து தி.மு.க. வெளியேறியுள்ள நிலையிலும் காங்கிரஸ் கட்சித் தலைவியான சோனியா நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார்.

எதிர்க்கட்சிகள், மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் மத்திய அரசுக்கு எதிராகப் போராடி வரும் நிலையில் அவைபற்றி ஆராய்வதற்கென நேற்றுக்காலை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார் சோனியாகாந்தி. இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்தும், அதுதொடர்பில் தமிழகத்தில் எழுந்துள்ள எதிர்ப்புகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு உரையாற்றிய சோனியா காந்தி, ''இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுப்போம். இலங்கையில் நடந்த போரில் இடம்பெற்ற தமிழ் இனப் படுகொலையில் ஈடுபட்ட இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை ஒன்றை நடத்த இந்தியா ஆதரவு வழங்கும். அதில் நாங்கள் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளோம்.'' - என்று கூறினார்.

''எமது இதயங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு மிகவும் நெருக்கமாகவே உள்ளன.2009இல் போரின் இறுதி நாள்களில் அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் சிறுவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட சொற்களால் விபரிக்க முடியாத கொடூரங்கள் குறித்து வெளியாகும் அறிக்கைகளால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

அதனால் தான் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகமான, நடுநிலையான விசாரணைகளை நாம் கோருகிறோம்.

தமிழர்களுக்கு சம உரிமை, சமமான பாதுகாப்புக்கு, இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி காலத்தில் இருந்தே எமது ஆதரவு உள்ளது.

அவர்களுக்கு நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்படுவது வருத்தமளிக்கிறது.'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு எதிரான கடும்போக்கை முதல் முறையாகச் சோனியா காந்தி வெளிப்படுத்தியுள்ளதாகவும், இது வழக்கத்துக்கு மாறானது என்றும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அண்மைக்காலத்தில் இந்தியாவின் உயர்மட்டத் தலைவர் ஒருவர் பகிரங்கமாக, இலங்கைக்கு எதிராக கடுமையான தொனியில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளமை இதுவே முதல்முறை என்று ஐ.ஏ.என்.எஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மத்திய ஆட்சியில் இருந்து தி.மு.க. விலகினாலும் மத்திய அரசுக்கு பாதிப்பு ஏற்படாது என்று பிரதமர் அலுவலக அமைச்சர் வி.நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

ஆளும் கூட்டணியை வெளியில் இருந்து ஆதரிக்கும் உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பகுஜன் சமாஜ் கட்சியும், சமாஜ்வாதி கட்சியும் தாங்கள் தொடர்ந்து ஆதரவு தருவோம் என்று உறுதி அளித்துள்ளதால், ஆட்சிக்குப் பாதிப்பு இருக்காது என்று அவர் கூறினார்.

காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கு வெளியில் இருந்து 59 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளிக்கின்றனர். காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகளுக்கு 230 இடங்கள் உள்ளன.

இலங்கை தொடர்பாக முடிவெடுக்க காலம் இருக்கும் நிலையில் மத்திய அரசின் நிலைப்பாட்டை தெரிந்துகொள்வதற்கு முன்பே தி.மு.க முடிவு வந்துள்ளதாகவும் மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார். (த)

# ஈழத்தமிழர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நேற்று அறிவித்தது.

தி.மு.க. வின் இந்த அதிரடி நடவடிக்கையைத் தொடர்ந்து, மத்தியில் கட்சியிலிருக்கும் காங்கிரஸ் கட்சி கூட்டம் நடத்தியது. இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக முக்கிய தீர்மானமொன்று காங்கிரஸ் கட்சியால் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**இலங்கை விவகாரம் இந்திய நாடாளுமன்றை இழுத்து மூடியது**

இலங்கைத் தமிழர் விவகாரத்தால் இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்று ஒத்திவைக்கப்பட்டன.

இந்திய நாடாளுமன்றம் நேற்றுக் காலை சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது அ.தி.மு.க., தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சபையின் மத்தியில் வந்து இலங்கைக்கு எதிராகக் கோஷமெழுப்பினர்.

இதனால் குழப்பம் ஏற்பட்டது. பின்னர் சபை மதியம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதேபோன்று மாநிலங்களவையிலும் தி.மு.க., அ.தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமெழுப்பியதால், தொடர்ந்து நடத்த முடியாமல் அவை ஒத்திவைக்கப்பட்டது.

(த-5)

# இயல்பை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஆயிரக்கணக்கான மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் புதுவையிலுள்ள ஐ.நாவின் யுனெஸ்கோ கட்டடத்தில் பறந்து கொண்டிருந்த 'சார்க்' நாடுகளின் கொடியில் இலங்கைக் கொடி அகற்றப்பட்டது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை வலுப்படுத்த வேண்டும், ஈழப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும், இலங்கையில் தனி ஈழம் அமைக்கப்பட வேண்டும், என்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக மாணவர்களால் கடந்த 9 நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

மாணவர்களால் பற்ற வைக்கப்பட்ட போராட்டத் தீ தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளையும் சென்றடைந்துள்ளது.

**சென்னை**

சென்னை அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புக்களை நேற்றையதினம் புறக்கணித்து விட்டு நேதாஜி சாலை வழியாக 'ரிசேவ்' வங்கியை முற்றுகையிடச் சென்றனர். இந்த மாணவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். பொலிஸாரின் முற்றுகையைத் தகர்த்தெறிய முற்பட்ட மாணவர்கள் 150 பேர் வரை கைதுசெய்யப்பட்டனர்.

சென்னை ஆலடியில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரி மாணவர்கள் பேரணி நடத்தினர். சுமார் 500 மாணவர்கள் வரையில் பேரணியில் கலந்துகொண்டு கோஷங்களை எழுப்பினர். ஆலடி சுற்று வட்டாரத்தில் இருக்கும் கல்லூரி மாணவர்களும் பங்கேற்றனர்.

சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டாவது நாளாக போராட்டத்தைத் தொடர்ந்தனர். பல்கலைக்கழக துணைவேந்தர் தாண்டவன் மஹிந்த ராஜபக்ஷவை போர் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், தனி ஈழம் அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கைகளை சென்னை பல்கலைக்கழகத்தின் கோரிக்கைகளாக முன்வைத்து மத்திய அரசுக்கு அறிவிப்பதாக தெரிவித்திருந்தார்.

பல்கலைக்கழகம் நேற்று பூட்டப்பட்டிருந்தது. இருப்பினும் மாணவர்கள் அதிரடியாக நுழைந்து தமது போராட்டத்தை தடையின்றி முன்னெடுத்து வருகின்றனர்.

மாணவர்களுக்கு ஆதரவாக சென்னை கோயம்பேரு சந்தை வியாபாரிகளும் களத்தில் குதித்தனர்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 700 மாணவர்கள் போராட்டம் நடத்த நேற்றுக் கூடிய போது பல்கலைக்கழகத்துக்கு உடனேயே கால வரையறையற்ற விடுமுறை அறிவிக்கப்பட்டது. அதையும் மீறி நேற்றையதினமும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**கோவை**

ஈழத்தமிழருக்காக கோவையிலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் போராட்டத்தை தீவிரப் படுத்தியுள்ளன. இதனால் கோவை நகரமே போராட்டக் களமாக மாறியுள்ளது.

கோவையில் வேளான் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட போராட்டம் பற்றிஎரியத் தொடங்கியதையடுத்து, தமிழ் நாடு வேளான் பல்கலைக் கழகம் கால வரையறையற்ற விடுமுறையை அறிவித்துள்ளது.

கோவையில் அரச கலை மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்களால் தொடக்கப்பட்ட போராட்டங்கள் இப்போது அனைத்துக் கல்லூரி மாணவர் போராட்டங்களாக உருமாறியுள்ளன. இதனால் கோவை மாவட்டம் முழுவதும் போராட்டத் தீ வளர்ந்துள்ளது.

தமிழ்நாடு வேளான் பல்கலைக் கழக மாணவர்கள் 500 பேரும், பாரதியார் பல்கலைக்கழக மாணவர்கள் 25 பேரும் பல்கலைக் கழக [illegible] தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (த-5)

# காணாமற்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ், வவுனியா பிராந்திய இணைப்பாளர் ஆகியோர் நேற்றுக் கிளிநொச்சியில் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:-

தற்போது கிளிநொச்சியைப் பொறுத்தவரை காணாமற் போனவர்கள், சரணடைந்து காணாமற் போனவர்கள், கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள் என பலதரப்பட்ட வகையான காணாமற்போன உறவுகளை தேடி அவர்களின் உறவினர்கள் தினமும் பல்வேறு இடங்களிலும் முறையிட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இங்குள்ள சூழலில் காணாமற் போனோரின் உறவினர்களும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒவ்வொருவரும் தங்களின் முறைப்பாடுகளை அச்சத்துடன் முறையிட வேண்டிய நிலை காணப்படுகின்றது. காணாமற் போனோரின் உறவினர் வீடுகளுக்குச் சென்று அவர்களை அச்சுறுத்தும் பாணியில் சீருடையினர் நடந்து கொள்கின்றனர்- என்று தெரிவித்தனர்.

[illegible] ஆணையாளர், சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.(த-6)

# தி.மு.க...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஈழத் தமிழருக்கு எந்த வகையிலும் பயன்படாத சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், இதற்குப் பிறகும் மத்திய ஆட்சியில் தி.மு.க. நீடிப்பது தமிழினத்துக்கே இழைக்கப்படும் பெரும் துரோகம் என்பதால், அமைச்சரவையிலிருந்தும், கூட்டணியிலிருந்தும் உடனடியாக விலகிக் கொள்வதென முடிவு செய்தோம் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது அறிவிப்பில் தெரிவித்தார்.

நேற்றுக்காலை ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செல்வா காலத்தில் ஈழத் தமிழர்களுக்காக அமைதியான முறையில் தொடங்கிய எழுச்சியையும், ஈழத் தமிழ்ச் சமுதாயப் புரட்சியையும் ஆயுத பலம் கொண்டு; அரசின் அதிகார வலிமையைக் காட்டி சிங்கள வெறியர்களின் ஆதிக்கத்தை நிலை நாட்டலாம் என்று கருதி செயல்பட்ட சிங்களப் பேரினவாத அரசின் கொடுமைகளையும், அங்கு வாழும் தமிழர்களின் கலை, கலாசாரங்கள் போன்றவைகளையும், அழித்தொழிக்க முனைந்து வன்முறை வெறியாட்டங்கள் நடத்தப்பட்டன. சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராகக் கிளம்பிய விடுதலைப் புலிகள் மற்றும் விடுதலைப் போராளிகள் அந்த மண்ணில் அடுத்தடுத்து நடந்த போரில் பலியானார்கள் என்றாலுங்கூட; அங்கே கொழுந்து விட்டெரிந்த தமிழ் உணர்வு மங்கிப் போய் விடவில்லை என்பதற்கு உதாரணமாக; வரலாற்றில் பதிந்துள்ள பல நிகழ்ச்சிகளைக் கோடிட்டுக் காட்ட முடியும். தமிழ் இளைஞர்கள் தங்கள் இனம் வாழ- மொழி வாழ- நடத்திய வீர மரணப் போராட்டங்கள் கூட தமிழ் உணர்வற்றவர்களால் எள்ளி நகையாடப்பட்டாலும், அவைகளையெல்லாம் மீறி நமது குறிக்கோள் வெற்றியே முக்கியம் என்ற கொள்கை உறுதியோடு; ஈழப் போரில் மாண்டு மடிந்த போராளிகளுக்கும், அவர் தம் குடும்பத்தாருக்கும் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்ற சூழலில் அவர்தம் காலடி மண்ணெடுத்து, அதனைத் திலகமாக இட்டுக் கொண்டு, அந்தத் திலகத்தின் சாட்சியாக- தமிழ் ஈழத்தில் சிங்களப் பேரினவாதிகளால் நடத்தப்பட்ட- அதிலும் குறிப்பாக ராஜபக்ஷ அரசின் போர்க் குற்றங்கள் மலிந்த- இரு கருத்துக்கு இடமில்லாத வகையில் இனப் படுகொலையே நடத்தப்பட்டு- உலக அரங்கில் உள்ள நாடுகளின் விவாதத்துக்கு உரியதாக ஆகி விட்ட இந்தச் சூழலில் உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று மார் தட்டிக் கொள்ளும் இந்தியத் திருநாடு, இந்தப் பிரச்சனையின் ஆழத்தை உணராமல், விளைவுகளைக் கருதாமல், ஒதுங்கி நிற்பதோ; அல்லது எதிர் மறை கருத்துரைப்பதோ- இந்தியாவில் காந்தியடிகளும், இலங்கையில் தந்தை செல்வநாயகமும் சுதந்திரப் போராட்டத்திற்காகத் தேர்ந்தெடுத்து நடத்திய அறவழிகளை- அறவே மூடிவிடுவதற்கான ஜனநாயக விரோதச் செயல்களாகும். இவைகளையெல்லாம் ஐ.நா. மன்றத்திலும், ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் நீதி நெறியோடு ஆராய்ந்து பார்த்து- அனைத்து நாட்டு மக்களின் இதயத்தையும் குளிர வைக்கும் முடிவுகளை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அதற்கு மாறாக இலங்கையும், அந்த இலங்கையின் ''தொப்புள் கொடி'' உறவு கொண்ட தமிழகம் இடம் பெற்றுள்ள இந்தியாவும், இந்த ஜனநாயக விரோதச் செயல்களுக்கு கதவுகளைத் திறந்து விட்டிருப்பதை இன உணர்வுள்ள எந்த ஒரு தமிழனும் ஏற்றுக் கொள்ள இயலாது.

எனவே ''குதிரை குப்புறத் தள்ளியதும் அல்லாமல், குழியும் பறித்த கதை''யாக, அமெரிக்காவின் பிரேரணையை பெருமளவுக்கு நீர்த்துப் போக விட்டதோடு; திராவிட முன்னேற்றக் கழகம் முன்மொழிந்த திருத்தங்கள் எவற்றையும் இந்திய அரசு சிறிதும் பரிசீலனையும் செய்யவில்லை.

எனவே, ஈழத் தமிழருக்கு எந்த வகையிலும் பயன்படாத சூழ்நிலைகளே உருவாக்கப்பட்டுள்ள நிலையில், இதற்குப் பிறகும் இந்திய மத்திய ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் நீடிப்பது தமிழினத்திற்கே இழைக்கப்படும் பெரும் தீமை என்பதால், திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அமைச்சரவையிலிருந்தும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்தும் உடனடியாக விலகிக் கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார் கருணாநிதி. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தொடர்புகளுக்கு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

தலைமையகம்:
மின் அஞ்சல்
செய்தி: news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பசுத்தோல் போர்த்த புலியின் நிலைக்கு மாற முனையாதீர்..!

அமெரிக்கா, நாளைய தினம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிராகச் சமர்ப்பிக்கும் பிரேரணையை, இந்திய அரசு ஆதரிக்குமா அல்லது நழுவல் வழுவல் போக்கைக் கைக்கொள்ளுமா? என்பது குறித்து, இப்பத்தி எழுதப்படும்வரை உத்தியோக பூர்வமான அறிவித்தல் எதுவும் வெளியாகவில்லை.

போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக மட்ட விசாரணை நடத்த வேண்டும் என்ற பிரேரணைக்கு இந்திய அரசு ஆதரவு வழங்க வேண்டும் என்று, தமிழகத்தின் சக்தி மிகுந்த கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் மிகமூத்த அரசியல் தலைவருமான கலைஞர் மு.கருணாநிதி விடுத்த அழுத்தத்துக்கு மத்திய அரசு மசியுமா என்பது குறித்தும் எதுவித உத்தியோகபூர்வ தகவலும் புதுடெல்லியில் இருந்து வெளிப்படவில்லை.

கருணாநிதியின் வேண்டுதலை (சோனியா) மன்மோகன் அரசு உள்வாங்குகிறதோ இல்லையோ, தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக வெடித்துள்ள போராட்டத்தைக் கருத்தில் கொண்டேனும் -

அமெரிக்கப் பிரேரணையை இந்திய அரசு ஆதரிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருமா என்பது குறித்தும் எவ்வித அசுகையையும் காணோம்.

எனினும் மத்திய அரசின் பங்காளியாக இருக்க மாட்டோம் என்று கருணாநிதி விடுத்துள்ள அறிவிப்பு மத்திய அரசின் பலத்தைக் குறைக்கும் என்ற (factor) தாற்பரியத்தை புதுடில்லி அரசு புறமொதுக்குவதற்கு இயலாத ஒரு சூழமைவு உருவாகி உள்ளது என்பதும் கணக்கில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

மேலும் -

இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும்; போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்; தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாடு மாணவர் அமைப்புகள் நடத்தும் போராட்டம் இப்பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு அரசியல்வாதிகள் நடத்திய போராட்டங்களை விஞ்சிவிட்டது.

இத்தகைய நிலையில் நேற்று வெளியான பரபரப்பான செய்திதான் காங்கிரஸ் தலைமையிலான ஆளும் மத்திய முற்போக்குக் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேறுவதாக அதன் தலைவர் கருணாநிதி விடுத்த அறிவிப்பு.

லோக்சபாவின் மொத்த எம்.பிக்கள் எண்ணிக்கை 540. அரசு நீடிப்பதற்கு 270 எம்.பிக்களின் ஆதரவு தேவை. தி.மு.கவின் ஆதரவுடன் மொத்தம் 295 எம்.பிக்கள் அரசதரப்பில் இருந்தனர். தி.மு.கவின் 18 எம்.பிக்களின் ஆதரவு விலக்கிக்கொள்ளப்பட்ட நிலையில் மத்திய அரசுக்கான ஆதரவு எம்.பிக்களின் எண்ணிக்கை 277 ஆகக் குறைந்துள்ளது. இதில் அரசுக்கு வெளியே இருந்து ஆதரவு தரும் சமாஜ்வாடி கட்சியின் 22 எம்.பிக்களின் ஆதரவும் பகுஜன் சமாஜ் கட்சியின் 21 எம்.பிக்களின் ஆதரவும் அடங்கும். இதனால் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு சிறுபான்மை அரசாக மாறிவிட்டது.

தமிழ்நாட்டில் மாணவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு தி.மு.கவின் நடவடிக்கை வலுவூட்டக்கூடியதாகக் கருதப்படுகிறது. ஆனால் தி.மு.க. பல்டி அடிக்குமானால் அது மாணவர் போராட்டத்தையும் கொச்சைப் படுத்திவிடலாம். 1965ஆம் ஆண்டு சென்னையில் இடம்பெற்ற ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு பின் மாணவர்களின் பெரிய போராட்டமாகத் தற்போதைய போராட்டத்தை ஆய்வாளர்கள் கணிக்கிறார்கள்.

அமெரிக்கத் தீர்மனத்தில் ஏற்கனவே இந்தியாவால் நான்கு திருத்தங்கள் செய்யப்பட்டுவிட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. குதிரையைக் குப்புறத் தள்ளியதுடன் நின்றுவிடாது குழியும் பறித்த கதையாக அமெரிக்கத் தீர்மானத்தைப் பெருமளவு நீர்த்துப்போகச் செய்ய முனைவதோடு, தி.மு.க. முன்மொழிந்த திருத்தங்களையும் புதுடில்லி அரசு சிறிதும் பரிசீலனை செய்யவில்லை என்றும் குற்றச் சாட்டுக்கள் ஏற்கனவே மேலெழுந்துள்ளன.

தமிழக மாணவர்களின் எழுச்சியை குறைத்துக் கணிக்கும் விதத்தில் புதுடில்லி அரசு செயற்பட முனைந்தால், தி.மு.க. தனது வழமையான "பல்டி" களைக் கைக்கொள்ள நினைத்தால் அதன் பெறுபேறுகள் "பூமராங்" காக மாறி இரு தரப்புகளும் பசுத்தோல் போர்த்த புலிகள் என்பதனை அம்பலமாக்கிவிடும்.

# உயிர்கள் பறிக்கப்பட்ட பின்னர் உயிர்த்தெழும் அரச அதிகாரிகள்

## வீதித் திருத்தங்களில் உரிய நடைமுறைகளை பின்பற்றுமாறு சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20

வீதி அகலிப்பு நடவடிக்கைகள் மற்றும் பாலப் புனரமைப்பு வேலைகளின்போது உயிர்கள் பலியெடுக்கப்பட்டவுடன் உயிர்த்தெழும் அரச அதிகாரிகள், பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்குவதும் பின்னர் அவற்றைத் தளர விடுவதுமாக இருப்பதாக மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

கடந்த வாரம் செம்மணிப் பாலத்தடியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர். வீதியில் பாலத் திருத்த வேலை இடம்பெறுவதை வெளிக் காட்டும் வகையில் அபாயக் குறியீடுகள் எவையும் வைக்கப்பட்டிருக்கவில்லை.

அத்துடன் வீதி விளக்கோ அல்லது பாலத் திருத்த வேலை இடம்பெறும் இடத்தில் எச்சரிக்கை விளக்கோ பொருத்தப்பட்டிருக்கவில்லை. வீதித் திருத்த வேலைகள் செய்பவர்களின் கவனமற்ற நடவடிக்கையினாலேயே இந்த இரண்டு உயிர்களும் அநியாயமாகப் பறிக்கப்பட்டதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் கே.கே.எஸ். வீதியில் நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில் பாலத் திருத்த வேலைக்காக வெட்டப்பட்டிருந்த குழியினுள் வீழ்ந்து வயோதிபர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

அதன் பின்னர் வீதித்திருத்த வேலைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் பாதுகாப்புக் குறியீடுகளையும், இரவு நேரத்தில் லாந்தர் விளக்குகளையும் பொருத்தியிருந்தன. பின்னர் அவை காலப் போக்கில் கைவிடப்பட்டிருந்தன. அதனைப் பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகளும் கண்டும் காணாமல் இருந்துள்ளனர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் செம்மணிப் பாலத்தில் இரண்டு இளைஞர்களின் உயிர்கள் பலியெடுக்கப்பட்ட பின்னர், உயிர்த்தெழுந்த அதிகாரிகள் வீதி நடைமுறைகளை இறுக்கமாக்கியுள்ளனர்.

பாலத் திருத்த வேலைகள் இடம்பெறும் இடங்களில் இரவு நேரங்களில் பாதுகாப்பு விளக்குகள் ஒளிர விடப்படுவதுடன் எச்சரிக்கைக் குறியீடுகளும் வைக்கப்பட்டுள்ளன.

தற்போது மேற்கொள்ளப்பட்ட இந்த நடைமுறையை அரச அதிகாரிகள் தொடர்ந்தும் இறுக்கமாகப் பேண வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-5)

# தென்னிலங்கையில் சமுர்த்தி நவம்பர் முதல் வழுங்கப்படவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் வரையில் சமுர்த்திப் பயனாளிகளுக்குச் சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளபோதும், தென்னிலங்கையில் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப் படவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நவம்பர் மாதத்திலிருந்து 15 லட்சம் சமுர்த்திப் பயனாளிகளுக்கு, அவர்களுக்கு வழங்க வேண்டிய சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப் படவில்லை. அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை 150 கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கப் பொதுச் செயலாளர் சாமரமத்துமகளுகே, கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசால் கடந்த காலங்களில் சமுர்த்திப் பயனாளிகளுக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பொருள்களாகவே சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன. பின்னர் இந்த நடைமுறை மாற்றப்பட்டு முத்திரைக்குச் சமனான பணம் சமுர்த்தி வங்கிகள் ஊடாக வழங்கப்பட்டு வந்தது. இந்தப் பணமும் கடந்த நவம்பர் மாதம் வரையுமே அரசால், சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் குறித்த நிலுவைப் பணத்தை அரசு வழங்க வேண்டும் என்று செயலாளர் சாமர மத்துமகளுகே கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆனால் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்குரிய சமுர்த்திப் கொடுப்பனவுகள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளன. ஜனவரி மாதத்துக்குரிய கொடுப்பனவு தற்போது யாழ்.மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரன் தெரிவித்தார். (த-5)

## நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்துக்கு நிரந்தர முகாமையாளரை நியமிக்குக

யாழ்ப்பாணம், மார்ச் 20

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நிரந்தரப் பொது முகாமையாளர் இன்மையால் சங்கம் தனது செயற்பாடுகளை முழுமையாக முன்னெடுக்க முடியாத நிலையிலுள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக நெடுந்தீவு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்துக்கு பொது முகாமையாளர் நியமிக்கப்படவில்லை.

தற்போதைய பொது முகாமையாளர் நெடுந்தீவு, வேலணை, அனலைதீவு கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளராகவும் உள்ளார். அத்துடன் நெடுந்தீவு பனை அபிவிருத்திச் சங்கத்தின் பொது முகாமையாளராகவும் கடமையாற்றுகிறார்.

இவர் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களில் பொது முகாமையாளராகக் கடமையாற்றுவதால் அனைத்துச் சங்கங்களினதும் செயற்பாடுகளைச் சீராக நடைமுறைப்படுத்த முடியாத நிலை உள்ளதாகவும், இதனால் நெடுந்தீவுச் சங்கத்துக்கு தனியொரு பொது முகாமையாளரை நியமிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-7)

## கடலுணவுகளின் விலைகள் எகிறின

யாழ்ப்பாணம், மார்ச் 20

தற்போதைய காலநிலை வேறுபாட்டினாலும் கடும் வறட்சியினாலும் கடலுணவுகள் பிடிபடுகின்றமை திடீரென குறைவடைந்துள்ளன என மீனவர்கள் கூறுகின்றனர்.

கடலுண்வுகளின் பிடிபாடு குறைந்துள்ளதால் மீனவர்களும் பாதிக்கப்படுவதாகக் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனப் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

தற்போதைய காலநிலை மாற்றத்தினாலும் கடும் வெப்பம் காரணமாகவும் கடலுணவுகளின் பிடிபாடு குறைந்து காணப்படுகின்றது.

இதனால் போதிய வருமானம் இல்லாமல் மீனவர்களும் சிரமப் படுகின்றனர். இதனையடுத்து முக்கிய மீன்சந்தைகளான கொட்டடி, நாவாந்துறை, குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை ஆகியவற்றில் கடலுணவுகளின் விலைகள் உச்சத்தில் காணப்படுகின்றன.

நேற்றைய மீன் சந்தை நிலவரப்படி:

மீன் (பெரிது ஒரு கிலோ 500 ரூபா), மீன் (சிறிது ஒரு கிலோ 250 ரூபா), இறால் (ஒரு கிலோ 600 ரூபா), நண்டு (ஒரு கிலோ 650 ரூபா), கணவாய் (ஒரு கிலோ 500 ரூபா) என விற்பனை செய்யப்பட்டன. (த-17)

## ஆவரங்காலில் சிறுவர் பூங்கா

யாழ்ப்பாணம், மார்ச் 20

வலி.கிழக்குப் பிரதேச சபை ஆவரங்காலில் சிறுவர் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகச் சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

இந்தச் சிறுவர் பூங்கா ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு அருகில் அமைக்கப்படவுள்ளது.

இந்தச் சிறுவர் பூங்காவை அமைப்பதற்கான காணியை ஆலய நிர்வாகம் சபைக்கு தந்துதவுவதற்கு முன் வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனை அடுத்து அந்தக் காணியில் நவீனமுறையில் சிறுவர் பூங்காவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இந்தச் சிறுவர் பூங்கா அமையவுள்ள பகுதியில் கால்நடைகளின் குடிதண்ணீர்க் கேணி ஒன்றும் உள்ளது.

இந்தக் கேணியை புனரமைப்பதா? அல்லது மூடுவதா? என்பது பற்றி சபை விரைவில் கூடித் தீர்மானிக்கும் என்றார் தலைவர். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி ஆவணங்கள் தயாரிப்பதற்கு இன்னும் பலவருடங்கள் எடுக்கும்

## சூரியபுரத்தில் மீள்குடியமர்த்துகை அமைச்சர் தெரிவிப்பு

புதுக்குடியிருப்பு,மார்ச்20

விடுதலைப் புலிகளின் பயன்பாட்டில் இருந்த இடங்கள் தொடர்பான தகவல்கள் தெரிய வராததால் காணிகளுக்குரிய ஆவணங்கள் தயாரிப்பதற்கு பல வருடங்கள் எடுக்கும் என மீள்குடியமர்ந்துகை அமைச்சர் தெரிவித்தார்.

சூரியபுரம் பகுதியில் தங்கவைக்கப்பட்ட மக்களுக்கென அமைக்கப்பட்ட 50 நிரந்தர வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதன் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இப்பகுதியில் காணப்படும் காணிப் பிரச்சினைகளுக்கு 10 வருடங்கள் கடந்தாலும் தீர்வைப் பெற்றுக் கொடுக்கமுடியாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வடக்கில் அரசினால் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள இழப்பீடுகள் மற்றும் மாற்றுக்காணிகள் பெறுவதை மக்கள் தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றனர். இதனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பெரும் சிக்கல் நிலை காணப்படுகிறது.

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் மாற்றுக்காணிகளுக்குப் பதிலாக தமது சொந்தக் காணிகளையே வழங்குமாறு கோரி வருகின்றனர். இதனை உடனடியாக மேற்கொள்ள முடியாது.

இப்பகுதியில் காணப்படும் காணிப் பிரச்சினைகளுக்கு 10 வருடங்கள் கடந்தாலும் தீர்வைப் பெற்றுக் கொடுக்கமுடியாது -எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை சூரியபுரம் பகுதியில் மேலும் 150 நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் அமைச்சரால் நட்டு வைக்கப்பட்டது.

(க-400)

# காணிக் கச்சேரி நடந்த போதிலும் காணிக்குரிய ஆவணங்கள் இல்லை

## வவுனியா கிராம மக்கள் விசனம்

நெளுக்குளம்,மார்ச் 20

மூன்று தடவைகளுக்கும் மேலாக காணிக் கச்சேரி நடத்தப்பட்ட போதிலும் தமக்கு காணி தொடர்பான ஆவணங்கள் வழங்கப்படவில்லையென வவுனியாவிலுள்ள கிராம மக்கள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

நொச்சிமோட்டை, கொக்குவெளி, பேயாடிகூளாங்குளம், மாணிக்கவளவு, சாந்தாசோலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே, அதிகாரிகள் தமக்கு காணி அனுமதிப்பத்திரம், காணி உறுதி என்பன வழங்காது நீண்ட காலமாக ஏமாற்றி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நொச்சிமோட்டைப் பாடசாலையில் காணிக் கச்சேரி இடம்பெற்றபோது அங்கு சமுகமளித்திருந்த மக்கள் மேற்கண்டவாறு தமது உள்ளக் குமுறலை வெளியிட்டனர்.

1972 ஆம் ஆண்டில் தாம் இந்தப் பகுதியில் குடியமர்த்தப்பட்டதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

முன்னர் ஒரு ஏக்கர் காணி வழங்கப்படுமெனக் கூறிய அதிகாரிகள் தற்போது அரை ஏக்கர் காணியே வழங்கப்படும் எனக் கூறியதால் இந்த மக்கள் ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. (க-402)

# நானாட்டான் கிராமங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு

மன்னார், மார்ச் 20

மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு தற்போது மூன்றாம் கட்ட சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக நானாட்டான் பிரதேச செயலர் அகஸ்ரஸ் சந்திரையா தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 31 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 140 குடும்பங்கள் சமுர்த்திக் கொடுப்பனவுகளுக்கு உள்வாங்கப்பட்டுள்ளன.

இதற்கென வகுக்கப்பட்ட வலயம் 1 இல் 15 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும், வலயம் 2 இல் 16 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

குறித்த கொடுப்பனவானது குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக வழங்கப்பட்டு வருகின்றது.

ஒன்று தொடக்கம் இரண்டு வரையான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 750 ரூபாவும், மூன்று தொடக்கம் ஐந்து வரையான உறுப்பினர்களைக்கொண்ட குடும்பங்களுக்கு 1000 ரூபாவும், ஆறுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 1500 ரூபாவும் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு மாதமும் சமுர்த்திக் கொடுப்பனவுக்காகச் சுமார் இரண்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் நானாட்டான் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (க-12)

# அரச சாராயத்தை விற்றவருக்கு தண்டமும் கட்டாய சேவையும்

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயத்தை விற்றவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டதுடன் ஒருமாத காலம் நீதிமன்றில் சேவையாற்ற வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் கடந்த 14 ஆம் திகதி 180 மில்லி லீற்றர் சாராயத்தைப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு விற்பனை செய்தமை தொடர்பாகவும், 540 மில்லி லீற்றர் சாராயத்தைத் தம்முடன் வைத்திருந்தார் எனவும் குற்றம் சாட்டப்பட்டு குறித்த நபர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.


இவர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்த நபர் மீண்டும் இந்தக் குற்றத்தைப் புரிந்தமையால் தண்டத்தைச் செலுத்துவதுடன் வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரையும் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் ஒருமாத காலம் நீதிமன்ற வளாகத்தில் சேவையாற்ற வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

(க-6)

# மரண அறிவித்தல்

## ஜெகதீஸ்வரன் சுதாங்கனி



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரன் சுதாங்கனி நேற்றுமுன்தினம் (18.03.2013) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தம்பிராசா - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும் ஜெகதீஸ்வரனின் அன்பு மனைவியும் சந்தோஷின் அன்புத் தாயும் அகிலேஸ்வரன் (கனடா), தயானி, பவானி (சுவிஸ்), சித்திரா (பெல்ஜியம்), மீரா, பிரதீபன் (சுவிஸ்), தர்சினி, தாரணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரன் (சுவிஸ்), சுஜாதா (கனடா), மதியாவரன் (ஜேர்மனி), பரந்தாமன் (பெல்ஜியம்), மதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2013) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
மானிப்பாய் வீதி.
(சந்திரோதயம் பாடசாலை அருகில்)

(35443)(-23-6-16)

தகவல்:
தம்பிராசா
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா கந்தையா



கோயிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் மருதனார் மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா கந்தையா 16.03.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் கந்தையாவின் அன்பு மனைவியும் பாலச்சந்திரன், வசந்தாதேவி, இராமச்சந்திரன் (ஜேர்மனி), இராசேந்திரன் (பலநோ. கூ.ச., கைதடி), ஞானச்சந்திரன் (லண்டன்), வசந்தராணி (லண்டன்), வசந்தகுமாரி (ஆசிரியை, யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), பிறேமச்சந்திரன் (லண்டன்), வசந்தமலர் (பிரான்ஸ்), வசந்தமாலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் உருத்திராதேவி, புஸ்பராணி, ஈஸ்வரி, பரமேஸ்வரன், ஆனந்தநடராசா (பிரதி அதிபர், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), இன்பராணி, தவராசா, வரதராசா, காலஞ்சென்றவர்களான செல்வராசா, பாலாம்பிகை ஆகியோரின் மாமியும் நிதர்சன், சுதர்சன், நிவேதா, சன்சயன், கோமதன், கோகிலன், நிருஜா, சர்மிதா, சௌமியா, ரஜீதன், கபிசன், திருஷிகன், திருஷிகா, தவசியா, தனேஷ், தர்சிகா, சரன், சன்சய், சதுஷ், சாலினி ஆகியோரின் பேர்த்தியும் திசானியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2013) புதன்கிழமை பி.ப. 12.30 மணியளவில் மருதனார்மட இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
மருதனார்மடம், சுன்னாகம்.
0777699991, 0212241634

(35448-23-6-16)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் மட்டும் 610 வீடுகள் நிர்மாணிக்க 211 மில். நிதி

## வீடமைப்பு அதிகாரசபை ஒதுக்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்.மாவட்டத்தில் மட்டும் இந்த வருடம் 610 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 211 மில்லியன் ரூபா தேசிய வீடமைப்பு அதிகார சபையால் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த ஆண்டு 786 வீடுகள் நிர்மாண்ணிப்பதற்கு 180.21 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் யாழ்.மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர வருமானம் இல்லாதவர்களுக்கு வீடமைப்புக்கான கடன் திட்டத்தின் ஊடாக 2012 ஆண்டு 43.96 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 96 புதிய வீடுகளை நிர்மாணிக்க 17.14 மில்லியன் ரூபாவும், 293 வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 26.82 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் 100 வீடுகளை நிர்மாணிப்பதற்கு 30 மில்லியன் ரூபாவும், 200 வீடுகளைப் புனரமைப்பதற்கு 40 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிரந்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புக்கான கடன் திட்டத்தின் ஊடாக 2012 ஆம் ஆண்டு 117.17 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 139 வீடுகள் நிர்மாணிக்க 64.35 மில்லியன் ரூபாவும், 160 வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 52.82 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் 200 வீடுகள் நிர்மாணிப்பதற்கு 100 மில்லியன் ரூபாவும், 100 வீடுகள் புனரமைப்பதற்கு 40 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சால் 0.1 மில்லியன் ரூபா நன்கொடையாகவும், தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 0.2 மில்லியன் ரூபா நன்கொடைக் கடனாகவும் வழங்கி முன்னெடுக்கப்படும் திட்டம் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

இதில் 63 வீடுகளை நிர்மாணிப்பதற்கு 12.38 மில்லியன் ரூபாவும், 34 வீடுகள் புனரமைக்க 6.6 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நன்கொடை வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டு 0.1 மில்லியன் ரூபா நிதி ஒரு வீட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 10 பேருக்கு குறித்த திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படவுள்ளதாக மாவட்டச் செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 216 பேருக்கு தொழில் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 216 பேருக்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பங்களிப்புடன் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சால் மேற்படி உபகரணங்கள் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் இடம் பெற்றது.

இதில் பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் , யாழ் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் உட்படப் பலரும் கலந்து கொண்டு உபகரணப் பொருள்களை வழங்கினர்.

தேசிய அருங்கலைகள் பேரவையின் கீழ் பயிற்சி பெற்ற 50 பேருக்கும், பனை அபிவிருத்திச் சபையின் கீழ் பயிற்சி பெற்ற 60 பேருக்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் பயிற்சி பெற்ற 106 பேருக்குமாக 216 பயனாளிகளுக்கு உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு பயனாளிக்கும் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழிற்துறை உபகரணங்கள் வழங்கப்பட்டன. (வ-400)

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவுக்கு தனி விடுதி

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் பற் சிகிச்சைப் பிரிவுக் கென தனியான விடுதி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு மேலும் ஒரு பல் வைத்திய நிபுணர் நேற்று முன்தினம் முதல் இடமாற்றமாகி வந்து கடமையேற்றுள்ளதால் பல் தொடர்பான சிறு சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு வசதியாக தற்போது ஆறாம் இலக்க விடுதியின் ஒரு பகுதியில் 5 கட்டில்கள் கொண்ட பற்சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை பல் தொடர்பான அனைத்துச் சிகிச்சைகளும் வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் அதற்குத் தேவையான அனைத்துக் கருவிகளும் வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது. (வ-9)

## மாலிசந்தி - அல்வாய் பிரதான வீதியை அகலித்து புனரமைக்குக

உடுப்பிட்டி- மாலிசந்தி - அல்வாய் பிரதான வீதியை அகலித்து புனரமைக்க வேண்டும் என்று கரவெட்டிப் பிரதேச சபை ஆளும் தரப்பு உறுப்பினர் பொ.குகதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோதே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பிட்ட வீதியை அகலமாக்கி திருத்தி அமைத்தால் நெல்லியடி நகரப் பகுதியில் மூன்றில் இரண்டு வீதம் போக்குவரத்து நெருக்கடி குறையும்.

நகரப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் பருத்தித் துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்வோரும் நெல்லியடி வடக்குப் பிரதேசத்தில் வாழ்வோரும் உடுப்பிட்டி - மாலி சந்தி - அல்வாய் சந்தியைப் பயன்படுத்த முன்வருவர். அதற்கேற்றவாறு அல்வாய் வீதி அகலப்படுத்தப்பட்டு திருத்தியமைக்கப்பட வேண்டும் - என்றார். (வ-8)

## முற்றவெளி தனியார் பஸ் நிலையம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்.முற்றவெளியில் உள்ள தனியார் பஸ் தரிப்பு வளாகம் மாநகராட்சி மன்ற அனுமதியுடன் புனரமைக்கப் படவுள்ளது.

வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் பஸ்களும் தற்போது மின்சார நிலைய வீதியில் தற்காலிகமாக தரித்து நின்று சேவையில் ஈடுபடுகின்றன. (வ-17)





மேலதிக விபரங்களுக்கு www.cse.lk யைப் பாருங்கள் அல்லது அழையுங்கள் 021-2221455/0777-822014

CSE COLOMBO STOCK EXCHANGE



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

(சமாதான நீதிவான்)




**இம்மானுவேல் யோசேப்ஸ்ராலின்**

முல்லை மாவட்ட சி.க.கூ.ச. சமாச மாவட்டச் செயலாளராக இருந்து அளப்பெரும் சேவையை ஆற்றி மக்களினதும் அரச அதிகாரிகளினதும் மனங்களில் இடம் பிடித்து சமாதான நீதிவானாக 2013.01.12 அன்று நீதி அமைச்சர் அவர்களினால் நியமனம் செய்யப்பட்டு 2013.03.15 அன்று வவுனியா மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான்முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட **இம்மானுவேல் யோசேப்ஸ்ராலின்** அவர்கள் மக்களின் மகத்தான சேவைக்காக இன்னும் அதிகமாக சேவையாற்றி நீண்ட ஆயுளுடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி நிற்கின்றோம்.


**(வாழ்க வளர்க சேவை சிறக்க வாழ்த்துகின்றோம்)**

**பணிப்பாளர்கள் /பணியாளர்கள்**
**அங்கத்துவ சிக்கனக்கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்கள்**
**முல்லை மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்**
**வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.**

(சி/7144)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றுக்குள் பாய்ந்தது பஸ்
## 37 பயணிகள் அநியாய சாவு



மும்பை, மார்ச் 20

கோவாவில் இருந்து மும்பைக்குப் பயணித்துக்கொண்டிருந்த பஸ் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள ஆறு ஒன்றுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது. அந்த விபத்தில் 37 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர்.

குறித்த பஸ் நேற்று அதிகாலை 3.30 மணிக்கு மகாராஷ்டிரா மாநிலம் ரத்னகிரி மாவட்டத்தில் உள்ள கேத் சந்திப்பு அருகே உள்ள ஜக்புதி பாலத்தில் சென்றுகொண்டிருந்தது. அப்போது பஸ் நிலை தடுமாறி பாலத்தில் இருந்து ஜக்புதி ஆற்றுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

அந்த விபத்தில் 37 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள கேத் பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். காயம் அடைந்தவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. மீட்புப்பணி முடிவடைந்து விட்டதாகவும், அந்த வழியில் போக்குவரத்து சீர் செய்யப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த பஸ் சாரதி மது போதையில் பஸ் செலுத்தினாரா என்பதை அறிய அவர் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ)

## 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பில்
# ராசாவின் நடவடிக்கைகளுக்கு மன்மோகன் சம்மதிக்கவில்லை

### பிரதமர் அலுவலகம் விளக்கம்



டில்லி, மார்ச் 20

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டின்போது அப்போது மத்திய அமைச்சராக இருந்த ஆர். ராசாவின் நடவடிக்கைகளுக்கு பிரதமர் அலுவலகமோ அல்லது பிரதமரோ ஒப்புதல் அளித்ததாக வெளியாகும் செய்திகளில் எந்த வித உண்மையும் இல்லை என்று பிரதமர் அலுவலகம் விளக்கம் அளித்துள்ளது.

2ஜி விவகாரத்தில் முறைகேடு இடம்பெறுவதற்கு முன் அப்போதைய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசாவின் சில தவறான முடிவுகளுக்கு பிரதமரும் பிரதமர் அலுவ லகமும் அனுமதி தந்துள்ள விவரம் தற்போது வெளியாகி வருகிறது. இது தொடர்பாக இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆங் கிலப் பத்திரிகையான 'ஹிந்து நாளிதழ்' பரபரப்பான விவரங்களை பிரதமர் அலுவலக பைல்களின் பிரதிகளையே ஆதாரமாக வைத்து வெளியிட்டு வருகிறது.

இந்தநிலையில் இதை மறுத்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டின் போது ராசாவின் நடவடிக்கைகளுக்கு பிரத மரும் அல்லது அவரின் அலுவலகமும் ஒப்புதல் அளித் ததாக தகவல்கள் வெளியா கியுள்ளன. இவை முற்றிலும் தவறானவை. ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட காலத்தில் ஏற்கனவே செயற்பட்டு வந்த தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கும் புதிதாக நுழைந்த நிறு வனங்களுக்கும் இடையே மோதல்கள் இருந்தன.

அதனால் இந்த விவகாரம் குறித்து தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் இதர சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஆலோசனை நடத்தி அதன் அடிப்படையில் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகம் முடிவெடுக்க வேண்டும் என்று பிரதமர் விரும்பினார்.

அந்த ஆலோசனைகள் முடிவடையும்வரை தன் தரப்பில் கருத்து வெளியிடுவது சரியாக இருக்காது என்றும் பிரதமர் நினைத்தார். அதனால் ராசா எடுத்த முடிவுகளை அவர் மீண்டும் தொலைத் தொடர்புத் துறையின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்தார். அவ்வாறு அனுப்பும்போது பிரதமர் எழுதிய குறிப்புகளை ஸ்பெக்ட்ரம் அனுமதிப் பத்திரங்களை மற்றும் கட்டணங்களுக்கு அவர் ஒப்புதல் அளித்ததாக எடுத்துக் கொள்ள முடியாது.

இந்த விளக்கத்துக்குப் பின்னரும் பிரதமர் அலுவலகம் மீதும் பிரதமர் மீதும் குறை கூறுவது சரியானதல்ல - என்றுள்ளது. (வ)

## கேரள மீனவர் 60 பேர் தூத்துக்குடியில் சிறைபிடிப்பு

தூத்துக்குடி, மார்ச் 20

தூத்துக்குடி கடல் பகுதி யில் மீன் பிடித்த குமரி, கேரளா பகுதி மீனவர்கள் 60 பேரை தூத்துக்குடி மீனவர் கள் சிறைபிடித்தனர்.

தூத்துக்குடி மாவட் டத்தில் விசைப்படகுகளில் சென்று கடலில் இரவு நேரத்தில் தங்கி மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் ஏனைய பகுதிகள் மற்றும் கேரளா ஆகிய இடங்களிலிருந்து கடலில் இரவு நேரங் களில் தங்கி மீன் பிடிப்பதற்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. இதனால், தூத்துக்குடி மாவட்ட கடல் பகுதியில் கேரளா உள்ளிட்ட பகுதி மீனவர்கள் மீன்களை அடியோடு வாரிச் செல்வதாக தூத்துக்குடி மீன வர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இதுகுறித்து நடவ டிக்கை எடுக்க வேண்டும் என விசைப் படகு மீனவர்கள், தொழிலாளர்கள், உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்து காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். (வ)

## ஹெலி ஊழல் தொடர்பில் 4 நாடுகளுக்கு சி.பி.ஐ. கடிதம்

### நீதிமன்றம் மூலம்

டில்லி, மார்ச் 20

ஹெலிகொப்டர் ஒப்பந்தத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக 4 நாடு களுக்கு நீதிமன்றம் மூலம் கோரிக்கைக் கடிதம் அனுப்ப மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ)முடிவு செய்துள்ளது.

ஹெலிகொப்டர் வாங்க இத்தாலியைச் சேர்ந்த அகஸ்டா-வெஸ்ட்லேண்ட் நிறுவனத்திடம் ரூ.3600 கோடிக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அதில் ரூ.360 கோடி அளவுக்கு ஊழல் நடைபெற்றதாக முறைப்பாடுகள் எழுந்தன. இதுதொடர்பாக விமானப்படை முன்னாள் தளபதி எஸ்.பி. தியாகி, உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.


"நட்ட ஈட்டுக் கொடுப்பனவு"-படிவங்களைப் பூர்த்தி செய்ய....

அரச ஊழியர் நட்ட ஈட்டுக் கொடுப்பனவு மற்றும் சாதாரண பொது மக்கள் நட்ட ஈட்டுக் கொடுப்பனவு படிவங்களை, பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் வாய்ந்தவர்களால் சிறந்த முறையில் துறைசார்ந்தவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பூர்த்திசெய்து பெற்றுக் கொள்ள, கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,
றொட்சன் கொம்பியூட்டர் சென்ரர்,
(கிளி/ மத்திய கல்லூரிக்கு முன்பாக)
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

தொ.பே இல:
077 571 2883,
(24300) (6.7.11) 021 568 2951


## ஈழத்தமிழருக்கு ஆதரவாக கோயம்பேட்டில் வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை, மார்ச்.20

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நேற்று கோயம்பேட்டில் 6 ஆயிரம் கடைகளை அடைத்து வர்த்தகர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் போர்க் குற்றம் புரிந்த ஜனாதிபதி ராஜபக்ஷவைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் போராட்டம் தீவிரம் அடைந்து வருகிறது. அரசியல் கட்சிகள் மட்டுமின்றி மாணவர் சமுதாயத்தினர், தமிழ் உணர்வு ஆர்வலர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த போராட்டத்தில் தற்போது வர்த்தகர்களும் இறங்கி உள்ளனர். சென்னை கோயம்பேடு சந்தையில் உள்ள வியாபாரிகள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நேற்று கடை [illegible] போராட்டம் நடத்துவதாக தெரிவித்திருந்தனர்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் மேலதிக மாவட்ட நீதிபதியும் யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவானுமாகிய கௌரவ **பெருமாள் சிவகுமார்** அவர்களின் அன்புத் தாயார் **பெருமாள் தர்மாத்தா** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*" நீதிக்காய் ஒரு தனயனை ஈன்று*
*நீதியை இந்த மண்ணில் நிலைபெறச் செய்து சென்ற*
*காவிய நாயகியின் மறை காவியத்தை எண்ணி*
*மனம் கலங்கி நிற்கும் உறவுகளுக்கு எமது*
*கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.*

மாவட்ட நீதிபதியும்,
பதிவாளரும், உத்தியோகத்தர்களும்,
மாவட்ட நீதிவான் நீதிமன்றம்,
கிளிநொச்சி.

(26251)(45.6.7)

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் தில்லைநாதன்

(முன்னாள் சாரதி, காணி அலுவலகம், கிளிநொச்சி)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது கந்தபுரம், வவுனியாவில் வசித்தவருமாகிய சிற்றம்பலம் தில்லைநாதன் 17.03.2013 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சிற்றம்பலம் -இளைய பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், கமலாம்பிகை, காலஞ் சென்ற குகானந்தராசா மற்றும் அமிர்தவல்லி, மகேந்திரராசா, காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் யோகேஸ்வரி, மங்களேஸ்வரி, நிரஞ்சனா ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, தர்மலிங்கம், பூபதி,செல்லம்மா, திருநாவுக்கரசு, இலட்சுமி மற்றும் திருநீல கண்டன், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் ஞானதேவி ஆகியோரின் சகோதரரும், பரராசசிங்கம், மலர், விமலா, சுபா, கனகலிங்கம், தியாகராசா, விமலநாதன், குகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மார்க்கண்டு, நடராசா, காலஞ் சென்றவர்களான கணேசு, குணரட்ணம், துரைசிங்கம், வல்லிபுரம் மற்றும் ஐயாத்துரை ஆகியோரின் மைத்துனரும், கலைச்செல்வி,- புஸ்பகாந்தன், நிசாந்தன், சசிகரன், பிரதீபன், பகீரதன், நிலானி, தினேஸ், நிவேதன், மயூரி, நிர்மதா, கோமிகா, டிலக்சன், சலோஜன்,சதுர்சா, சிந்திஜா, சுவேதா,சுஜந்தன், லாவண்யா, டிசாந்தன், கிருஷாந்தன் ஆகியோரின் பேரனும், சயந்தன், அஜந்தன், ஜோகிதா, சரண்யா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2013) புதன்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது மருமகன் க.கனகலிங்கம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தபுரம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

(24299)(67.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீனவர் மீதான துப்பாக்கிச் சூடு

# பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதே சிறந்த வழி

### ஐரோப்பிய யூனியன் வலியுறுத்துகிறது

புரூஸ்செல்ஸ், மார்ச் 20

இந்திய மீனவர் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக இத்தாலி மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அவதானித்து வருகின்றோம்.- என்று ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

இந்திய நீதிமன்றத்தில் பிணை பெற்று இத்தாலி சென்ற இத்தாலி கடற்படை வீரர்கள் இருவரும் இந்தியா திரும்பவில்லை. அதையடுத்து இருநாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், பிரச்சினையை இருநாடுகளும் பேச்சு மூலம் தீர்க்க முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஐரோப்பிய யூனியன், இது குறித்து அவதானிக்கப்பட்டு வருவதாக ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐரோப்பிய யூனியனின் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் பேட்டி குறிப்பிடுகையில், இந்தியாவுக்கும், இத்தாலிக்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்து ஐரோப்பிய யூனியன் அவதானம் செலுத்தி வருகிறது. இந்த விடயத்தில் இருநாடுகளும் பேச்சுக்கள் நடத்தி தீர்வு காண வேண்டும் என்பதே ஐரோப்பிய யூனியனின் விருப்பமாக உள்ளது.- என்று தெரிவித்தார். (ற)

# ஹெலியில் தப்பிய சிறைக் கைதிகள்

### கனடாவில் துணிகரம்

ரொறன்றோ, மார்ச் 20

சிறையில் இருந்து இரண்டு கைதிகள் ஹெலிகொப்டர் மூலம் பட்டப்பகலில் தப்பியோடியுள்ளனர். இந்த துணிகர சம்பவம் கனடாவில் இடம்பெற்றுள்ளது.

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் உள்ள நகரம் மாண்ட்ரீல். இங்கிருந்து 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செயின்ட் ஜெரோம் பகுதியில் உள்ள சிறையில் 480 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் சிறைப் பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்று திடீரென பறந்து வந்தது. ஹெலிகொப்டரில் இருந்தவர்கள் கயிறு ஒன்றை கீழே போட்டனர். உடனே சிறையில் இருந்த 2 கைதிகள் கயிறு மூலம் ஹெலிகொப்டரில் ஏறித் தப்பினர்.

பட்டப்பகலில் பலர் முன்னிலையில் கைதிகள் தப்பி சென்றதை பார்த்து காவலர்களும் அதிகாரிகளும் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக ஹெலியைத் தேடும் பணியில் ஈடுபட்டது கனடா பொலிஸ் படை. சிறையில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் ஹெலிகொப்டரைக் கண்டுபிடித்தனர் பொலிஸார். ஹெலியின் விமானியும், தப்பியோடிய கைதி ஒருவரும் கைது செய்யப்பட்டனர். மற்றொருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (ற)

# பிரேஸிலில் மண் சரிவு 10 பேர் உயிரிழப்பு

பிரேஸில், மார்ச் 20

பிரேஸிலில் ரியோ டி ஜெனய்ரோவில் உள்ள மலைப் பகுதியில் இடம்பெற்ற மண் சரிவில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடுமையாகப் பெய்து வரும் மழை காரணமாக பெட்ரோபொலிஸ் குளம் பெருக்கெடுத்து ஓடியதாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மண்சரிவில் புதையுண்டவர்களை காப்பற்ற முயற்சித்த மீட்புப் பணியாளர்கள் சிலரும் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

சீரற்ற காலநிலை காரணமாக குறித்த பிரதேசத்தின் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறும் பிரேஸில் அரசு எச்சரித்துள்ளது.

2011ஆம் ஆண்டில் பெட்ரோபொலிஸில் இடம்பெற்ற மண் சரிவில் 900 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



எகிப்து ஜனாதிபதி முகமட் மூர்சி எகிப்தின் தெற்குப் பகுதிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு மூர்சியின் வருகையை எதிர்த்துப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டங்களின்போது ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் பொலிஸாரின் வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

### அமைதியை ஏற்படுத்தும் முயற்சியாக

# தலிபான்களுடன் பேசும் ஆப்கன் எதிர்க்கட்சிகள்

காபூல், மார்ச்.20

ஆப்கனில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியாக தலிபான்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாக ஆப்கன் எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர். ஆப்கன் ஜனாதிபதிக்கு எதிராகத் ஒன்றிணைந்துள்ள எதிர்க்கட்சிகளே இந்த முயற்சியில் இறங்கியுள்ளன.

12 ஆண்டுகளாக ஆப்கனில் இடம்பெற்றுவரும் மோதல்களைத் தணிக்கும் ஒரு முயற்சியாகவே தாம் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளபோதும், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை இலக்கு வைத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் பேச்சுக்கான முன்னெடுப்புகளைக் கண்டித்துள்ள ஆப்கன் ஜனாதிபதி கர்சாய், எவ்வாறான பேச்சுகள் இடம்பெற்றாலும் அது அரசின் ஊடாகவே நடைபெறவேண்டும் என்று தெரிவித்துள்ளார். எனினும் ஜனாதிபதி வெளிநாடுகளின் கைப்பாவையாகச் செயற்படுகிறார் என்று தெரிவித்துள்ள தலிபான்கள் அமைப்பு, அரசுடன் எத்தவிதமான பேச்சுக்களையும் நடத்த முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

முன்னாதாக இந்த ஆண்டு ஆரம்பத்தில் உள்நாட்டுப் போருக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக தனது அரசு, அமெரிக்கா, தலிபான் ஆகியவை முத்தரப்புப் பேச்சுக்களை நடத்தியதாக கர்சாய் தெரிவித்திருந்தார். எனினும் அதை அமெரிக்காவும், தலிபான்களும் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# அரசியலில் ஈடுபடுவதற்கு சர்தாரிக்கு தடை விதிப்பு



இஸ்லாமாபாத், மார்ச் 20

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி எதிர்வரும் 29ஆம் திகதி வரை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு லாகூர் உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

பாகிஸ்தான் அரசியல் சட்டப்படி ஜனாதிபதியாகப் பதவி வகிப்பவர் அரசியல் மற்றும் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. எனினும் சர்தாரி கட்சிப் பணிகளில் ஈடுபட்டதை அடுத்து அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அதையடுத்தே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் பின்னர் எதிர்வரும் 30ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைப்பதாக அறிவித்த நீதிமன்றம், எதிர்வரும் 29 ஆம் திகதி வரை சர்தாரி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து உத்தரவிட்ட லாகூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, ''வழக்கில் அடுத்த விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. அதனால் 29 ஆம் திகதி வரையில் சர்தாரி எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது. நீதிமன்ற உத்தரவுக்கு ஜனாதிபதி பணிந்து நடக்க வேண்டும்''- என்று குறிப்பிட்டார். (ற)

# வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர பிரிக்ஸ் நாடுகளின் ஒத்துழைப்புத் தேவை

### சிரிய ஜனாதிபதி அசாத் கோரிக்கை

டமாஸ்கஸ், மார்ச் 20

சிரியாவில் இடம்பெறும் வன்முறைகளை நிறுத்த பிரிக்ஸ் நாடுகள் ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத்.

எதிர்வரும் 26 ஆம் திகதி பிரிக்ஸ் மாநாடு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள நிலையிலேயே சிரிய ஜனாதிபதி இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சிரிய ஜனாதிபதியின் ஆலோசகர் பொதைனா ஷாபான் இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதத்தை தென்னாபிரிக்க ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளார்,

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பொதைனா ஷாபான்,

''சிரிய ஜனாதிபதி அசாத் சார்பாக சிரியாவில் நிலவும் சூழ்நிலை குறித்த ஒரு கடிதத்தை தென்னாபிரிக்க ஜனாதிபதியிடம் வழங்கியுள்ளேன். அந்த கடிதத்தில் அசாத் சிரியாவில் நடைபெற்று வரும் வன்முறைகளை நிறுத்த பிரிக்ஸ் நாடுகளின் உதவியைக் கோரியுள்ளார்.

சிரிய அரசு பேச்சுக்கள் மூலம் தீர்வு காணத் தயாராக உள்ளது. பிரிக்ஸ் நாடுகள் இருதரப்பும் பேச்சுக்களை நடத்துவதற்கு உதவ வேண்டும்.''- என்றார்.



எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில், அந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற)



# 'ரிக்ஷோ' திருடினார்களாம் இருவர்அடித்துக் கொலை

### எகிப்தில் கொடூரம்

கெய்ரோ, மார்ச் 20

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'ரிக்ஷோ' வண்டியைத் திருட முற்பட்டார்கள் என்று கூறி இருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்களால் பிடிக்கப்பட்ட இருவரும் பொது மக்களால் தாக்கப்பட்டு நகர [illegible] ஆயிரக்கணக்கான மக்கள் கூடி பிடிபட்டவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்க மறுத்தனர். அதனால் அவர்கள் இருவரும் சிகிச்சையளிக்கப்படாது உயிரிழந்தனர்என்று கூறப்படுகிறது. எகிப்தில் தற்போது பாதுகாப்புத்துறை செயலற்ற [illegible] எதிர்க் [illegible] சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# நீதிமன்றில் குண்டுவெடிப்பு

### பாகிஸ்தானில் 4 பேர் சாவு

இஸ்லாமாபாத், மார்ச்.20

பாகிஸ்தானில் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 4பேர் உயிரிழந்தனர். 47 பேர் காயமடைந்தனர்.

சிறையில் உள்ள தமது குழுவினரை விடுவிக்கும் நோக்குடனேயே குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

காயமடைந்தவர்களில் ஒருவர் பெண் நீதிபதி என்று தெரிவித்துள்ள பாகிஸ்தான் பொலிஸார், காயமடைந்தவர்களில் 20 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்கள் என்றும் தெரிவித்தனர்.

இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் மேலும் கூறப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

# நீங்கள் அன்பின் உருவமான தாயா?

**உங்கள் சமூகத்தின் குழந்தைகளுக்கு தாயாகும் தயாளகுணம் உங்களுக்கு உண்டா?**
**உங்களது தாய்மை பண்பை எமது சிறுவர்களோடு பகிர்ந்து கொள்ளும் விருப்பு உண்டாயின்...**

## எஸ்.ஓ.எஸ் தாயாகும் அரிய வாய்ப்பு



தாய்மை என்ற குணம் தன் கருவில் சுமந்த குழந்தைகளுக்கு மட்டுமன்றி அன்பு நாடும் அனைவர்மீதும் கருணை காட்டும்.
எமது சிறுவர்கள் பல்வேறுசமூக, அரசியல் காரணங்களினால் தமது தாய், தந்தையரை இழந்துள்ள நிலையில் தங்கள் தாய்மை அவர்கள் இழப்புகளை ஈடு செய்யும் என்பது திண்ணம்.
"உங்கள் வாழ்வை அர்த்தமாக்கி சிறுவர்கள் வாழ்வையும் அர்த்தமுள்ளதாய் வழி காட்டும் தாயாராகுங்கள்."

**எஸ்.ஓ.எஸ் தாய்**
- ★ வயது: 28-45 க்கு உட்பட்டு நல்ல தேக ஆரோக்கியமும் நற்பண்பும் கொண்டிருத்தல்.
- ★ குடும்பப் பொறுப்புக்கள் அற்று தாய்மையுள்ளம் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

**உங்களுக்கு**
- ★ பிள்ளைகளுடன் வாழ்வை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பம்
- ★ உணவு, வதிவிடம், மருத்துவ பராமரிப்பு
- ★ முதல் மூன்று மாதங்களிற்கு மாதாந்தம் 10,000 ரூபாய்
  நான்காம் மாதத்திலிருந்து பன்னிரண்டாம் மாதங்கள் வரை 11,000 ரூபாய்
  ஒருவருடத்தின் பின் 13,000 ரூபாய்
  இரண்டு வருடங்களின் பின் 19,000 ரூபாய்
  வருடாவருடம் 10 வீத சம்பள அதிகரிப்பு

"வேறெங்கிலுமில்லாதவாறு இரட்டை நன்மையாக ஊழியர் சேமலாபநிதியுடன் வாழ்நாள் ஓய்வூதியமும்"

**"எனக்கு அம்மா எண்டா நிறையப் பிடிக்கும்.**
**ஆனா அம்மா சாமியிட்ட போயிட்டா.**
**அப்பாவும் போயிட்டார்**
**இப்ப எனக்கு அம்மா வேணும்."**

இந்தக் குரலோடு இணைய விரும்பின் உங்களது சுயவிவரக் கோவையினை இந்த விளம்பரம் வெளியாகும் திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**தொடர்புகளுக்கு:**
**எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்,**
**276, கனகரட்ணம் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

077 2366106 / 0212221001
077 2264681
**மின்னஞ்சல்** - arjunan.swaminathan@soscvsrilanka.org
vanitha.senathirajah@soscvsrilanka.org

(35428) (10.6.7)


அரச அலுவலர்களுக்கு எதிரான

## முறைப்பாடுகளை விசாரிக்க செயலகங்களில் தனிப்பிரிவு

திருகோணமலை , மார்ச் 20

நாட்டில் உள்ள மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றிலும் அரச அலுவலர்களுக்கு எதிராக பொது மக்கள் செய்யும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு தனியான பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைப் பிரிவுகளில் நடவடிக்கைகளைத் துரிதமாகச் செயற்படுத்த அண்மையில் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களின் சேவை பெறப்படும் என்று பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றின் சேவைகளில் திருப்தி இல்லாத மக்கள் 1905 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

## ஐ.தே.க வின் பிரதித் தலைவர் தெரிவு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு,மார்ச்20

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் தெரிவு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கட்சியின் செயற்குழு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கூடிய வேளை, பிரதித் தலைவர் குறித்த யோசனை முன்வைக்கப்படவில்லை என்று கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடகங்களிடம் நடந்து கொள்ளும் விதம் குறித்து செயற்குழுக் கூட்டத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது என்று அவர் கூறினார்.

அதற்கமைய ஊடகங்களிடம் நடந்து கொள்ளும் விதம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## கோபுரத்தில் ஏறி ஆர்ப்பாட்டம் செய்தவருக்கு 2 வருடச் சிறை

கொழும்பு,மார்ச்20

**குறிப்பிட்ட நபர் விமானப்படை முகாமுக்குள் எல்லை மீறி நுழைந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கொம்பனித்தெரு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.**

கொழும்பு, கொம்பனித்தெருவிலுள்ள விமானப்படை முகாமுக்கு அருகிலுள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தின் மீதேறி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவருக்கு இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், 2000 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றமே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்த நபர் விமானப்படை முகாமுக்குள் எல்லை மீறி நுழைந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கொம்பனித்தெரு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

தேசிய மாணிக்கக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையால் பொறுப்பேற்கப்பட்ட காணிக்கு நட்டஈடு வழங்கவேண்டும் என்று கோரியே குறித்த நபர் கோபுரத்தின் மீதேறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

இந்த நபர் கதிர்காமத்திலுள்ள கோபுரம் ஒன்றில் இதற்கு முன்னரும் இவ்வாறு ஏறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)


# வீட்டுக்கிருத்திய அழைப்பு




## அமரர் சின்னத்தம்பி வைத்தியநாதன்

கடந்த 18.02.2013 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்
**சின்னத்தம்பி வைத்தியநாதன்** அவர்களின்
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (20.03.2013) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

(35418)(45.6.7)

**குடும்பத்தினர்**
**021 5000 034**



# மரண அறிவித்தல்

## செல்லப்பா வல்லிபுரம்

**(ஆயுள்வேத வைத்தியர்-தங்கபாஸ்கரன் வைத்தியசாலை நல்லூர்-உரும்பிராய்-புங்குடுதீவு)**



இராணி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், இராச வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக கொழும்பில் வசித்தவருமான செல்லப்பா வல்லிபுரம் 16.03.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வ.செல்லப்பா (ஆயுள்வேத வைத்தியர்)-பூரணம் (ஆயுள்வேத வைத்தியர்) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கா.சிவசாமி (ஆயுள்வேத வைத்தியர்)-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் பாஸ்கரன், சுதாகரன், சகீலா, ரோகிணி ஆகியோரின் அன்புத்தந்தையும் விஜயலக்சுமி, அனுசுயா, யோகேந்திரன், கேதீசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சண்முகநாதன் (முன்னாள் வான்படை உத்தியோகத்தர்) மற்றும் இராசலக்சுமி, சுந்தரலிங்கம் (ஆயுள்வேத வைத்தியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோன்மணி(இளைப்பாறிய ஆசிரியை), இராஜேஸ்வரி, அமிர்தலிங்கம், பரராஜசிங்கம் (இ.மி.ச) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிவிதா, பிரநோவன், மிதுனா, சுஜேன், சுவேதா, சஞ்சை, அகீஸ், சுரோமி, பிரவீன், அபிராம், அஸ்வின், அபிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2013) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible], இராச வீதி,**
**நல்லூர்.**

(35410)(6.6.7)

**தகவல்**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களை நரகத்துக்கு இழுக்கிறது அரசு

## போராட வீதிக்கு வருமாறு அழைக்கிறார் ரணில்

கொழும்பு,மார்ச்20

நாட்டையும் மக்களையும் நரகத்துக்கு கொண்டு செல்ல அரசு முயற்சிக்கிறது. அதற்கு அனுமதியளிக்க முடியாது என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

சர்வதேச ரீதியான அழுத்தங்களை எதிர்த்து உள்நாட்டில் போராட்டம் செய்வதில் அர்த்தமில்லை.

இந்த நாட்டையும், மக்களையும் சர்வதேசத்தில் காட்டிக் கொடுத்த இந்த அரசுக்கு எதிராகவே மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்த வேண்டும்.

நாட்டின் பாவ காரியங்கள் சர்வதேசத்துக்கு சொல்ல வேண்டியதில்லை, எனினும் இந்த அரசின் பாவ காரியங்கள் பற்றி பட்டியலிட்டுக் கூறமுடியும். அரசின் பிழைகளால் நாட்டு மக்களே பாதிக்கப்படுகிறார்கள்; பாதிக்கப்படுவார்கள். 2009 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (ச)

# கும்புறுமூளையில் ஆயுதங்கள் மீட்பு

வாழைச்சேனை,மார்ச்20

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புறுமூளை பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆயுதங்களை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து உதவி பொலிஸ் அத்தியட்சகர் லால் செனவிரட்னவின் வழிகாட்டலில் சென்ற குழுவினர் குறித்த இடத்துக்குச் சென்று ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - பொலநறுவை பிரதான வீதியின் கும்புறுமூளை சந்தியிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள காட்டு பகுதிக்குள் இந்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

சக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்றும், மூன்று மிதிவெடிகளும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

**கும்புறுமூளை சந்தியிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலை விலுள்ள காட்டு பகுதிக்குள் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.**

கண்டெடுக்கப்பட்ட ஆயதங்கள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

கட்டுநாயக்கா– களனி

# அதிவேகப் பாதை ஓகஸ்ட்டில் திறப்பு



கொழும்பு,மார்ச் 20

கட்டுநாயக்காவிலிருந்து களனி வரையிலான 26 கிலோமீற்றர் அதிவேகப் பாதை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பொது மக்களின பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது.

291 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகள் கடந்த 2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

மத்திய கிழக்கில் புதுவகை வைரஸ்:

# நாடு திரும்பிய இலங்கையர் உடன் சிகிச்சை பெறவேண்டும்

கொழும்பு,மார்ச் 20

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இலங்கை வந்திருக்கும் எவருக்காவது சுவாசத் தொகுதியோடு தொடர்புடைய நோய்கள் காணப்படுமாயின் அவர்கள் தாமதியாமல் அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சின் நோய் பரவுதல் தடுப்புப் பிரிவின் பிரதம நோய் பரவுதல் தடுப்பு நிபுணர் பபா பலிகவர்தன நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய கிழக்கு நாடுகளில் புதுவகை வைரஸ் ஒன்று இனம் காணப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தாக்கம் கடந்த வருடம் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் இற்றை வரை 14 பேருக்கு மட்டுமே குறித்த வைரஸ் தொற்றியுள்ளது. அவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும் இந்த நோய்க்கு இலங்கையர் எவருமே இன்றுவரை உள்ளாகவில்லை.

இலட்சக்கணக்கான இலங்கையர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிகின்றனர். அதனால் நாம் விழிப்பாக இருப்பது அவசியம்.

இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகின்றவர்களிடம் காய்ச்சல், மூச்செடுப்பதில் சிரமம், இருமல் போன்ற சுவாசத் தொகுதியோடு தொடர்புடைய உபாதைகளை அவதானிக்க முடியும். உரிய சிகிச்சையைப் பெறுவதன் மூலம் இந்த நோயைக் குணப்படுத்திவிடலாம்.

இந்த வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் தும்மும் போதும், இருமும் போதும் வெளியாகும் சளித்துகள்கள் மூலம் குறித்த வைரஸ் வெளிப்பட்டு சுவாசத்தின் மூலம் அடுத்தவர்களுக்கு தொற்றுகிறது.-என்றார். (ச)

# வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார் ஜனாதிபதி மஹிந்த

## சபாநாயகர் சமல் கூறுகிறார்

கொழும்பு,மார்ச்20

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முழுமையாக நிறைவேற்றி வருகிறார் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல்களின் போது பல்வேறு கட்சிகள் பலவித வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்குவது உண்டு. அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையிலேயே மக்கள் தமது வாக்குகளை அளிப்பர். எனினும் அந்த வாக்குறுதிகள் கடந்த காலங்களில் பிரசுரங்களில் மட்டுமே வெளியிடப்பட்டன.

2005 ஆம் ஆண்டு பல வாக்குறுதிகளை மஹிந்த ராஜபக்ஷ மக்களுக்கு வழங்கியிருந்தார் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்.

எதிர்கால சந்ததியின் எதிர்கால எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு தற்போது மேற்கொண்டு வருகின்றது.- என்றார். (ச)


## கண்ணீர் அஞ்சலி



RDC- PRP-NP-02 இல் சிரேஸ்ட
தொழில் நுட்ப உத்தியோகத்தராக
பணியாற்றிய
**J.R. இராஜசேகரம்**
ஐயா அவர்களின் 16.03.2013
அன்று திடீர் மறைவினால்
அதிர்ச்சியுற் றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது நிறுவனத்தின் சார்பாக ஆழ்ந்த
அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியுற பிரார்த்திக்கின்றோம்.
**சக உத்தியோகத்தர்கள்**
**Package 02, Resources Development Consultants. PRP-NP-02, Jaffna.** (35414)(6.7.11)

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் (1Km தூரத்தில்) சகல வசதிகளுடன் கூடிய 3 படுக்கை அறைகளை உடைய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 105 6121
(35413)(5.6.7)

## ஆள்கள் தேவை

கைதடி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புநர் தேவை. 28.03.2013 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
தொடர்பு:021 320 7042 (27897)(6.7.11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
08.04.1934



இறப்பு
20.02.2013

செல்வி
**சூசைப்பிள்ளை அல்பிறட் லூட்ஸ்**
(அன்ரி)

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்.
அன்புத் தந்தையே!
உமது அடியாளுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்:
முடிவில்லா சமாதானத்தில் இவர் இளைப்பாறுவாராக.

நாரந்தனை வடக்கு.
ஊர்காவற்றுறை. (34696)(5.6.7)
உறவினர்கள்.

## கடை வாடகைக்கு/விற்பனைக்கு

நாவலர் வீதியில் இல.:334இல் அமைந்த கடை வாடகைக்கு உண்டு.
பாவித்த பிளாஸ்ரிக் ஸ்ரூள், (f)பான், (f)பிறிச்,கதிரை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 285 0821
(35402)(5.6.7)

## அல்சேஷன் நாய் விற்பனைக்கு

1½ வயது நிரம்பிய அல்சேஷன் ஆண் நாயும் 1½ வயது நிரம்பிய ஜேர்மன் சப்பேட் பெண் நாயும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: A.G செல்வம்,
107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
(34698)(6.7.11)

## காணி விற்பனைக்கு

நல்லூர் சுற்றாடலில்
5பரப்புக் காணி உடன்
விற்பனைக்குண்டு.
நிறுவனங்களும்
விரும்பத்தக்கது.
தொடர்பு: 075 510 9327
(35574)(5.6.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கனகசபை குணரத்தினம்**
(குணம் லோறி)



பிறப்பு:- 24.08.1946
இறப்பு:- 31.03.2012

எம்மைப் பெற்ற தந்தையே!
எம்மை விட்டு ஏன் சென்றீர்?
என்னும் பல காலங்கள் எம்மோடு இருப்பீர்கள்
என்று தானே நாம் இருந்தோம்
கற்பனையில் கூட நாம் நினைக்கவில்லை ஐயா
சட்டென கணப்பொழுதில் எம்மை
விட்டுப் போய்விட்டீர்கள்
இன்றுவரை மனம் நம்ப முடியவில்லை
இன்றுடன் ஓராண்டு கடந்ததென்று ஐயா
உங்கள் நினைவுகள் மட்டுமே கண்ணீர்கள் பூக்கின்றதே.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இல.87, சிவன்பண்ணை றோட்,
யாழ்ப்பாணம். (35409)(2.6.7)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Vavuniya Campus of the University of Jaffna**

Vavuniya Campus of the University of Jaffna will entertain applications from Suitable qualified persons for visiting positions for the under mentioned subjects.

(1) **Faculty of Business Studies**
**Department of Economics & Management**
a. Cost Benefit Analysis
b. Social harmony

**Department of Finance & Accountancy**
a. Managing the financial institution
b. Public Sector Accounting

**English Language Teaching Unit**
a. English Language

(2) **Faculty of Applied Science**
**Department of Bio Science**
a. Solid wastes and hazardous waste management
b. Marine Environment and management
c. Environmental remote Sensing
d. Wild life behaviour, population dynamics and conservation
e. Environmental biotechnology

**Department of Physical Science**
a. Management and Entrepreneurial Skills

Note:(1) Visiting fee is Rs 1,500/= per hour
(2) Required Qualification – A degree of a recognized university with specialization
OR professional qualification of a recognized university in the relevant field / subject with Five years professional experience.
(3) Interested candidates are requested to send their Curriculum Vitae including all relevant Details to the Deputy Registrar Vavuniya Campus, Park Road, Vavuniya.
(4) Closing date - 04/04/2013

Rector,
Vavuniya Campus.
(C/7137)(10,6,7)
TP./Fax No. :0242222265.


# இலங்கையர்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள்

## வெளியுறவு அமைச்சு கோரிக்கை



கொழும்பு,மார்ச்20

தமிழகத்தில் உள்ள இலங்கையர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு வெளிவிவகார அமைச்சு இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழகம் சென்றுள்ள இலங்கையர்களின் பாதுகாப்புக் குறித்து அதிக கவனம் செலுத்துமாறு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்தியத் தூதர் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாதிலக அமுனுகம கூறினார்.

இந்தியாவில் உள்ள இலங்கையர்கள் மற்றும் அங்கு சென்றுள்ள இலங்கை யாத்திரிகர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்தும், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை நிறுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# இலங்கையின் சிவில் சமூகத்துக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும்

## மிச்சல் சீசன் தெரிவிப்பு



கொழும்பு,மார்ச்20

இலங்கையின் சிவில் சமூகத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

60 ஆண்டுகளாக இலங்கை சிவில் சமூகத்துக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதர் மிச்சல் சீசன் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் உலக நாடுகளின் சிவில் சமூகங்களை வலுப்படுத்தும் செயன்முறைக்கு அமெரிக்கா உதவிகளை தொடர்ந்து வழங்கி வருகின்றது என்றும் அவர் கூறினார்.(ச)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் கதிரேசு ஞானநாதன்

(காணி உத்தியோகத்தர் -தம்பலகாமம் பிரதேச செயலகம் திருகோணமலை)



அன்பின் திருவுருவாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் இருப்பிடமாய் விளங்கி
எம்முடன் வாழ்ந்த எம் அருமை அப்பாவே!
தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்

தங்கள் நினைவு எம் உள்ளங்களில்
என்றென்றும் நிலைத்திருக்கும்
தங்களுடன் வாழ்ந்த அந்த இனிய நாள்களை
நினைத்து தங்கள் ஆத்மா இறைவன் திருவடிகளில்
இளைப்பாற ஆண்டவன் அருளை வேண்டுகின்றோம்.

அன்னை மடியில் 01.11.1958
ஆண்டவன் திருவடிகளில் 18,02.2013

கடந்த 18.02.2013 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்தும், தொலைத்தொடர்பு மற்றும் ஊடகங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையம் வைத்தவர்களுக்கும் குறிப்பாக கிழக்கு மாகாண காணி ஆணையாளர், ஏனைய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், தம்பலகாமம் பிரதேச செயலாளர், ஏனைய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உத்தியோகத்தர்கள், செயலாளர் -கூட்டுறவு ஆணைக்குழு-திருகோணமலை, ஏனைய உத்தியோகத்தர்கள், சகல திருகோணமலை மாவட்ட,நகர, பிரதேச சபைத் தலைவர்கள், செயலாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், திருகோணமலை பொது வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்கள், ஏனைய பதவி நிலை உத்தியோகத்தர்கள்,பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளரும், ஏனைய உத்தியோகத்தர்களும்,சேருவில் பிரதேச செயலாளர், ஏனைய உத்தியோகத்தர்கள், ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் ஏனைய உத்தியோகத்தர்கள், திருகோணமலை சென் மேரிஸ் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் ஆகிய அனைவருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி வழங்கியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (20.03.2013) புதன்கிழமை சங்கத்தானையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும் பங்கு பற்றி அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெருங்குளம் சங்கத்தானை வீதி,
சங்கத்தானை,சாவகச்சேரி.

(சி/7131)(5.6.7)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினை குறித்து முஸ்லிம்கள் தற்போது உணர்ந்து கொள்ளும் நிலை

## ஹலால் விவகாரத்தை பூதாகரமாக்கி பொதுபலசேனா ஊழிக் கூத்தாடுகிறது என்கிறார் ஹுசைன் முபாறக்

அம்பாறை , மார்ச் 20

தமிழர் பிரச்சினை இந்த நாட்டில் ஏன் உருவானது என்பதை, முஸ்லிம்கள் உணரும் நிலை இன்று, இனவாத சக்திகளின் செயற்பாடுகளால் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற்சங்கப் பொதுச் செயலர் எம்.ஹுசைன் முபாறக் கூறினார். அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும், மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகவும் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து போராடிவரும் நிலையில் இன்று முஸ்லிம் சமூகம், இனவாதக் கும்பல்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இனவாத, மதவாதவெறி பிடித்த பொதுபலசேனா இன்று முஸ்லிம்களின் மத உரிமைகளில் கூட கை வைத்து வெறியாட்டம் ஆடும் நிலை ஏற்பட்டுள்ளது. ஹலால் விவகாரத்தைப் பூதாகரமாக்கி பொதுபலசேனா ஊழிக் கூத்தாடுகின்றது.

இத்தகைய இனவெறி பிடித்த பொதுபலசேனாவுக்கும் அதற்குத் துணைபோகும் இனவாத சக்திகளுக்கும் பின்னாலிருந்து செயற்படுவது எந்த சக்தியென்பதை நாம் இனம் காணவேண்டும்.

### அரசியல் தலைமைகள் வாய் மூடி மௌனம்

அன்று முஸ்லிம் சமூகத்துக்காக இழைக்கப்படும் அநீதிகளுக்காகக் குரல் கொடுக்கும் நோக்குடனேயே முஸ்லிம் காங்கிரஸை மர்ஹும் அஷ்ரப் உருவாக்கினார்.

ஆனால் முஸ்லிம்களுக்கெதிராக இத்தனை இனவாத வெறியாட்டங்கள் முடுக்கி விடப்பட்டுள்ள போதிலும் எம் அரசியல் தலைமைகள் இன்னும் வாய் மூடி மௌனிகளாக ஓடி ஒளிந்த வண்ணம் உள்ளனர்.

இந்த நாட்டில் இன்று முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை விசனிக்கத்தக்கதாகும். நாட்டில் தமிழர் பிரச்சினை ஏன் உருவானது என்பதை முஸ்லிம்கள் உணரும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

தமிழர்களும், முஸ்லிம்களும் உயிரோட்டமுள்ள சமூகங்களாக வாழ்வதன் மூலமே இன்றைய ஈனத்தனமான சவால்களை எதிர்கொண்டு வெற்றி காணமுடியும்.

அதற்கு தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை மேலும் பலப்படுத்தும் விதத்தில் நாம் செயற்படவேண்டும்.

### தமிழர், முஸ்லிம்களுக்கு எதுவும் நடக்கலாம்

பொதுபலசேனாவின் இனவாத, மதவாத செயற்பாடுகள் அடக்கப்படாவிட்டால் நாளை இந்த நாட்டுத் தமிழர்களை இந்தியாவுக்கும், முஸ்லிம்களை சவூதிக்கும் ஓடச் சொல்லவும் அவர்கள் தயங்கமாட்டார்கள்.

எனவே சிறுபான்மை இன மக்களைப் பாதுகாப்பதற்கும், இனமத உரிமைகளுடன் அவர்கள் நாட்டில் வாழச்செய்யவும் ஜனாதிபதி திட்டம் வகுத்துச் செயற்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கிலுள்ள பட்டதாரிகள் பலர் பட்டதாரிகளுக்கான நியமனத்தில் விடுபட்ட நிலையிலுள்ளனர்.

இத்தகைய விடுபட்ட பட்டதாரிகளை நியமனத்தில் தாமதமின்றி இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். பயிலுநர் பட்டதாரிகளில் ஒருவருடம் கடந்தும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் இருப்பவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.- என்றார். (ச-30)

## புதையல் தோண்டியோருக்கு விளக்கமறியல்

அம்பாறை , மார்ச் 20

திருக்கோவில், சங்கமன் கண்டி பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கைதான மூவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பொத்துவில் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் உத்தரவிட்டார்

இராணுவத்தினர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சங்கமன் கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயத்தின் பின்னால் உள்ள காட்டில் புதையல் தோண்டிக் கொண்டிருந்தவர்களைப் பொலிஸார் சுற்றி வளைத்து மூவரைக் கைது செய்துள்ளனர். மூவர் தப்பியோடியுள்ளனர். தப்பி ஓடிய மூவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மலையகத்தில் கடும் மழை; இயல்பு வாழ்க்கை பாதிப்பு

நுவரெலியா, மார்ச்20

மலையகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் பெய்து வருகின்ற அடைமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை, சாமிமலை, மஸ்கெலியா, நோர்வூட் உட்பட நுவரெலியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுமுன் தினம் முதல் பெய்து வருகின்ற அடைமழையால் நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரித்து வருகிறது.

இதேவேளை சாமிமலை பிரதேசத்தில் பெய்த அடைமழையால் பாகினி தோட்டத்திலுள்ள தொழிலாளர் குடியிருப்பு ஒன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. மண்மேடு சரிந்து விழுந்தத்தில் வீட்டுக்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. நோர்வூட் பிரதேசத்தில் பெய்த அடைமழையால் நோர்வூட் சிங்கள பாடசாலை அருகிலுள்ள பிரதான வீதியில் வெள்ள நீர் ஏற்பட்டதால் வாகனப் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# யானை தாக்கி விவசாயி சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வயல்வெளியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

முள்ளிவட்டுவான் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பொன்னுத்துரை மயில்வாகனம் என்ற விவசாயியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யானையைக் கண்ட அவர் அருகில் உள்ள குளம் ஒன்றில் பாய்ந்து நீந்தி தப்பித்துக் கொள்ள முயற்சித்த போதிலும், அவரைப் பின் தொடர்ந்து துரத்திய யானையும் அந்தக் குளத்தினுள் சென்று அவரை தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# மரண அறிவித்தல்

## திருமதி பெருமாள் தர்மாத்தா



நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், "தாயகம்" புத்தடி, விசுவமடு, முல்லைத்தீவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி பெருமாள் தர்மாத்தா நேற்று (19.03.2013) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பழனிமுத்து - தங்கம்மா தம்பதியரின் அருமை மகளும் கந்தசாமி பெருமாளின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கமலா மற்றும் தாமோதரம், சண்முகதாசன், திரு நாவுக்கரசு, நாகேஸ் வரி, கலைச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலகிருஷ்ணன் (அதிபர், மு/ விசுவமடு மகாவித்தியாலயம்), சிவகுமார் (நீதிவான் - யாழ்ப் பாணம்) ஆகியோரின் அருமைத் தாயும், வதனி, காந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், சிவேகா, அபிசிகா, பிரணவன், சாகித்தியா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், புஸ்பராணி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2013) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் "தாயகம்" புத்தடி விசுவமடுவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 12 ஆம் கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"தாயகம்"
புத்தடி விசுவமடு, முல்லைத்தீவு.
தொ.பே. 077 3610 031

தகவல்:
பெ.பாலகிருஷ்ணன்
(மகன் - அதிபர், மு/விசுவமடு மகாவித்தியாலயம்)

(சி/7149)(45-6.7)

## பகிடிவதையில் ஈடுபட்ட மாணவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

கொழும்பு,மார்ச்20

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் மாணவர்கள் சிலரை பகிடிவதைக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் பொறியியல் பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்கள் சிலருக்கு பகிடிவதை செய்ததாக தகவல் கிடைத்துள்ளது. அதனையடுத்து துணைவேந்தர் உள்ளிட்ட ஒழுக்காற்று குழு உறுப்பினர்கள் அங்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பகிடிவதையில் ஈடுபட்ட 20 இற்கும் அதிகமான சிரேஷ்ட மாணவர்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொண்டதாக ஒழுக்காற்றுக் குழுவின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி கூறினார்.

அதற்கமைய குறித்த மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச)

**விற்பனைக்கு**

NP - VP xxxx தொடரிலக்கமுடைய Discover 135 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 300 7049 (35429)(6.7.2)

**தவறிவிட்டது**

K.K.S வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசிக்கும் ஆ.சிவகுமாரன் என்பவருடய Job-IC, Seylan Bank Card, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன.
தொடர்பு: No.98, K.K.S. Road, Jaffna.
T.P.077 167 3218, 011 4553 165
(சன்மானம் வழங்கப்படும்) (35432)(6.7.2)

**கோழிக் குஞ்சு விநியோகம்**

BAHIRAHA No - 1 புறொயிலர் குஞ்சுகள்
23.03.2013 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
★ றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
0776090926
★ கதிர்வேலாண் கிளிநொச்சி.
021 228 0007 (35434)(6.7.2)

**பணிநிலை வெற்றிடங்கள்**

சுன்னாகம், நெல்லியடி, சுழிபுரம் ஆகிய இடங்களில் உள்ள எமது கொக்காக்கோலா நிறுவனங்களில் பின்வரும் பணிநிலைகளுக்குப் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தகுதியுடையோர் 21.03.2013 ஆம் நாள் சுன்னாகத்தில் அமைந்துள்ள எமது அலுவலக முகவரிக்குச் சமுகமளிக்கவும்.

**பணிநிலைகள்**

01.விற்பனைப் பிரதிநிதி
02.கூலியாள்கள் (லேபர்)
03. அலுவலக லிகிதர்

★ வயது:- 20 - 24

தொடர்பு:- 0773867696
அலுவலக முகவரி
லயன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**இடபம்:** திட்டமிடாத செலவுகளும் பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். சகோதர வகையில் பிணக்குகள் வரும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கப்பாருங்கள்.

**கடகம்:** உத்தியோகத்தில் வேலைசுமை குறைவடையும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் லாபத்தை அதிகரிப்பீர்கள்.

### நாளை

பங்குனி-08 வியாழக்கிழமை 21.03.2013
திதி: நவமி பி.ப. 01.29 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ. 06.08 வரை
சுபநேரம்: 07.47- 09.17 வரை
இராகுகாலம்: 01.47- 03.17 வரை

**துலாம்:** உணர்ச்சிவசப்படாமல் இருப்பது நல்லது. எளிதாக முடிய வேண்டிய விடயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை ஓரளவு குறையும். மனக்குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** புதியவர்கள் அறிமுகமாவார்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் முன்யோசனையுடன் செயற்படப் பாருங்கள்.

**தனுசு:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பண உதவி கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும்.

**மகரம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரசு காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மீனம்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைப்பளு குறைவடையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 8 | 2 | 1 |
| | 2 | 3 | | | | | | 4 |
| 9 | | | 8 | | | 3 | | |
| 2 | | | 9 | 4 | 8 | 6 | 1 | |
| 4 | | 8 | 3 | | 2 | 7 | | 9 |
| | 3 | 9 | 7 | 5 | 1 | | | 2 |
| | | 4 | | | 9 | | | 8 |
| 1 | | | | | | 9 | 4 | |
| 7 | 9 | 5 | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 6 | 4 | 9 | 3 | 8 | 2 | 1 |
| 8 | 2 | 3 | 1 | 7 | 6 | 5 | 9 | 4 |
| 9 | 4 | 1 | 2 | 8 | 5 | 3 | 6 | 7 |
| 2 | 5 | 7 | 9 | 4 | 8 | 6 | 1 | 3 |
| 4 | 1 | 8 | 3 | 6 | 2 | 7 | 5 | 9 |
| 6 | 3 | 9 | 7 | 5 | 1 | 4 | 8 | 2 |
| 3 | 6 | 4 | 5 | 1 | 9 | 2 | 7 | 8 |
| 1 | 8 | 2 | 6 | 3 | 7 | 9 | 4 | 5 |
| 7 | 9 | 5 | 8 | 2 | 4 | 1 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07.11.1979

மறைவு
01.04.2012

### திருமதி பாலன் சைலா

அன்பின் ஊற்றாய் பண்பின் உறைவிடமாய்
ஆதரவு காட்டிய எங்கள் குலவிளக்கே
ஈகைக்கு இலக்கணமாய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
அகில முள்ளவரை எம் நெஞ்சில்
நிறைந்தே வாழ்ந்திருப்பீர்கள்
மலர்ந்த ரோஜாபோல் மணம் வீசிய
முகமும் இனிய குரலில் பேசும்
இதய ஒலியும் மறக்க முடியுமா?
சுற்றஞ் சூழ சொந்த பந்தங்களுடன்
மகிழ்வாக வாழ்ந்திருந்தீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

வராகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

ர. பரராஜசிங்கம்
குடும்பத்தினர்.

(34487) (45.6.7)

## UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF AGRICULTURE
### ADMISSION OF PUBLIC OFFICERS FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2011/2012)

Application will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Programme to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2011/2012.

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate

   AND

2. Diploma in Agriculture (Course duration not less then 2 Years) obtained from any recognized institution
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.50/= each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs50/= drawn in favour of the Bursar, Envelope (for Rs.5.00) not less than 9"X4" size.

**Date of closing is 31 st March 2013.**

Applications should be forwarded through the relevant Heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

(C/7132)(6.7.11)


**REGISTRAR**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் நடராசமணி (JP)

**(அம்பாள் ஸ்ரோர்ஸ், முன்னாள் யமுனா ஏஜென்சி உரிமையாளரும்,
காலி பிரபல வர்த்தகரும்)**



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் நடராசமணி 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் வேலணை, முதலாம் வட்டாரம் ஆலம்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சதாசிவம்-செல்லம்மா தம்பதியரின் மருமகனும் ஞானசொரூபியின் அன்புக்கணவரும் சிவாஸ்கர் (பொறியியல் பீட 4ஆம் வருட மாணவன், பேராதனை), யமுனா (NDB-வங்கி-சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாசிலாமணி (கனடா), நடனசிகாமணி, புஸ்பமாலா(கனடா), பிரபுசிகாமணி (கனடா), கலையரசி (கனடா), காலஞ்சென்ற சிவமணி மற்றும் மாதினியார் (கனடா) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான தர்மலட்சுமி, இராசநாயகம் மற்றும் அனுசலட்சுமி, சுந்தரலிங்கம்(பிரான்ஸ்), தெய்வேந்திரன்(கனடா), தர்மசேனன் (கொழும்பு), வைஜெயந்திமாலா(கொழும்பு), ஸ்ரீஸ்கந்தராஜா(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் காஞ்சனமாலா, சிவகலை, சுப்பிரமணியம், குகானந்தி, ஞானேஸ்வரன், சந்திரவதனா, விஜயரட்ணம், சுப்பிரமணியம், சுலோசனா, நாகேஸ்வரன், விஜிதா, அமிர்தகௌரி, பிரபாலினி, ஸ்ரீகரநாதன், பிரதீபா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2013) வியாழக்கிழமை காலை 08.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தற்போதைய முகவரி:**
**566/1, கே.கே.எஸ். வீதி,**
**மனோகராச்சந்தி அருகில்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதர, சகோதரிகள் மற்றும்**
**மைத்துனர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கிலி அபகரித்த இருவர்

கைதடிப் பகுதியில் வீதியில் சென்ற பெண்ணிடம் சங்கிலியை அபகரித்துத் தப்பியோடிய இருவரையும் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த புதன்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலை களஞ்சியப் பொறுப்பாளரான பெண் அணிந்திருந்த 80 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை அபகரித்துக் கொண்டு இருவர் மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக சங்கிலியைப் பறிகொடுத்தவர் கொடுத்த தகவலை அடுத்துத் திருடர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்து நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-9)

## விடுமுறை நாள்களிலும் வர்த்தக நிலையங்கள் திறப்பு

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாண வர்த்தக நிலையங்கள் விடுமுறை நாள்களிலும் திறந்து வைப்பதற்கு யாழ். வணிகர் கழகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், வாடிக்கையாளர்களின் நலன் கருதி எதிர்வரும் 24 ஆம் திகதி முதல், ஏப்ரல் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உள்ள விடுமுறை நாள்களிலும் வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு இந்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக வணிகர் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (3)

## மகளிர் தினவிழா இன்று

நவாலி கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழாஇன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. திருமதி இ.சறோஜாதேவி தலைமையில் நவாலி முருகானந்தா கல்யாண மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளீதரன் கலந்து கொள்வார். (3-100)

★ ★ ★

நல்லூர் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தாய், சேய் நல வைத்திய அதி காரி திருமதி எஸ். திருமகளும் சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபன திட்ட முகாமையாளர் திருமதி டீ. டெபோறாவும் கலந்து கொள்வர். (3)

புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட

## இந்தியத் தம்பதிகள் மிரிஹான தடுப்பில்

வடமராட்சி, மார்ச் 20

வியாபார விசா அனுமதி இன்றி புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியத் தம்பதியான கணவனையும், மனைவியையும் மிரிஹான தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீ நந்தசேகரன் மேல் விசாரணையை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

கைது செய்யப்பட்ட கணவனையும், மனைவியையும் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீ நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தினார்கள்.

கைது செய்யப்பட்டவர்களிடம் சுற்றுலாப் பயணிகளுக்கான விசா இருந்தது. வியாபாரம் செய்வதற்கான விசா இருக்கவில்லை. 36 சாறிகள், 69 சல்வார்களை வைத்திருந்தனர்.

இவர்களின் வியாபாரத்தினால் உள்ளூர் வியாபாரிகள் பாதிக்கப்படுவதோடு அரசுக்கு கிடைக்கும் வருமான வரியும் குறைந்து செல்கின்றது. இதனால் இவர்களை வியாபாரத்துக்கு அனுமதிக்க முடியாது என பொலிஸார் விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

இதனையடுத்து கணவன் மனைவி இருவரையும் மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்துவைப்பதுடன், அவர்களது கடவுச்சீட்டு, புடைவைகளை நீதிமன்றில் பாதுகாப்பாக வைக்குமாறும், யாழ்.சிறைச்சாலையிலோ, மிரிஹான தடுப்பு முகாமிலோ தடுத்து வைக்கும் போது இருவருக்கும் கைவிலங்குகள் போடக்கூடாது என்றும் திறந்த மண்டபத்திலேயே இவர்களை தடுத்துவைக்க வேண்டும் எனவும், இது தொடர்பாக இந்திய துணைத் தூதரகத்துக்கு அறிவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (3-8)

## கரவெட்டியில் கருத்தரங்கு

கரவெட்டி பிரதேச செயலகத்தில் ''நல்லாட்சியியல் நிகழ்ச்சித்திட்ட விளைவுகள் மற்றும் இலக்கு நோக்கிய திட்டமிடல்'' எனும் தொனிப் பொருளில் பிரதேச மட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## பாலத்தில் வெடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

நெடுந்தீவு துறைமுகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட துறைமுகப் பாலத்தின் பெட்டியிடப்பட்ட கீழ் பகுதிகள் வெடித்துக் காணப்படுகின்றன. ஏற்கனவே பாலம் படகுகள் நிறுத்துவதற்காக அணைக்கும் பட்சத்தில் ஆட்டம் காண்பதாக செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-7)

## 326 மில்லியன் இந்திய ரூபா நிதியில் புனரமைக்கப்படும் திருக்கேதீஸ்வரம்



யாழ்ப்பாணம், மார்ச் 20

திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி நிகழ்வில் திருக்கேதீஸ்வரம் கௌரியம்பாள் பாடசாலைக்கு 20 புத்தகங்கள் மற்றும் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான கதைகளைக்கொண்ட இறுவட்டுக்கள் அடங்கிய பொதியும் வழங்கப்பட்டன என்று யாழ். நகரிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - இலங்கை நிறுவனத்தின் ஒத்துழைப்பில், திருக்கேதீஸ்வரத்தில் இடம்பெற்ற சிவராத்திரி நிகழ்வில், தமிழ்நாடு திருஞானசம்பந்தர் திருவாரூர் ஆறுமுகம் ஓதுவாரின் திருக்கேதீஸ்வரத்தில் மட்டும் பாட அனுமதிக்கப்படும் திருமுறைகள் மற்றும் புகழ்பெற்ற சென்னை பேராசிரியர் கலாநிதி சரஸ்வதி பத்மநாதனின் சமயச் சொற்பொழிவும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட இந்தியத் துணைத் தூவர் வி.மகாலிங்கம், இந்திய சமயப் பெரியார்களை பொன்னாடை போர்த்திக் கௌரவப்படுத்தியதுடன் மேற்படி பாடசாலைக்கான புத்தகங்கள் மற்றும் இறுவட்டுக்களை கையளித்தார்.

இதேவேளை இந்திய உதவிக் கொடையின் கீழ் 326 மில்லியன் இந்திய ரூபா நிதி புனருத்தாபன வேலைக்காக திருக்கேதீஸ்வரத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனம், தமிழ்நாடு மாமல்லபுரம் கட்டட சிற்பக்கலைக் கல்லூரியினதும் உதவியுடன் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2012 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இந்திய அமைச்சர் குமாரி செல்ஜாவினால் புனருத்தாபன வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்தத் திட்டம் தற்போது சீராக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. மாமல்லபுரம் கட்டட சிற்பக் கலைக் கல்லூரியின் கல் செதுக்கல் வேலைகள் இடம்பெற்று வருவதாக செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதமாக மீன் பிடித்த மூவர் கைது

கொக்கிளாய் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன் பிடியில் ஈடுபட்ட 3 பேர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு கொக்கிளாய்க் கடல் பிரதேசத்தில் முல்லைத்தீவு கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களமும் திருகோணமலை கடல்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களமும் இணைந்து நடத்திய திடீர் சுற்றிவளைப்பின் போது தள்ளுவலை பாவித்த 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட 3 மீனவர்களும் திருகோணமலை குச்சவெளி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அவர்களை தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 75 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவித்த நீதிமன்றம் வழக்கை எதிர்வரும் எப்ரல் மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.(த-13)

# பதவியிலிருந்து விலகினார் வைத்தியசாலைப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 20

அரச மருத்துவ சங்கத்தின் யாழ். கிளையினருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தான் பதவியிலிருந்து விலகுவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தான் அரச மருத்துவ சங்கத்தின் தாய்ச் சங்கத்துக்கும் சுகாதார அமைச்சுக்கும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாகவும் அவர் உறுதிப் படுத்தினார்.

நேற்று முதல் சுகவீன விடுப்பில் தான் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளக பயிற்சியை நிறைவு செய்து யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றி வந்த ஆறு வைத்தியர்களுக்கு வழங்க வேண்டிய தங்குமிட வசதியை ஏற்படுத்தி கொடுப்பது தொடர்பாக மருத்துவ சங்கத்தின் யாழ்.கிளையினருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தான் இந்த முடிவை எடுத்ததாக அவர் கூறினார். (ஐ-ரி-4-400)

# சபைக்கு அஸ்வர் தலைமை; எதிர்க்கட்சி கடும் எதிர்ப்பு

ஆளும் கட்சி உறுப்பி னரான ஏ. எச். எம். அஸ்வர் சபைக்கு தலைமை தாங்குவதை எதிர்க் கட்சி உறுப் பினர்கள் கடுமையாக ஆட்சேபித்தனர். இதனால் சபையில் சர்ச்சை ஏற்பட்டது. இதனையடுத்து சபை அமர்வுகள் ஐந்து நிமிடங்கள் ஒத்திவைக்கப் பட்டன.

நேற்று மாலை அமர் வின் போது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க உரையாற்றி கொண்டிருந்த வேளையில் குழுக்களின் பிரதித் தலை வர் முருகேசு சந்திரகுமார் தலைமை தாங்கினார்.

பேச்சின் இடையில் குழுக்களின் பிரதி தலைவர் ஆளும் கட்சி உறுப்பினர் ஏ. எச். எம். அஸ்வரை சபைக்கு தலைமைதாங்கும் படி அழைத் தார். அஸ்வரும் சபைப் பீடத்தில் வந்து அமர்ந்து விட்டார்.

ரவி கருணாநாயக்க உட்பட எதிர்க் கட்சி உறுப்பி னர்கள் இதனைக் கடுமையாக ஆட்சேபித்தனர்.

சபைக்கு அஸ்வர் தலைமை தாங்கியதை ஏற்க முடியாது எனக் கூறினர். இதனையடுத்து அஸ்வருக்கும் எதிரணியினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் அஸ்வர் இந்த விடயம் தொடர்பாக சபாநாயகரின் ஆலோசனை பெற வேண்டும் எனக் கூறி சபை அமர்வை 5 நிமிடம் ஒத்திவைத்தார்.

சபை மீண்டும் 3.30 மணிக்கு கூடிய போது பிரதி சபாநாயகர் சந்திம வீரக் கொடி சபைக்கு தலைமை தாங்கினார். உறுப்பினர் அஸ்வர் அவருடைய வழமையான ஆசனத்தில் காணப்பட்டார்.

மீண்டும் ரவி கருணாநாயக்க பேச அழைக்கப்பட்டார். அப்போது ஆளும் கட்சி கொரடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபை யில்தனிப்பட்ட விருப்பு வெறுப் புகளுக்கு இடமளிக்கக் கூடாது. ஒரு உறுப்பினரைத் தனிப்பட்ட ரீதியில் அவமானப்படுத்தக் கூடாது-என்றார். (த-2)

## துணுக்காயில் ஜனாதிபதியின் ஆலோசகர் ரஜீவ

நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான ரஜீவ விஜய துங்க துணுக்காயில் மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார்.

துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது துணுக்காப் பிரதேசத்தில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் பின்னடைவுகள் தொடர்பாகக் கேட்டறியப்பட்டது.

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24★06★1942

மறைவு
17★03★1997

திதி: நவமி

அமரர்
**செல்லையா சிவரத்தினம்**

தந்தையை தானிழந்தார்க்குத்
தரணியிலே அமைதியுண்டோ
ஓயாது உங்கள் நினைவுகள்
உள்ளத்தை வாட்டுதப்பா

விளாத்தியடி லேன்,
உரும்பிராய் வடக்கு.

குடும்பத்தினர்.

(35440)(10,6)

**மதுரா அழகுக்கலைப்பயிற்சி நிலையம்**
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)



மகளிர் மட்டும்

அழகுக் கலை டிப்ளோமா பயிற்சி , அழகுக் கலை அடிசனல் கோஸ், கேக் ஐசிங் டிப்ளோமா கோஸ், சாறிவேக், தையல், ஹான்ட் வேக், ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன.
இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன் பயிற்சியில் இணைபவர்களுக்கு
கட்டணத்தில் 10 % (வீதம்) கழிவு வழங்கப்படும்.
★ பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.
★ இப் பயிற்சி நெறிக்கு வயதெல்லை கிடையாது.
★பேசியல், மணப்பெண் அலங்காரம், கேக் ஐசிங் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம்**
T.P: 0779362642. புழைய வீதி, கோப்பாய்.

## யாழ். லயன்ஸ் கழகத்தின் கண்ணீர் அஞ்சலி

திருமதி *சச்சிதானந்தன் கிருஷ்ணகுமாரி*



எமது யாழ். லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினரான லயன் சச்சிதானந்தன் அவர்களின் அன்பு மனைவி லயன் சீமாட்டி *கிருஷ்ணகுமாரி* அவர்களின் திடீர் மறைவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.
லயன்ஸ் கழகத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி பெருமாள் தர்மாத்தா**



அன்பால் அரவணைத்த
தெய்வமே
அன்னமிட்டு வளர்த்தெடுத்த
அம்மாவே
யார் மனமும் கலங்கவிடாத்
திருத்தாயே
குலம் காக்க அவதரித்த
குலவிளக்கே

உங்கள் மரணவலி எம்மை வாட்டுதம்மா
பிரிந்த துயர் தாளாது மனம் வெதும்புதம்மா
உங்களின் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும் உங்கள்
பிள்ளைகள்.
0777703889 (சி/7145)(8.16.14)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி.ந.சந்திரசேகரன் அவர்களின் அன்புத்தந்தையார்
**திரு.முருகுப்பிள்ளை நித்தியானந்தன்** அவர்கள்
காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றும்
இ. ஆனந்த நடராசா அவர்களின்
அன்பு மாமி

**திருமதி நாகம்மா கந்தையா**



அவர்களின் பெரும் பிரிவால் துயருற்றிருக்கும்அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,
சண்டிலிப்பாய். (35436)(6.7.11)

கல்லூரிச் சமூகம்.

**டீசல் மெக்கானிக் தேவை**

பார ஊர்திகள் திருத்தும் அனுபவமுள்ள டீசல் மெக்கானிக் உடன் தேவை.

தொடர்பு:- 0771512122, 0770107611, 0777033039.

## மரண அறிவித்தல்

*திருமதி அமுதா கணேசமூர்த்தி*



கோவிலாக்கண்டி, நாவற்குழியைச் சேர்ந்த திருமதி அமுதா கணேசமூர்த்தி நேற்று (19.03.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் கணேசமூர்த்தியின் அன்பு மனைவியும் நாகநாதன் (ஓய்வுபெற்ற, புகையிரத அதிபர்), குமாரதாசன் (ஓய்வுபெற்ற உதவி செயலாளர், புனர்வாழ்வு அமைச்சு), அன்னரத்தினம், சாந்தநாயகி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காயத்திரி, கௌரிசங்கர், கோபிகா, கிருபாலினி ஆகியோரின் அன்புத் தாயும் பிறேம்குமார், மாயவன், றஞ்சனா ஆகியோரின் அன்பு மாமியும் சாமன், சுருதி, ஜெய்சரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2013) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணிக்கு காந்தாலப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவிலாக்கண்டி, நாவற்குழி. (சி/7146) -23-16-14)
தகவல்:
கா.க. [illegible]

**ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்** veta

யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட



**Spoken English**
வார இறுதிநாள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
சனி, ஞாயிறு காலை 10 மணிக்கு
இலவச அறிமுக வகுப்புக்கள்
Tel. 0777577333

**IELTS**
• Unique Test Tips
• Latest course Materials
(Duration: 50 hrs with 5 mock exams )

City & Guilds A1, A2, B1 B2
International English for Speakers of other Language (ESOL) Diploma

DMI COMPUTER EDUCATION
**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, [illegible] வீதி, | M.M.V வீதி. | கண்டி வீதி, | கே.கே.எஸ். வீதி. (NSB வங்கி அருகில்) |
| ([illegible] அருகாமை) | (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) | (HNB அருகில்) | Jet மோட்டேர்ஸ் சந்தி |
| Tel.:021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பிளான் விக்னேஸ்வராவை வீழ்த்திய தாவடி காந்தி மாவட்ட மட்டப் போட்டிக்கு



வலி.வடக்கு, மார்ச் 20

உடுவில் பிரதேச தேசிய இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தேசிய பிரதேச தேசிய இளைஞர் மன்ற அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியில் தாவடி காந்தி இளைஞர் தேசிய சேவைகள் மன்ற அணி பிரதேச சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் குப்பிளான் விக்கினேஸ்வரா இளைஞர் சேவைகள் மன்ற அணியை எதிர்த்து தாவடி காந்தி இளைஞர் சேவைகள மன்ற அணி மோதிக் கொண்டது.

30 பந்துகளைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தாவடி காந்தி இளைஞர் சேவைகள் மன்ற வீரர்களான நிரஞ்சன், திவாகரன் ஆகியோர் தலா ஒவ்வொரு ஓட்டங்களைப் பெற்றனர்.இதனால் அந்த அணி 30 பந்துகளில் 2 ஓட்டங்களை எடுத்தது.

3 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய குப்பிளான் விக்கினேஸ்வரா தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி வீரன் விஜயேந்திரன் ஓர் ஓட்டத்தை பெற்றார். மற்றைய வீரர்கள் ஓட்டங்களை எடுக்கத் தவறினர். இதனால் குப்பிளான் விக்னேஸ்வரா அணி ஓர் ஓட்டத்தை மாத்திரமே 30 பந்துகள் நிறைவில் எடுக்க முடிந்தது.

இதனால் தாவடி காந்தி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி 2:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் குப்பிளான் விக்கினேஸ்வரா தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியை வெற்றி கொண்டு, மாவட்ட மட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

(ங-86)

# வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மகளிர் கிரிக்கெட்டில் சம்பியனானது

கரணவாய்,மார்ச் 20

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அபிராவின் அபாரத்துடுப்பாட்டம், அபிசாயினி, தரணிகா ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சு என்பவற்றின் துணையோடு வடமராட்சி மத்திய கல்லூரி அணி 32 ஓட்டங்களால் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியைத் தோற்கடித்து சம்பியனானது.

இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி ,நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் அபிராயவின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 86 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் அபிராயவின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 86 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அந்த அணிசார்பாக அபிரயா 3 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சார்பாக பந்துவீச்சில் சாமந்தி மூன்று இலக்குகளையும், ரம்மியா, அஸ்வின் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 87 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய, பருத்தித்துறை மெதடிஸ்தப் பெண்கள் உயர்தரப் பாடசாலை வடமராட்சி மத்திய கல்லூரி அணி வீராங்கனைகளின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாமல் 54 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் 32 ஓட்டங்களில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி சம்பியனானது.

அந்த அணி சார்பாக தமிழினி 11 ஓட்டங்களையும், சாமந்தி 9 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

வடமராட்சி மத்திய கல்லூரி அணி சார்பாக அபிசாயினி, தரணிகா, ஆகியோர் தலா 3 இலக்குகளையும் கஜமுகி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

மகளிர் கிரிக்கெட்டில் மூன்றாமிடத்தினை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயஅணி பெற்றுக் கொண்டது.

(ங-400)

## கராத்தேயில் வென்றோர்.....



சர்வதேச சோட்டோக் கான் கராத்தே சங்கத்தினால் கண்டி பெரதேனியா உள்ளக அரங்கில் நடைபெற்ற சர்வதேச கராத்தே சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுடன் சென் சேய். கதீஸ்குமார் மற்றும் தற்காப்புக் கலையக பிரதம ஆசிரியர் சென் சேய். இரத்தினசோதி. (ந-23)

## விசேட தேவையுடையோருக்கென வவுனியாவில் விளையாட்டுக் கழகம்

வவுனியா, மார்ச் 20

''ஹண்டிக்ஹப்'' நிறுவனத்தினால் வவுனியா மாவட்டத்தில் விசேட தேவையுடையவர்களுக்கென தனியான விளையாட்டுக்கழகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

'அனைவருக்கும் விளையாட்டு' என்ற நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இந்த விளையாட்டுக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டுக் கழக அங்குரார்ப்பண நிகழ்வில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா மாவட்டப் பணிப்பாளர் எஸ்.எம்.சிர செனிவிரத்ன, மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி ஐ.சுஹானி மற்றும் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஸ்டீவ் கோட்நெட் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

(ங-400)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு - 7மணி

சுழிபுரம் பயர் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் மாணிக்கம் வெஸ்ரொம் விளையாட்டுக்கழகம்

(ங-288- 23 )

## சென்.லூசியா வாகை

யாழ்ப்பாணம், மார்ச் 20

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பனங்கட்டிக் கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் பேசாலை பள்ளி முனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணி 28:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ங-23)

## ஹொக்கி நடுவர்கள், பயிற்றுநர்கள் ஆகியோருக்கு விரைவில் சான்றிதழ்

வலி வடக்கு மார்ச் 20

யாழ்.மாவட்ட ஹொக்கி பயிற்றுநர்கள், நடுவர்கள் என்போருக்கான தகுதிச் சான்றிதழ்களை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்று இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் செயலாளர் இந்திரவன்ஸ ஹேரத் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் தேசிய பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஹொக்கிப் போட்டிகள் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்ட பின்னர், இந்த உறுதிமொழியை யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் நோயல் விமலேந்திரன் மற்றும் செயலாளர் எஸ் தர்மகுமார் ஆகியோருக்கு இந்திரவன்ஸ தெரியப்படுத்தியுள்ளார். (ங-86)

## கலந்துரையாடல் இன்று

கரணவாய்,மார்ச் 20

வடமராட்சி வலயப் பாடசாலைகளிலுள்ள உடற்கல்வி ஆசிரியர்களுக்கான முக்கியமான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இதன் போது மாகாண மட்ட பெரு விளையாட்டுக்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால், மாகாணமட்ட போட்டிக்குதெரிவு செய்யப்பட்ட அணிகளின் பட்டியலுடன் பொறுப்பாசிரியர்கள் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலய உடற்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வகுமாரன் கேட்டுள்ளார். (ங-400)

## மன்னார் கிரிக்கெட் முடிவுகள்



யாழ்ப்பாணம்,மார்ச் 20

மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு.

**ஆண்கள் பிரிவு**

1ஆம் இடம் -சப்புகுளம் அல்பத்தா விளையாட்டுக்கழகம்

2ஆம் இடம் -தலைமன்னார் பியர் யங்மன் விளையாட்டுக்கழகம்

**பெண்கள் பிரிவு**

1ஆம் இடம்- தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்

2ஆம் இடம்-சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம்.

(ங-23)

# மகளிர் கரப்பந்தில் மைக்கல் சம்பியன்

வடமராட்சி ,கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டுவரும் விளையாட்டு விழாவில் மகளிர் அணிகளுக்கிடையேயான கரப்பந்தாட்டப் போட்டியில் அல்வாய் மாலிசந்தி மைக்கல் மகளிர் அணி சம்பியனானது.

மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற மகளிர் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி திருவள்ளுவர் மகளிர் அணியை எதிர்த்து மைக்கல் மகளிர் அணி களமிறங்கியது.

3 செற்களைக் கொண்ட போட்டியில் முறையே முதல் இரண்டு செற்களிலும் 25:8, 25:11 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற செற் கணக்கில் மைக்கல் மகளிர் அணி சம்பியனானது.

(ங-8-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் இலங்கை வசம்

## ஹேரத்தின் பிறந்ததின பரிசு

தனது 35 ஆவது பிறந்த தினத்தில் சுழலில் கலக்கி டெஸ்ட் போட்டியில் 200 ஆவது இலக்கையும் வீழ்த்தி இலங்கை அணிக்கு பங்களா தேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்று கொடுத்தார் ரங்கன ஹேரத்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 240 ஓட்டங்களை எடுத்திருந்தது. இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 346 ஓட்டங்களை பெற்றது.

பின்னர் தனது 2 ஆவது இன்னிங்ஸுக்காக களம் இறங்கிய பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் 3 ஆம் நாள் ஆட்ட நிறைவில் 4 இலக்குகளை இழக்கு 158 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் மொமினுல் ஹக் 36 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் முஸ்பிஹிர் ரஹீம் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


நேற்று 4 நாள் ஆட்டம் ஆரம்பித்த உடனேயே மொமினுல் ஹக்கை 37 ஓட்டங்களுடன் ஹேரத்தின் சுழலுக்கு



பறிகொடுத்தது பங்களாதேஷ். பங்களாதேஷ் அணித் தலைவர் நிலைத்து நின்றாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த முயன்றார். ஆயினும் பின்வரிசை வீரர்கள் பொறுப்புடன் ஆடத் தவறியதால் அவரது முயற்சி ஓரளவுக்கே பயனளித்தது. இதனால் பங்களாதேஷ் அணி சகல இலக்குகளையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் தமிம் இக்பால் 59 ஓட்டங்களையும், ஜஹுருல் இஸ்லாம் 48 ஓட்டங்களையும், முஸ்பிஹிர் ரஹீம் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கலக்கிய ரங்கன ஹேரத் இரண்டாவது இன்னிங்ஸில் 7 இலக்குகளையும் முதல் இன்னிங்ஸில் 5 இலக்குகளையும் கைப்பற்றினார். நேற்று அவரது 35 ஆவது பிறந்த தினத்தை தனது 200 ஆவது இலக்கை கைப்பற்றி ஹேரத் சாதனை படைத்தார்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, டில்ஷான், சங்ககார ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றி இலக்கை நோக்கி நகர்ந்தது. 3 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் பங்களாதேஷை தோற்கடித்தது. இலங்கை அணி சார்பில் டில்ஷான் 57 ஓட்டங்களையும், சங்ககார 55 ஓட்டங்களையும் கைப்பற்றினர்.



இரண்டு போட்டிகள் கொண்ட இந்த தொடரில் முதல் போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது. எனவே இந்த வெற்றியின் மூலம் 1:0 என்ற ரீதியில் இலங்கை அணி தொடரை கைப்பற்றியது. ஆட்ட நாயகனாக ஹேரத் தெரிவானார். இந்தத் தொடரில் 3 சதங்கள், ஒரு அரைச்சதம் என்பவற்றை அடித்து அசத்திய சங்ககார தொடர் நாயகன் விருதை வென்றார்.(ந)

## கிமி ரெய்கோனன் சம்பியன்

ஆஸ்திரேலிய 'போர்முலா-1' கார்ப்பந்தயத்தில் லோட்டஸ் அணியின் கிமி ரெய்கோனன் சம்பியனானார். ரெட் புல் ரேசிங் ரெனால்ட் அணியின் செபஸ்டியன் வெட்டல் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இந்த ஆண்டிற்கான போர்முலா-1 கார்ப் பந்தயத்தின் முதல் சுற்று போட்டி நேற்றுமுன்தினம் தொடங்கியது. இதில் மின்னல் வேகத்தில் பறந்த லொட்டஸ்- ரெனால்ட் அணியின் பின்லாந்து வீரர் கிமி ரெய்கோனன் இந்த வருடத்துக்கான முதல் சம்பியன் கிண்ணத்தை வென்றார்.




இவர், 58 சுற்றுகள் கொண்ட பந்தயத் தூரத்தை ஒரு மணித்தியாலமும் 30 நிமிடம் 03.225 செக்கன்களில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இவரை விட 12 நிமிடம் 4 செக்கன்கள் தாமதித்த பெராரி அணியின் பெர்னாண்டோ அலோன்சா இரண்டாவதாக வந்தார்.

தொடர்ந்து மூன்று முறை சம்பியனாகி சாதனை படைத்த ரெட்புல் ரேசிங்-ரெனால்ட் அணியின் ஜேர்மனி வீரர் செபஸ்டியன் வெட்டல் முதல் இடத்தில் இருந்து போட்டியைத் தொடங்கினார்.


எனினும் அவரது கார் ரயரில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பின் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. கடைசியில், கிமி ரெய்கோனனை விட 22 நிமிடம் 3 வினாடிகள் கூடுதலாக எடுத்துக்கொண்ட இவர் 3ஆவது இடத்தை தனதாக்கினார். (ந)

## லம்பேர்ட் 200

வெஸ்ட் ஹோம் யுனைட்டெட் அணிக்கு எதிரான பிரிமியர் லீக் உதைபந்து போட்டியில், செல்சி அணி வெற்றி பெற்றது.

பிரிமியர் லீக் உதைபந்து தொடர் இங்கிலாந்தின் பல்வேறு பகுதியில் நடைபெற்று வருகிறது. இதன் லீக் போட்டி ஒன்றில் செல்சி, வெஸ்ட் ஹோம் யுனைட்டெட் அணிகள் மோதின.

முதல் பாதியில் ஆதிக்கம் செலுத்திய செல்சி அணிக்கு பிரான்க் லம்பேர்ட் (19வது நிமிடத்தில்) ஒரு கோல் அடித்தார். நேற்றுமுன்தினம் தனது 595ஆவது போட்டியில் பங்கேற்றிருந்தார் செல்சி அணியின் பிரான்க் லம்பேர்ட். இந்த ஆட்டத்தின் முதல் கோலை அடித்து அவர் தனது 200 ஆவது கோலை பதிவு செய்தார். தவிர, இந்த ஆண்டு பிரிமியர் லீக் உதைபந்து தொடரில் அவர் 12 கோல்களை அடித்துள்ளார்.



தொடர்ந்து இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய செல்சி அணிக்கு ஈடன் ஹசார்ட் (50 ஆவது நிமிடத்தில்) ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். வெஸ்ட் ஹோம் அணி வீரர்களின் கோல் முயற்சி எதுவும் பலிக்கவில்லை.

முடிவில், செல்சி அணி, 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புல்ஹாம், டாட்டன்ஹாம் அணிகள் மோதிய போட்டியில் புல்ஹாம் அணி 1:0 என்ற ரீதியில் வென்றது. (ந)

## சம்பளத்தில் முதல்வன்

உலகில் கடந்த வருடம் அதிக சம்பளம் வாங்கிய உதை பந்து வீரர்கள் வரிசையில், இங்கிலாந்தின் டேவிட் பெக்காம், முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

பிரான்ஸிலிருந்து வெளிவரும் உதைபந்து வார இதழ், கடந்த ஆண்டில் அதிக சம்பளம் வாங்கிய உதைபந்து வீரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் நான்கு முறை சிறந்த உதைபந்து வீரருக்கான 'பிபா' விருதுவென்ற ஆர்ஜென்டினாவின் மெஸ்சி, போர்த்துக்கலைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோரை பின் தள்ளி, இங்கிலாந்தின் டேவிட் பெக்காம் முதலிடம் பிடித்தார்.

இங்கிலாந்து டேவிட் பெக்காம் (வயது-37) 2012 டிசம்பர் மாதம் அமெரிக்காவின், லொஸ் ஏஞ்சல்ஸ் கேலக்ஸி அணியில் இருந்து விடைபெற்றார். பின் கடந்த ஜனவரி முதல் பிரான்ஸில்



பரிஸ் செயின்ட்- ஜெர்மெயின் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

பெக்காம் கடந்த வருடத்தில் மட்டும் 252 கோடி ரூபா சம்பாதித்துள்ளார். இதில் 12 கோடி ரூபா போட்டிகளில் பங்கேற்றதற்கான சம்பளமாகப் பெற்றுள்ளார். தவிர, போனஸாக 9 கோடி ரூபாவையும், விளம்பர ஒப்பந்தங்கள் மூலம் 231 கோடி ரூபாவையும் சம்பாதித்துள்ளார்.

இவருக்கு அடுத்து ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி, 245 கோடி ரூபா சம்பளம் பெற்றுள்ளார். போர்த்துக்கலைச் சேர்ந்த கிறிஸ்டியானா ரொனால்டோ 210 கோடி ரூபா சம்பளம் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளார்.

இதேவேளை, அதிக சம்பளம் பெற்ற பயிற்சியாளர் வரிசையில், ரியல் மட்ரிட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் போர்த்துக்கலின் ஜோஸ் மொரினோ (98 கோடி ரூபா) முதலிடம் பிடித்தார். (ந)

## அம்பயர் 'அவுட்'

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட பங்களாதேஷ் நடுவர் நாதிர் ஷாவுக்கு 10 ஆண்டுகள் போட்டிகளில் கடமையாற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தனியார் தொலைக்காட்சி ஒன்று வெளியிட்ட புலனாய்வுச் செய்தியில் பாகிஸ்தானின் நதீம் கவுரி, அனீஸ் சித்திக், பங்களாதேஷின் நாதிர் ஷா, சர்புதுல்லா சைகத், இலங்கையின் காமினி திசநாயக்க, மவுரிஸ் வின்ஸ்டன், சாகரா கல்லாகே ஆகிய நடுவர்கள் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட விடயம் அம்பலப்படுத்தப்பட்டது.

இவர்கள் பணம் பெற்றுக் கொண்டு வீரர்களுக்கு தவறாக 'அவுட்' கொடுத்தமை உள்ளிட்ட பல முறைகேடுகள் இதன்போது வெளிச்சத்துக்கு வந்தன.



இது தொடர்பாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை (பி.சி.பி) விசாரணை நடத்தியது. இதில், நாதிர் ஷா மீதான சூதாட்டம் மற்றும் ஊழல் புகார் உண்மையென உறுதிப்படுத்தப்பட்டது. மற்றொரு நடுவரான சர்புதுல்லா நிரபராதி என்று விடுவிக்கப்பட்டார்.

இது குறித்து பி.சி.பி., வெளியிட்ட அறிக்கையில், நாதிர் ஷாவுக்கு 10 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த காலத்தில் பி.சி.பி.,க்கு உட்பட்ட போட்டிகளில் இவர் பணியாற்ற இயலாது. தண்டனையை எதிர்த்து இவர் மேன்முறையீடு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி.சி.பி.,யின் இந்த முடிவை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வரவேற்றுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

advt@uthayan.com
0215671111

கரைச்சி
புளியம்பொக்கணை நாகதம்பிரான்
ஆலயம்

## தண்டல் ஒழுங்குகள்

ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கலை முன்னிட்டு வழமையான கிராமங்களுக்கு ஆலய இலட்சினை பொறிக்கப்பட்ட உழவு இயந்திரங்களில் எமது தொண்டர்கள் இன்றிலிருந்து (20.03.2013) வருகை தருவார்கள்.
அவர்களிடம் அடியார்கள் தமது நேர்த்திப் பொருள்களை வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.
வேறு எவருக்கும் தண்டல்கள் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதனையும்.
அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்.**

c7143(14.16)

## தொழிற் பயிற்சிகள்

★ **Mobile Phone Repairing:** சகல Phone களின் Software, Hardware. பயிற்சியளிக்கப்படும். காலம் 3 மாதம்.
★ **Electronics:** சகல இலத்திரனியல் பொருள்கள் (TV, Mobile Phone) Satellite, DVD, Amp) திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம் 10 மாதம்.
★ **Air conditioning** : சகல குளிர்சாதனங்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம் 10 மாதம்

**பயிற்சிகள் ஆரம்பம்: 24/03/13 - 9 A.M**

**குறிப்பு:** சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் பெற்றுக் கொடுக்கப்படும்.

**O/L படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர்**

விவரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

No:23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P:0778249949

கிளை: NEW ASIAN CENTER 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:0779254078.

(C7138)(10.6.7)

## காணிகளை சுவீகரிக்க வவுனியாவிலும் அலுவலகம்

அரச தேவைகளுக்கான காணிகளைச் சுவீகரிப்பதற் கெனப் புதிய அலுவலகம் ஒன்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அரசின் பொது வேலைத் திட்டங்களுக்குக் காணிகள் தேவைப்படும் போது உடனடியாக அவற்றைச் சுவீகரிப்பதற்காகவே இந்தப் புதிய அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளதாக வவுனியா செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 28 ஆம் திகதி வவுனியாவுக்கு வருகை தரும் காணி அமைச்சரினால் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது என் றும், இதற்கு வவுனியா மாவட்ட செயலகத்தில் கடமையாற்றி இளைப்பாறிய நிர்வாக சேவை அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(த-402)

## 109 வயது மூதாட்டி காலமானார்

கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த 38 ஆண்டுகளாக வாழ்ந்து வந்த மூதாட்டி ஒருவர் இயற்கை எய்தியுள்ளார். சுமார் 109 வயது நிரம்பிய குறித்த மூதாட்டி ஹிங்குராங் கொடையைச் சேர்ந்தவர்.

மீரிகம அரச முதியோர் இல்லத்தில் வாழ்ந்து வந்த அவர், 1971 ஆம் ஆண்டு கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு இடமாற்றப்பட்டிருந்தார் என்று இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் தெரிவித்தார்.

கை.நாகேஸ்வரி என்ற இந்த மூதாட்டி எவரது உதவியும் இன்றியே இல்லத்தில் சேர்க்கப்பட்டிருந்தார். (வ-17)

## வீடு விற்பனைக்கு

சுதுமலை கிழக்கு, மானிப்பாய் இணுவில், மானிப்பாய் வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் (பாலாவோடை) 6 பரப்பில் அமைந்த கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
077 6004219

(28863)(2.6.7)

## காணி விற்பனை

கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்குப் பின்பக்கமாக 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0773967334

(35435)(10.6.7)

## Vinoth Curtains

யாழ். மண்ணில் அறிமுகமாகிறது
கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், யுரோ காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.

தொடர்பு- மைக்கல்
0774906323,
0719050145
0777797532

இல-50/1,நாவலர்வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.

(23933)(9.14)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிருத்திய அழைப்பும்

மண்மகிழ 01 * 04 * 1943



கண்நெகிழ 18 * 02 * 2013

### அமரர் கந்தையா இரத்தினசிங்கம்

**(முன்னாள் உரிமையாளர் சாரதாஸ் புடவையகம்)**

*நெஞ்சினிலும் தோளினிலும் சுமந்தீர்கள்*
*உங்களுக்காக வாழாது பிள்ளைகளுக்காக*
*வாழ்ந்து மறைந்தீர்கள் தந்தையே!*


*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

கடந்த (18.02.2013) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா இரத்தினசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.03.2013) புதன்கிழமை நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

32/1, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


குடும்பத்தினர்.

தற்போது யாழ் நகரில்...



**BTEC HND in**
# BIOMEDICAL SCIENCE
Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புகளுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




மருத்துவ / உயிரியல் / உயிர் இரசாயனவியல் துறையில் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் பாடநெறி

ISO 9001:2008 CERTIFIED

14 Years of Trust & Excellence in Higher Education

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

Macro Ads

*Building Careers - Transforming Lives*

## SUMANS ENTERPRISE

இல.291, பிறவுண் வீதி,கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்.

மலிவு விற்பனை 31.03.2013 வரை

★நவீன வகையான Wall Tiles, Floor Tiles, Bathroom Tiles, Commode Sets Plastic, Glass Doors,Mirror Sets.
★PVC Pipes & Fittings நீர்த்தாங்கிகள் Pet.Arpico 350L, 500L, 750L,1000L,1500L,2000L,5000L,10000L மேற்படி அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.
★தரமான கல்சியம் நீக்கி Air Freshner, Glass Cleaner, Toilet Cleaner, Floor Mopper, Dish Washer என்பவற்றை மொத்த கொள்ளளவில் பெற்றிடலாம்.
★உங்கள் வீட்டின் Tile Electrical மற்றும் நீர்க்குழாய் பொருத்தும் வேலைகள் எம்மால் பொறுப்பேற்று மிகச்சிறந்த முறையில் செய்து தரப்படும்.

Sumansenterprise@gmail.com.

தொடர்பு:
021 5100700

## விற்பனைப் பிரதிநிதி தேவை

இலங்கையின் பிரபலமான நிறுவனமொன்றின் யாழ்.மாவட்டக் கிளைக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இன்று (20.03.2013) புதன்கிழமை காலை 9.00மணி தொடக்கம் நேர்முகத் தேர்வு இடம்பெறும்.

தொடர்புகளுக்கு:- 0752430276

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அற்பன்
துவேஷிக்கிறான்
மேலோன்
அனுதாபப்படுகிறான்.
-சிங்கள-

# புதன் பொய்கை A

உதயன் மார்ச் 20 2013 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு



“ குழந்தைகளுக்கு பாலியல் ரீதியாக நிகழும் தொந்தரவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அத்தகைய அச்சுறுத்தலில் இருந்து அவர்களைப் பாதுகாக்க பெற்றோர் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும்.

● தேவகி

# குழந்தைகளைப் பாதுகாப்போம்

ஒரு காலத்தில் ஒருடசின் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஒரு கவலையும் இல்லாமல் எமது முன்னோர்கள் வாழ்ந்தார்கள். ஆனால் இன்றைக்கு ஒன்றோ இரண்டோ குழந்தைகளை வைத்துக் கொண்டு எமது பெற்றோர்கள் படும் பாட்டை வார்த்தைகளால் சொல்ல முடியாதுள்ளது. இதற்குக் காரணம் சமூகத்தில் நிலவுகின்ற குழந்தைகள் மீதான அச்சுறுத்தும் நிகழ்வுகள்.

ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பதெல்லாம் பழைய மொழிகளாகிவிட்டன. இன்று பிள்ளைகளெல்லாம் கிரிமினல்களைப் போல அடைபட்டுக் கிடக்க வேண்டிய சூழல்.

குழந்தைகளுக்கு பாலியல் ரீதியாக நிகழும் தொந்தரவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அத்தகைய அச்சுறுத்தலில் இருந்து அவர்களைப் பாதுகாக்க பெற்றோர் அதிக விழிப்புடன் இருக்க வேண்டியிருக்கிறது.

வீட்டுக்கு உள்ளேயும், வீட்டுக்கு வெளியேயும் குழந்தைகளுக்கு ஆபத்துகள் காத்திருக்கின்றன. அது மனிதர்கள், விலங்குகள் என எந்த வடிவத்திலும் வரலாம் ! குழந்தைகளைப் பாதுகாப்பது எப்படி ?

### வீட்டுக்கு வெளியே போகும் போது

குழந்தைகளுடன் வெளியே போகிறீர்களா ? ஒரு நிமிடம் நில்லுங்கள். அசம்பாவிதங்கள் நடக்கக் கூடாது என்பதே எமது விருப்பம். அசம்பாவிதங்கள் எம்மிடம் சொல்லிக் கொண்டு வருவதில்லை. எனவே வீட்டை விட்டுக் கிளம்பும் போதே உங்கள் குழந்தைகளிடம் அவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைச் சொல்லுங்கள்.

வீட்டை விட்டுக் கிளம்பும் போது, உங்கள் கைபேசி கேமராவை எடுத்து உங்கள் குழந்தைகளைப் போட்டோ எடுங்கள்.



ஒருவேளை உங்கள் குழந்தைகளில் ஒன்று எங்கேனும் தவறிப் போனால் கண்டுபிடிக்க பேருதவியாய் இருக்கும்.

படத்தைக் காட்டி இதுதான் குழந்தை என விசாரிக்க உதவியாய் இருக்கும். தொழில் நுட்பம் இன்றைக்கு வெகுவாக வளர்ச்சியடைந்திருக்கிறது. அவற்றைக் குழந்தைகள் தமது பாதுகாப்புக்காக பயன்படுத்துவதற்கு இடம் கொடுக்க வேண்டும்.

அதே போல, ஒரு வேளை தவறிப் போக நேருமானால் எந்த இடத்தில் சந்தித்துக் கொள்வது ? என்பதைச் சொல்லிக் கொடுங்கள்.

உதவி கேட்பது யாரிடம் என்பதைக் குழந்தைக்குச் சொல்லிக் கொடுங்கள். உதாரணமாக காவலரிடம் உதவி கேட்கவேண்டுமெனில், உடையை மட்டும் சொல்லாமல் பட்ஜ் அணிந்திருப்பார், இந்த 'லோகோ' உடையில் இருக்கும் என்பன போன்ற விஷயங்களையும் சேர்த்தே சொல்லிக் கொடுங்கள் !

### எங்கே இருக்கிறார்கள் குழந்தைகள் ?

உங்கள் குழந்தைகள் விளையாடப் போவதிலோ, நண்பர்களுடன் வெளியே போவதிலோ தவறில்லை. ஆனால் குழந்தைகள் எங்கே இருக்கிறார்கள் ? யாருடன் இருக்கிறார்கள் போன்ற விஷயங்களையெல்லாம் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்

உதாரணமாக, படம் பார்க்கத் தியேட்டருக்குப் போகிறேன் என்று உங்கள் பிள்ளை சொன்னால், யாருடன் செல்கிறான்? எங்கே செல்கிறான்? எப்போ காட்சி துவங்கும்? எப்போது முடியும் என அனைத்து விஷயங்களையும் தெரிந்து கொள்ளுங்கள்.

எங்கே போனான், எவருடன் போனான் என்று தெரியவில்லையே என புலம்பும் நிலையை வைத்துக் கொள்ளாதீர்கள். பக்கத்து தெருவுக்குப் போனால் கூட சொல்லி விட்டுப் போகும் பழக்கத்தைக் குழந்தைகளுக்கு ஊட்டுங்கள்.

கொஞ்சம் பெரிய பிள்ளைகளெனில் அவர்களுடன் கைபேசியில் தொடர்பில் இருங்கள். அவர்கள் பாதுகாப்பற்ற இடத்தில் இருப்பதாய் தோன்றினால் கவனத்தை அதிகப்படுத்துங்கள்.

### கடைவீதிகளில்..

கடைவீதிக்குப் போகும் போது குழந்தையைக் கூட்டிக் கொண்டு போனால் முதல் கவனம் குழந்தையின் மீது இருக்கட்டும். அழகான புடவையைப் பார்த்து குழந்தையை விட்டு விடாதீர்கள். பெற்றோரின் கவனம் சிதறும் நேரம் பார்த்து குழந்தையை யாரேனும் கடத்திச் செல்லும் வாய்ப்பு உண்டு.

யாரேனும் உங்கள் குழந்தையை உற்றுக் கவனிப்பதாய் தோன்றினால், அவர்களிடம் போய் சும்மா பேசுங்கள். முடிந்தால் உங்கள் கைபேசி கேமராவில் அவரைப் படம் எடுங்கள். நீங்கள் அவரைக் கவனித்தீர்கள், அவருடன் பேசினீர்கள் என்றாலே அடையாளம் தெரிந்து விட்டது என அந்த நபர் விலகி விடுவார்.

குழந்தை ரொம்ப கியூட் அதுதான் பார்த்தேன் என யாரேனும் சொன்னால், நன்றி என ஒரு புன்னகையைக் கொடுத்து விட்டு நடையைக் கட்டுங்கள். அவருடன் அமர்ந்து உங்கள் குழந்தையின் சாதனைகளையெல்லாம் பட்டியல் போட வேண்டாம்.

உங்கள் குழந்தையை யாராவது நெருங்குகிறார்கள், பேசுகிறார்களெனில் உடனே அந்த இடத்திற்குச் செல்லுங்கள். அந்த நபரைப் பற்றிய விவரங்களை கேளுங்கள்.

### காரில் போகும்போது

காரில் ஏறினதும் முதல் வேலை என்ன ? சீட் பெல்ட் போட வேணும் என்று நாலு நாள் சொன்னால், ஐந்தாவது நாளில் இருந்து குழந்தை தானாகவே சீட் பெல்ட் போடப் பழகிவிடும். அப்புறம் ஒருவேளை நீங்கள் சீட் பெல்ட் போடாவிட்டால் உங்களிடம் அதே கேள்வியைக் குழந்தையே கேட்கும் !

சீட் பெல்ட் போடுவது கார் பயணத்துக்கு மிக மிக முக்கியம். அது பக்கத்தில் இருக்கும் கோயிலுக்குப் போனாலும் சரி, தூரத்தில் இருக்கும் சொந்த ஊருக்குப் போனாலும் சரி. அலட்சியம் வேண்டாம்.

என்னதான் காரில் பல வசதிகள் இருந்தாலும் சீட் பெல்ட் போடாமல் பயணித்தால் பாதிப்பு பயங்கரமாக இருக்கும் என்பது நினைவில் கொள்ள வேண்டிய விஷயம். குழந்தை மீது அக்கறை இருக்கிறதா, சீட் பெல்ட் போடப் பழக்குங்கள்.

### குழந்தையோடு பேசுகிறீர்களா ?

உங்கள் குழந்தையின் பாதுகாப்புக்கு முதல் தேவை என்ன தெரியுமா ? உங்களிடம் உங்கள் குழந்தை பாதுகாப்பை உணர்வது தான். என்ன பிரச்சினை என்றாலும், அம்மா பார்த்துக் கொள்வார், அப்பா பார்த்துக் கொள்வார் எனும் ஆழமான நம்பிக்கை குழந்தைகளுக்கு இருக்க வேண்டியது அவசியம்.

அதற்கான முதல் தேவை குழந்தைகள் கூட போதுமான அளவு நேரத்தை செலவிட வேண்டும். குழந்தைகளுடைய மனநிலை எப்படி இருக்கு ? அவர்களுடைய நாள் எப்படிக் கழிந்தது? அவர்கள் என்ன செய்தார்கள்? போன்ற எல்லா விஷயங்களையும் அன்புடன் கேட்டறியுங்கள். அவர்களுக்கு ஒரு நல்ல ஆறுதல் தருபவராக இருக்க வேண்டியது அவசியம்.

குறிப்பாக பள்ளி செல்லும் குழந்தைகள், பதின்ம வயதுப் பள்ளைகளிடமெல்லாம் அதிக நேரம் உரையாடலில் செலவிடுங்கள். அவர்களுடைய வழிகளைச் செம்மைப்படுத்தவும், அச்சுறுத்தல்கள் பற்றி அவர்கள் அறிந்து கொள்ளவும், உங்கள் உரையாடல் உதவ வேண்டும். அவர்களுடைய பயங்கள், கவலைகள் எல்லாம் உங்களுக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும்.

ஐயோ, இதெல்லாம் நான் எப்படி அம்மாவிடம் சொல்வது என குழந்தை நினைக்கக் கூடாது. எதுவாக இருந்தாலும் அம்மாவிடம் சொல்வேன் என குழந்தை நினைக்குமளவுக்கு இயல்பாகப் பழகுங்கள்.

### பள்ளி செல்லும் போது

பள்ளிக்கூடத்திற்குக் குழந்தைகள் நடந்து போகிறதென வைத்துக் கொள்ளுங்கள். குழந்தைகளோடு சிறிது நாள்கள் நீங்களும் கூடவே நடந்து செல்லுங்கள்.

சாலையில் எப்படி நடப்பது, எங்கெங்கே கவனமாக இருப்பது போன்ற விஷயங்களைச் சொல்லிக் கொடுங்கள். எந்த இடம் பாதுகாப்பானது, யாரிடம் உதவி கேட்கலாம் போன்ற விஷயங்களையும் அவர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபருக்கும் ஆசிரியருக்கும் இடைவெளி இருக்கக் கூடாது

"வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்'' என்ற கவிஞர் கண்ணதாசனின் சினிமாப் படப் பாடல் வரிகள், அதன் ஆழ்ந்த தத்துவக் கருத்தால் எமது எண்ணத்தில் நல்ல சிந்தனைகளை விதைக்கக் கூடியதாக அமைகின்றது. 'வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்' என்பது ஒரு விதத்தில் முறையற்ற விதத்தில், வழிமுறை தவறிக் கூட வாழலாம் என்று கருத வைத்து விடக் கூடாது. ஆனால் இன்றைய உலகம் வாழ்வதற்கான வழியைப் பல சந்தர்ப்பங்களில் பிழையான விதத்திலும் கடைக்கொள்வதைப் பார்க்கிறோம். எம்மில் சிலர் பிழையான வழியில் முன்னேறி பட்டங்கள் பெற்று புகழைத் தேட முற்படுகிறார்கள்.

ஒவ்வொருவரும் தத்தமது பெயருக்குப் பின்னால் ஒரு பட்டம் இருக்க வேண்டும் என்று விரும்புவதுண்டு. அதற்காகவே உழைப்பார்கள். தமது பெயரை எழுதும்போது, தமது பட்டத்தையும் பெயரோடு சேர்த்து எழுதும் பழக்கம் எமது மத்தியில் இருந்து வருகிறது. அப்பொழுது தான் தம்மைச் சமூகத்தில் அடையாளப்படுத்தியதாக நினைக்கிறார்கள். கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள், தாம் பெற்ற பொருத்தமான பட்டத்தை தமது பெயருக்குப் பின்னே எழுதிக் கொள்கிறார்கள். வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் தமது பெயருக்குப் பின்னே அந்தத் துறைகளுக்குப் பொருத்தமான பெயரைச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

பல பேர் பட்டம் பெறுவதற்காகவே அயராது உழைக்கின்றனர். ஆனால் சிலர் பட்டத்தை எதிர்பார்த்து உழைப்பதில்லை. பட்டம் தமக்கு கிடைக்கும் போதும் அதைப் பெரிதுபடுத்துவதில்லை. யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் க.கைலாசபதி இப்படியாக வாழ்ந்து மறைந்தவர். இவ்வாறான மனிதர்கள் வாழ்வில் தமது சமூகத்தைப் பற்றிச் சிந்திப்பவர்களாக இருந்தார்கள். முன்னைய காலங்களில் ஊருக்கு ஓர் ஆசிரியர் இருந்து அந்த ஊரை வெளிஉலகுக்கு வெளிப்படுத்தினர். ஆனால் இன்று ஊரே ஆசிரியர்களாக இருந்தும், பின்தங்கிய பிரதேசத்தை கல்வித் துறையில் முன்னேற்ற முடியவில்லை. சமூகத்தில் பெயர் வாங்க வேண்டும், அந்தஸ்தைப் பிரபல்யப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இதற்குக் காரணமாக இருக்கலாம். அதற்கும் அப்பால் பணம் சேர்க்க வேண்டும் என்ற காரணமும் இருக்கிறது. அப்பொழுது தான் ஊரில் வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்து சமூகத்தில் தம்மை அடையாளப்படுத்த முடியும் என்று நினைக்கிறார்கள்.

ஆனால் முன்னைய காலங்களில் எந்தவித வசதி வாய்ப்புக்களும் இல்லாமல் வாழ்ந்து தமது ஊரை முன்னேற்றினர் ஆசிரியர்கள். இன்றைய காலம் அப்படி இல்லை. பல வசதி வாய்ப்புக்களுடன் இருக்கும் ஆசிரியர்களால் எமது ஊரை முன்னேற்ற முடியாமல் இருக்கிறது.

எனது நண்பர்களில் ஒருவன் தனது தந்தையாரின் 31 ஆம் நாள் நினைவு மலரில் அவரது இளமைக் காலப் புகைப்படம் ஒன்றைப் பிரசுரிக்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றான். கைவசம் அவனிடம் தகப்பனாரின் புகைப்படம் இல்லாததால் நானும் அவனும் அவனது அப்பா படித்த யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றுக்கு அண்மையில் சென்றிருந்தோம்.

படிக்கும் காலத்தில் அவனது அப்பா உதைபந்தாட்டத்தில் சிறந்த வீரராக இருந்தபடியால், கண்டிப்பாக அவரது நிழற்படம் அந்தப் பாடசாலையில் இருக்கும் என்று எண்ணிச் சென்றோம். தகப்பனாரின் நிழற்படத்தை எடுப்பதற்கு அந்தப் பாடசாலை அதிபரைச் சந்தித்து அது சம்பந்தமாகக் கேட்பதற்கு முன்னர், அந்தப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் எமக்குத் தெரிந்த ஆசிரியர் ஒருவரைச் சந்தித்தோம். அந்த ஆசிரியர் பாடசாலையின் வரவேற்பறையில் எம்மை இருக்கும்படி கூறி விட்டுச் சென்றுவிட்டார்.

அந்த வேளையில், அதிபர் அறையில் அதிபருடன் இருவர் கதைத்துக் கொண்டிருந்தனர். அந்த இருவரும் அதிபர் அறையை விட்டு வெளியேறிப் போகும்வரை அதிபர் அறைக்குள் செல்ல முடியாமல் ஆசிரியர் அங்கும் இங்கும் நடந்து திரிந்ததைப் பார்த்தேன். நேரம் கடந்தது. ஆனால் அதிபர் அறையை விட்டு அந்த இருவரும் வெளியேறவில்லை. உடனே ஆசிரியர் எமது அருகில் வந்து "இது சம்பந்தமாக அதிபருடன் கதைத்துப் போட்டு சொல்லுகிறன்'' என்றார். பாடசாலையை விட்டு வெளியேறினோம்.

இரண்டு நாள்கள் கழிந்தது. அந்த ஆசிரியர் கைபேசியில் நண்பனுடன் தொடர்பு கொண்டு 'அப்பாவின் புகைப்படத்தை எடுக்க முடியவில்லை; குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு முந்திய கால நிகழ்வுப்படங்கள் இடப்பெயர்வின் போது அழிந்து போய்விட்டன' என்றார்.

## கோப்பாய் சண்முகம்

## கதையோடு செய்தி

ஒரு தேவைக்காக பொது மக்கள் பாடசாலைக்கு செல்லும்போது அந்தப் பாடசாலை அதிபர் அவர்களை சந்திக்காமல் திருப்பி அனுப்புவது முறையல்ல. அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறார்களோ இல்லையோ, அவர்களுடன் முகம் கொடுத்து கதைக்கும் பண்பு இருக்கவேண்டும்.

அத்தோடு ஆசிரியருக்கும் அதிபருக்கும் இடையில் இடைவெளி இருக்கக் கூடாது. இருவருக்கும் இடையில் புரிந்துணர்வு இருந்தால்தான் பாடசாலை நடவடிக்கைகள் ஒழுங்காக நடைபெறும்.

வலிகாமம் பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் அதிபர், அந்தப் பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியரொருவர் விடுமுறையில் செல்லும்வேளை, அவருக்குப் பதிலாக ஒரு ஆசிரியரை நியமித்ததாகக் கூறி விடுமுறையில் சென்ற ஆசிரியரிடம் இருந்து பணம் அறவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக கடும் வருத்தம் என்றாலும் ஆசிரியர்கள் விடுமுறை எடுக்கப் பயப்படுகின்றனராம். காரணத்தோடு விடுமுறைகளை அனுமதிக்க வேண்டும். விடுமுறைக்கு நியாயமான காரணம் இருப்பின், அதனை மறுக்கக் கூடாது. காரணத்தோடு விடுமுறையை எடுக்கும் ஆசிரியர்களிடம் இருந்து பணம் வசூல் செய்வதென்பது தவறான செயற்பாடு.

பாடசாலையின் முன்னேற்றத்துக்கு அதிபர்கள் காரணமாக அமைகின்றார்கள். பாடசாலைகளின் முன்னேற்றத்துக்காக அதிபர்கள் தமது நடவடிக்கைகளை கடும் போக்கில் மேற்கொள்வார்களாயின், அது பாடசாலையை மட்டுமல்ல அந்தப் பிரதேசத்தையும் பின்நோக்கிய நிலைக்கே இட்டுச் செல்லும் என்பது உண்மை.

எனவே பாடசாலை அதிபர்கள் அந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கும் பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் ஒருசேர உழைக்க வேண்டும்.

அதிபர் என்றால் சமூகத்தில் பிரபல்யமான பதவியாகும். அந்தப் பதவியைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் சிறந்த பாடசாலை அதிபர் என்ற நற்பெயர் கிடைக்கும். இல்லாது போயின், ஒரு காலத்துக்கு முன்னே இருந்த பாடசாலை அதிபரைத்தான் காலம் கடந்தும் நினைவுபடுத்த வேண்டி இருக்கும். இதனை உணர்ந்தாவது பாடசாலை அதிபர்கள் செயற்படக்கூடாதா? ★


# பச்சை உடுப்புக்காரரின் பின்னால் அவர்...

எமது மீனவர்கள் இன்று படுகின்றபாடு மிகப்பெரும்பாடாக இருக்கின்றது. இந்திய மீனவர்களது அத்துமீறல்கள், தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள், இராணுவக் கெடுபிடிகள் என்று அந்தப் பட்டியல் தொடர்கின்றது.

இப்போது இறுதிப் போர் நடந்த இடத்தில் தொழில் செய்கின்ற மீனவர்கள் எல்லாவற்றாலும் பெரும்பாடுபடுகின்றனர். 'அவங்கள்' இருந்த காலத்தில் இலாபகரமான சமாசமாக இருந்து பல கோடிகளைச் சம்பாதித்த குறித்த மீனவ சமாசம் இன்று எல்லாவற்றையும் அழித்துக் கொண்டிருக்கிறது.

இப்ப வடக்கில எல்லா இடத்திலையும் மூக்கை நுழைக்கிற ஏ.கே வைச்சிருக்கிற பச்சை உடுப்புக்காரர்கள் தலையைப் போடுவதால்தான் இந்த நிலைமை.

குறித்த சமாசத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பவர், பச்சை உடுப்புக்காரரின் விசுவாசி. அவர்களாலேயே ஏனையோரை மிரட்டி நியமனம் பெற்றவர். அவர் பொறுப்பெடுத்த பின்னர் அந்தச் சமாசம் அனேகமாக அழிவை நோக்கியே போய்க் கொண்டிருக்கிறதாம். பச்சை உடுப்புக்காரர் ஏதாவது நிகழ்வு நடத்துவதெண்டால், இவர்தான் காசை அள்ளிக் கொடுக்கிறவராம்.





மேலும் சனத்துக்கு முன்னால, தென்னிலங்கை மீனவர்களுக்கு இங்க அனுமதி கொடுக்கக் கூடாது என்று வீரவசனம் பேசி விட்டு, பின்னர் பச்சை உடுப்புக்காரரின் முகாமில் வைத்து இவரே அனுமதி கொடுக்கும் வேலையும் நடைபெற்று வருகின்றது என்று சொல்லுகினம்.

இப்ப சனத்துக்குச் சொந்தமான வாடியை தன்ர வீட்டுச் சொத்தா பாவித்து, எல்லாத்தையும் நாசமாக்கிறார் என்று மீனவர்கள் குறைபடுகின்றனர். என்ன செய்ய அவையால ஒன்றும் செய்யேலாது. எல்லாம் பச்சை உடுப்புகாரரிட்ட இருக்கிற ஏ.கேயின்ர வேலை.

இதே மாதிரி யாழ்ப்பாணத்திலையும் ஒரு ப[illegible]வரும் கொஞ்சம் செய்யுறாராம். அதைப் பற்றி பின்னர் பார்ப்பம்...

நக்கல் நரசிம்மன்

# கழுதையிடம் கற்றுக் கொண்ட குரு



ஜென் துறவி ஒருவர் தன் சீடர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவரிடம் சீடர்களுள் ஒருவன், "குருவே, நீங்கள் இன்பத்தில் மகிழ்ச்சியோ, துன்பத்தில் சோர்வோ அடைவதில்லை. ஆனால், இரண்டையும் தாங்கள் சமமாக எடுத்துக் கொள்கிறீர்கள் அல்லவா? இந்தக் குணம் உங்களுக்கு எப்படி வந்தது?'' என்று கேட்டான்.

அதற்கு அந்தக் குரு "கழுதையிடமிருந்து தான்...'' என்று உடனே கூறினார். உடனே அனைத்து சீடர்களும் "என்ன கழுதையிடமிருந்தா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டனர்.

"ஆமாம், அதனிடமிருந்து தான் கற்றுக் கொண்டேன். நீங்கள் கழுதையைக் கூர்ந்து கவனித்ததில்லையா? காலையில் அது அழுக்குத் துணிகளைச் சுமந்து செல்லும். மாலையில் சுத்தமான துணிகளைச் சுமந்து செல்லும் தானே! அதை வைத்து தான்'' என்று சொன்னார்.

அப்போது மற்றவன் "இதில் என்ன குருவே இருக்கிறது, நீங்கள் [illegible] கற்று கொள்வதற்கு'' என்று கேட்டான். அதற்கு குரு "ஆமாம், [illegible] அழுக்குத் துணிகளைச் சுமக்கும் போது வருத்தப்படுவதும் இல்லை, சுத்தமான துணிகளை சுமக்கும் போது மகிழ்வதும் இல்லை. அதைத் தான் கற்றுக் கொண்டேன்'' என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மாணவர்களின் போராட்டம்;

# புதிய திசை நாடுவதற்கான முதற்காலடி

மாணவர்கள் போராட்டத்தில் குதிக்கிறார்கள் என்றால் அந்தப் போராட்டம் ஒரு முடிவினை எட்டும் என்பது வரலாறு. அந்த வகையில் சென்னை லெயோலாக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் குதித்துள்ளார்கள் என்பது ஈழத் தமிழர்களுக்கு கிடைத்துள்ள பெரும் வெற்றியாகும்.



● துன்னாலைச் செல்வம்

இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்று சென்னையில் பல போராட்டங்கள் பல வடிவங்களில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. 'தான் ஆடா விட்டாலும் தன் தசை ஆடும்' என்று சொல்வார்கள். அந்தளவுக்கு தொப்புள் கொடி உறவான தமிழ்நாட்டு மக்கள், ஈழத்தமிழர்களுக்கான போராட்டங்களில் குதித்துள்ளனர். முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை சனல் 4 காணொலியாக வெளியிட்டு வருகிறது. இந்த காணொலிக் காட்சிகளைப் பார்த்த பின்பே சென்னைத் தமிழர்கள் முன்னரை விடத் தற்போது தீவிரமாகக் கொந்தளிக்கத் தொடங்கியுள்ளனர்.

இறுதிப் போரில் இலங்கை அரச படைகளால் படுபயங்கரமான முறையில் தமிழர்கள் மக்கள் படுகொலை செய்யப்பட்ட காணொலிகளை பார்க்கின்ற ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் உணர்வுகள், இப்பொழுது வெளிப்படுகின்றன. இந்த உணர்வுகள் மாணவர் மட்டத்தில் இருந்து அரசியல் வாதிகள் வரை இலங்கை அரசுக்கு எதிராகப் போராடக் காரணமாக அமைந்துள்ளன. தீக்குளிப்பு, சாலை மறியல், உண்ணா விரதம் போன்ற வடிவங்களில் போராட்டங்கள் சென்னையில் வெடித்துள்ளன. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் இடையே இடம்பெற்ற போர் தொடர்பாக, சென்னையில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இன்று தொடர்ந்து இடம்பெறும் போராட்டங்கள் போல் அன்று இடம்பெற்றிருந்தால் இத்தனை ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழக்க நேர்ந்திருக்காது.

மாணவர்கள் போராட்டத்தில் குதிக்கிறார்கள் என்றால் அந்தப் போராட்டம் ஒரு முடிவினை எட்டும் என்பது வரலாறு. அந்த வகையில் லெயோலா கல்லூரி மாணவர்கள் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் குதித்துள்ளமை என்பது ஈழத்தமிழர்களுக்கு கிடைத்துள்ள பெரும் அனுகூலமாகும்.

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலைக்கு சர்வதேச போர்க்குற்ற விசாரணை, தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் உண்ணாவிரதம் மற்றும் வீதி மறியல் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னையில் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக மாணவர்கள், மாநிலக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் லெயோலாக் கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவாகப் போராட்டம் நடத்தினர். திருச்சி சென்.ஜோசப் கல்லூரி மாணவர்கள் பத்துப் பேர் காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்கள், காரைக்குடி அழகப்பா கல்லூரி, ஆனந்தா கல்லூரி மாணவர்கள் சாலை மறியலில் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

மேலும் மதுரை, பெரம்பலூர், தஞ்சாவூர், மன்னார் குடி என ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர்கள் ஈழத் தமிழர்களுக்காகப் போர்க்கோலம் பூண்டுள்ளனர்.

ஈழத்தில் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் லெயோலா கல்லூரி மாணவர்களுக்கு ஈழம் எங்கு இருக்கிறது என்பதே தெரியாது. சிலோன் என்றால் தான் அவர்களுக்கு விளங்கும். இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் சம்பந்தமாக அறிந்து கொள்வதற்கான எந்த வாய்ப்பும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இதற்கு டெல்லி அரசு மட்டும் காரணமாக அமையவில்லை. தமிழ் நாட்டு தலைவர்களும் காரணமாக அமைந்தார்கள். காங்கிரஸின் எடுபிடியாக தமிழகக் கட்சிகள் செயற்பட்டதால் ஈழப் பிரச்சினை தொடர்பாக சென்னை மக்களுக்கும் முழுமையாகத் தெரியப்படுத்த முடியாமல் இருந்தது. இன்று சனல் 4 காணொளியைச் சென்னை மக்கள் பார்த்ததால் கொந்தளிக்கத் தொடங்கியுள்ளனர்.

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் சிறையில் அடைக்கப்பட்ட நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரை விடுதலை செய்யுமாறு இந்திய மத்திய அரசைக் கோரி ஈழத்துக்கு ஆதரவானவர்கள் கையெழுத்து வேட்டையில் இறங்கினர். அப்பொழுது லெயோலாக் கல்லூரி மாணவர்கள் கையெழுத்து இடுவதற்கு மறுத்துவிட்டனர். ஈழப் போராட்டம் பற்றி சிறிதளவு கூட அவர்களுக்குத் தெரியவாய்ப்பிருக்கவில்லை.

சென்னையில் பிரபல்யமான லெயோலாக் கல்லூரியில் பல மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். சென்னையில் இடம்பெறும் மக்கள் போராட்டங்களில் பங்கு பற்றாத இவர்கள் எப்படி ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான போராட்டத்தில் குதித்துள்ளனர். அதற்கு இந்த சனல் 4 காணொலி தான் முக்கிய காரணமாக அமைகின்றது என்று கொள்வது தப்பன்று.

இலங்கை அரசே, சனல் 4 காணொலியைப் பார்த்து மூச்சிழந்து போய் இருக்கும் நிலையில், எமது சகோதர நாடான இந்தியா வாழ் தமிழர்கள் கொந்தளிக்காமல் இருப்பரா? அதிலும் சென்னை மாணவர்களைக் கூடுதலாகப் பாதித்த சம்பவம் எது என்று பார்த்தால், அது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் கடைசி மகன் பாலச்சந்திரனின் கொலையாகும். பாலச்சந்திரன் இலங்கை அரச படைகளால் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை சனல் 4 காணொலி வெளியிட்டிருந்தது. அந்தச் சிறுவர்களின் முகத்தை பார்த்ததும் மாணவர்கள் பொங்கி எழுந்தார்கள்.

இந்தியாவில் அண்மையில் டெல்லியில் மாணவர் போராட்டம் ஒன்று இடம்பெற்றது. அங்கே மாணவி ஒருவர் ஓடும் பஸ்ஸில் வன்புணர்வு செய்யப்பட்ட பின்னர் பஸ்ஸிலிருந்து வெளியே வீசப்பட்டு படுகாயம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் இறந்தார். இந்தச் சம்பவத்தால் டெல்லி மாணவர்கள் கொதித்து எழுந்தனர். போராட்டம் ஒன்றை நடத்தினர். அதன் காரணமாக மாணவியைக் கொலை செய்த ஆறு பேர் திகார் சிறையில் அடைக்கப்பட்டனர். திகார் சிறையில் அடைக்கப்பட்ட நபர்களில் பஸ் சாரதி சிறைக்குள்ளேயே தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

அதனை அடுத்த மிகப் பெரிய மாணவர் போராட்டமாகச் சென்னை மாணவர்களின் போராட்டம் அமைந்துள்ளது. இந்தப் போராட்டம் பெரிய ஒரு செய்தியை ஈழத்திற்கு மட்டுமல்ல இந்திய அரசுக்கு சொல்லியிருக்கிறது. இந்திய அரசு இதுவரை காலமும் ஈழப் பிரச்சினையில் கண்மூடியிருந்தது. மாணவர்களின் போராட்டத்தை அடுத்து விழித்துக் கொண்டுள்ளது எனக் கொள்வது தப்பன்று. அந்த மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிடும் அளவுக்கு அரசு செயற்பட்டாலும் இந்த நிலைமை இன்னும் எத்தனை காலத்திற்குத் தாக்குப் பிடிக்கப் போகிறது என்பதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புவியின் தோற்றமும் பாதுகாப்பு முறையும்

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*

அருணா தர்மலிங்கம்
வந்தாறுமூலை.



பூமியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தலையாய கடமை மக்கள் அனைவரையும் சார்ந்ததாகும். நம்மைச் சூழவுள்ள நிலம், நீர் நிலைகள், வளிமண்டலம் போன்றவை பூமியுடன் நேரடியாகவும், மறைமுகமாவும் தொடர்புடையன வாகும்.

இவற்றின் மூலம் பெறப்படுகின்ற உகந்த செயற் பாடுகளே நமது உடல் ஆரோக்கியத்துக்கு வித்திடுகின்றன. எனவே நாம் வாழுகின்ற பூமியைப் பாதுகாப்பதனால் இது சாத்தியப்படலாம்.

**இனி புவியை பாதுகாத்தல் என்றால் என்ன? பாதுகாப்பிற்கு எமது பங்களிப்பு எத்தகையது என்பதை நோக்குவோம்**

பூமியிலிருந்து சுத்தமான நீரைப் பருக வேண்டிய உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உலகில் மூன்றில் இரண்டு பகுதி சமுத்திரமாகவே(Ocean) காணப் படுகின்றது. அதற்காக நாம் கடல் நீரைப் பருகி எமது தாகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாது. அதிலிருந்து சாதாரண உப்பையும், உடல் ஆரோக்கியத்திற்கு உதவுகின்ற கடல் மீனையும் பெறலாம். காலம்பூராவும் கடல் சாந்தமாகத் தென்பட்டாலும் கடலுக்கு அடியில் திடீரென ஏற்படுகின்ற பூகம்பம் காரணமாக சுனாமி (Tsunami)அலை உருவாகி கரையோரக் கிராமங்களைக் காவு கொண்டு விடுகின்றது. இதற்கு இரண்டாயிரத்து நான்கு டிசெம்பர் இருபத்தாறாம் திகதி, தெற்கு ஆசிய கரையோரத்தைத் தாக்கிய கடல்கோள் உகந்த சான்றாகும்.

அடுத்து நாம் சுத்தமான காற்றைச் சுவாசிக்க வேண்டும். உண்ணுகின்ற உணவு, வசிக்கின்ற வீடு, உடுத்தும் உடை எல்லாமே தூய்மையாக இருந்தாலே இவை அனைத்தும் சாத்தியமாகும். எனவே புவியை எப்பாடு பட்டாகிலும் பாதுகாப்பாக வைத்திருத்தல் இன்றியமையாததொன் றாகும்.

பேராசை கொண்ட மனிதன் பூமிக்கு அளப்பரிய தீங்குகளை மேற் கொண்ட வண்ணமே உள்ளான் என்பதை மறுப்பதற்கில்லை. இதனால் பாதுகாப்பற்ற தன்மைக்கு புவி தள்ளப்படுகின்றது. உலக மயமாக்கல் என்ற போர்வையின் அடிப்படையில் கைத்தொழில் நாடுகள் எல்லாம் பூமியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்த வண்ணமே உள்ளன. புவியை அழிவுப் பாதையில் இட்டுச்செல்கின்ற காரணிகளில் மனிதனின் செயற்பாடுகள் தான் முதலிடத்தை வகிக்கின்றது. பூமியின் வளங்களில் வளிமண்டலமும் மறைமுகமாக பங்களிப்பு செய்கின்ற தென்பதை முன்னர் பார்த்தோம். ஆகவே இந்த வளத்தைப் பயன்படுத்தி காற்றாடிகளை இயக்கி நீரை இறைக்கவும், மின் உற்பத்தியைப் பெறவும் இயலுமென இலங்கையின் முன்னாள் விஞ்ஞானிகளில் ஒருவரான கலாநிதி. ஏ.என்.எஸ். குலசிங்க பரிந்துரைத்தார்.

**இனி பூமியின் தோற்றத்தையும் சுற்றுப் பாதையையும் சற்று நோக்குவோம்.**

ஒரு கடற்கரையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் ஒரு கப்பலை நாம் உற்று நோக்கினால் அது வேகமாகச் சென்று எம் கண்ணிலிருந்து முற்றாக மறைந்து விடுவதற்கு முன் முதலில் அதன் கீழ்ப் பகுதியும் பின்னர் சிறிது சிறிதாக அதன் மேற்பகுதியும் மறைவதைக் காண்கின்றோம். இதனால் பூ உருண்டை வடிவமானது என்பது நிரூபணமாகிறது. அதே வேளை சந்திர கிரகணம் (Moon Eclipse) நிகழும் போது பூமியின் நிழல் வட்டமாக தென்படுவதினால் புவி உருண் டை என்பது உறுதியாகின்றது.

*(வளரும்)*


## உங்களது பணத்தை வீண் விரையமாக்கவோ அல்லது உயிரை ஆபத்தில் இட்டுச்செல்லவோ வேண்டாம்



பிரெண்டன் ஓ கொணர்
அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை தொடர்பான அமைச்சர்

இதுபற்றி மிகத் தெளிவாகக்கூற எனக்கு இடமளியுங்கள். மிகவும் நியாயமான ஒரு காரணமின்றி, எந்தவொருவருக்கும் புகலிடம் வழங்க, அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறானவர்கள் இலங்கைக்கு வரும் அடுத்த விமானத்திலேயே மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். எனவே, உங்கள் பணத்தை வீணாக விரையம் செய்ய வேண்டாம். உங்களது உயிரை ஆபத்தில் இட்டுச் செல்ல வேண்டாம்.

ஏற்கனவே இவ்வாறு இங்கு வந்த நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்திலும் இவ்வாறு வருபவர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற மிக நியாயமான காரணம் இல்லையேல், துரிதமாக உங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க நேரிடும். அவ்வாறானவர்களுக்கு பணம் அல்லது வேறு எந்த வகையிலான ஒத்துழைப்புக்களும் கிடைக்க மாட்டாது என்பதைக் கூறவேண்டும். தனது பணத்தை வீண் விரையம் செய்து, உயிரைப் பணயம் வைத்து, கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு வர முயற்சி செய்வது சிறிதேனும் பயனுள்ள ஒரு முயற்சியல்ல. மீண்டும் இலங்கைக்கு வரக்கிடைப்பது மாத்திரமே அதன் ஒரேயொரு பிரதிபலனாகும்.

உங்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல பொய் கூறுவார்கள். பொய் சத்தியம் செய்வார்கள். அவ்வாறு வருபவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை என்று நான் மீண்டும் கூறுகின்றேன். எந்தவித துரித பிரதிபலனும் கிடைப்பதில்லை. எவ்விதமான விசேட கவனிப்புகளும் கிடைக்காது.

மிகவும் ஆபத்தான முறையில் மேற்கொள்ளப்படும் படகுப் பயணங்களில் இருந்து மனிதர்களைப் பாதுகாக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றது.

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை எவ்வாறு மாற்றியுள்ளது?

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மாற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ள மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வதேச கொள்கைகளுக்கு அமையாத அனைவரும், துரிதமாக மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள்.

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை ஏன் மாற்றியது?

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற படகுச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய படகுச் சவாரிகளினால், மக்களைக் காப்பாற்ற அவுஸ்திரேலிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதனால் அவர்களுக்கு எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை. உயிரைப் பணயம் வைத்து இங்கு வந்தாலும், அவர்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அவர்களுக்கு கிடைக்கும் ஒரேயொரு விடயம் யாதெனில், கையிலுள்ள பணம் விரயமாவதுடன் ஆழ்கடலில் தமது உயிரை மாய்த்துக்கொள்வதும் மாத்திரமே.




அவுஸ்திரேலியாவுக்கு படகில் போக வேண்டாம்
Australian Government
(C/7055)




# இரத்தம் என்றால் என்ன?

கார்த்திகா
நல்லூர்.

குழந்தை தாயின் வயிற்றில் இருக்கின்றபோது, தாயின் இரத்தமே குழந்தைக்குத் தேவையான அனைத்தையும் வழங்குகின்றது. பின்னர் எலும்பு மச்சைகளில் இரத்தம் உற்பத்தி செய்யப்படுகிறது. இரத்தத்தில் செங்குருதிக் கலங்கள், வெண்குருதிக் கலங்கள், இரத்தம் உறையாக் கலங்கள் எனப் பல இருக்கின்றன. இவற்றில் செங்குருதிக் கலமே மிகவும் முக்கிய மானதாகும். நாம் விரும்பியோ விரும்பாமலோ இது உற்பத்தி செய்யப்படும். இதனுடைய இயற்கையான ஆயுள்காலம் 120 நாள்களாகும். இது உற்பத்தி செய்யப்பட்டு 120 நாள்களில் எமது மண்ணீரலில் அழிக்கப்பட்டு விடும். இவ்வாறு நாள் தோறும் 10 கோடி கலங்கள் வரை அழிக்கப்பட, அதேயளவு எண்ணிக்கை மீளவும் உற்பத்தி செய்யப் படுகின்றது. இரத்த தானத்தின் போது வெளியேறுகின்ற செங்குருதிக் கலங்கள் மிக விரைவிலேயே எமது எலும்பு மச்சைகளில் மீளவும் உற்பத்தி செய்யப்பட்டு விடும்.

மனிதனுக்கு இரத்தம் ஏன் அவசியம்?

நாம் ஒவ்வொருவரும் பிறந்த நேரம் முதல் இறக்கப் போகின்ற இறுதி மூச்சுவரை சுவாசிக்கின்றோம். காற்றிலுள்ள ஒட்சிசன் என்கின்ற உயிர்வாயு எமது சுவாசப்பைகளைஅடைந்ததும், அங்கிருந்து உயிர்வாயுவை இரத்தமே உடலின் சகல பகுதிகளுக்கும் கொண்டு செல்கின்றன.

இது தொடர்ச்சியாக நடைபெறாவிட்டால் மூச்சுத்திணறி நாம் இறந்து விடுவோம். நாம் உயிருடன் இருப்பதற்கு எமக்குச் சக்தி அவசியம். அதற்காகவே நாம் நாள்தோறும் இரண்டு மூன்று முறைகள் உண்ணுகின்றோம். இவை யாவும் இறுதியில் குளுக்கோசாக மாற்றப்படுகின்றது. இரத்தமே இதனை உடலின் சகல பகுதிகளுக்கும் கொண்டு செல்லுகின்றது. மேலும் உடலில் உண்டாகும் நச்சு கழிவுப் பொருள் களையும் இரத்தமே மீண்டும் காவி வரு கின்றது.

*இரத்த தானத்தினால் ஏற்படும் நன்மைகள்*

நாங்கள் தானமாகக் கொடுக்கின்ற அரைப்பை இரத்தம் ஒரு கர்ப்பிணித் தாயை அல்லது செப்ற்றிஸ்மியாவால் பாதிக்கப் பட்டிருக்கும் ஒரு குழந்தையை அல்லது காய மேற்படுகின்ற ஒரு பிள்ளையை சில வேளைகளில் உங்களையும் கூடக் காப்பாற்றும்.

உங்களுக்கு உயிராபத்தான திடீர்க் காயங்கள், நோய்கள் ஏற்படுகின்ற போது உங்களுக்கு இரத்த வங்கியினால் முன்னுரிமை கொடுக்கப்படும்.

உங்கள் மனைவி, பிள்ளைகள், தாய் சகோதரத்திற்கும் ஆபத்தான வேளைகளில் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. உங்களுடைய உடல்நிலை, இரத்த அழுத்தம், இருதய நிலைப்பாடு, இரத்தச் சோகை, இரத்தத்தில் வேறு ஏதும் நோய்கள் உண்டா என இரத்த தானமாக பெறப்படுவதற்கும் முன்னர் வைத்தியரினால் பரிசோதிக்கப்படும்

> நாங்கள் தானமாகக் கொடுக்கின்ற அரைப்பை இரத்தம் ஒரு கர்ப்பிணித் தாயை அல்லது செப்ற்றிஸ்மியாவால் பாதிக்கப் பட்டிருக்கும் ஒரு குழந்தையை அல்லது காய மேற்படுகின்ற ஒரு பிள்ளையை சில வேளைகளில் உங்களையும் கூடக் காப்பாற்றும்.

இதில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால், தேவையான வைத்திய ஆலோசனைகளும் வைத்திய உதவியும் உங்களுக்குச் செய்து தரப்படும்.

உங்களால் தானமாகக் கொடுக்கப்படுகின்ற இரத்தம், உடனே உங்களில் மீளவும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களுக்குப் புலப்படாத மோட்டார் சைக்கிள்



அன்றாட வாழ்வில் எத்தனையோ விதமான மோட்டார் சைக்கிள்களைக் கண்டிருப்பீர்கள். ஆனால் இதுவரை நீங்கள் கண்டிராத அளவுக்கு கண் களுக்கே புலப்படாத அற்புதமான மோட்டார் சைக்கிள் உருவாக்கப்பட்டுள்ளது.







# பறவைகளின் பாடல்களில் பிறந்ததே மனித மொழி



பறவைகள் வெளிப்படுத்தும் வெவ்வேறு வகையான ஒலிகள், மனிதர்கள் பேசும் மொழிகளுக்கு ஒத்தவையாகும். எனவே அவற்றில் இருந்து மனித மொழி பிறந்திருக்கலாம் என்று அண்மைய ஆய்வு தெரிவிக்கிறது.

பரிணாமவியலின் தந்தை என்று அழைக்கப்படும் சார்லஸ் டார்வின், 1871 ஆம் ஆண்டு தாம் எழுதிய நூலில், ''பறவைகளின் பாடல்களில் இருந்து, மனிதன் பேசக் கற்றுக்கொண்டிருக்கலாம்'' என்று தெரிவித்தார். தற்போது, அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அவர் கூறியது உண்மை என்று ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஆதி மனிதர்கள், தங்களுக்குள் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள சங்கேத மொழிகளைப் பயன்படுத்தினர். அதில் இரண்டு அடுக்குகள் இருந்தன. உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் முதல் அடுக்கில், வாக்கியத்தை மாற்றி அமைத்துக்கொள்ளத் தேவையான தகவல்கள் இருக்கும். மற்றொரு அடுக்கு, வாக்கியத்தின் மொத்த அர்த்தத்தையும் நிர்ணயிக்கக் கூடியது.



பறவைகள், தங்களுக்குள் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்தும் பல்வேறு வகையான ஓசைகளும், இதே தன்மை கொண்டிருப்பதை அமெரிக்காவின் தொழில்நுட்ப நிறுவனமொன்றைச் சார்ந்த மொழியியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆதி காலத்தில், காடுகளில் வாழ்ந்த மனிதர்கள், பறவைகள் வெளிப்படுத்தும் ஓசையைக் கவனித்து, பேசக் கற்றுக்கொண்டிருப்பர். 80 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், இரண்டு அடுக்குகளையும் ஒன்றிணைத்து, மேம்பட்ட, மொழி வடிவை உருவாக்கியுள்ளனர்.

**"பரிணாமவியலின் தந்தை என்று அழைக்கப்படும் சார்ள்ஸ் டார்வின் 1871 ஆம் ஆண்டு தாம் எழுதிய நூலில், "பறவைகளின் பாடல்களில் இருந்து, மனிதன் பேசக் கற்றுக்கொண்டிருக்கலாம்" என்று தெரிவித்தார். தற்போது, அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அவர் கூறியது உண்மை என்று ஒப்புக்கொண்டுள்ளனர்.**

# நோய்களைக் குணமாக்கும் யோகா



**உடற்பயிற்சி செய்வதால் உடல் எடை தான் குறையும் என்பது பலருக்குத் தெரியும். ஆனால் யோகா செய்தால் ஆஸ்துமா, மூட்டு வலி, நீரிழிவு, முதுகு வலி போன்ற பல நோய்களைக் குணப்படுத்த முடியும்.**

உடலில் எந்த மாதிரியான நோய்கள் ஏற்பட்டாலும் அதனைச் சரிசெய்யப் பல வழிகள் உள்ளன. அதில் மிகச்சிறந்த வழி உடற்பயிற்சி, யோகாவாகும். அதிலும் உடற்பயிற்சியை விட யோகாவுக்கு அதிக சக்தி உள்ளது.

உடற்பயிற்சி செய்வதால் உடல் எடை தான் குறையும் என்பது பலருக்குத் தெரியும். ஆனால் யோகா செய்தால் ஆஸ்துமா, மூட்டு வலி, நீரிழிவு, முதுகு வலி போன்ற பல நோய்களைக் குணப்படுத்த முடியும்.

**ஆஸ்துமா**

ஆஸ்துமாவை யோகாவால் சரிசெய்துவிட முடியும். அதிலும் மூச்சுப் பயிற்சிகளில் ஒன்றான பிரணாயாமத்தை தினமும் செய்து வந்தால், நாளடைவில் ஆஸ்துமாவைச் சரிசெய்துவிட முடியும்.

**நீரிழிவு**

குணப்படுத்த முடியாத நோய்களில் நீரிழிவும் ஒன்று. ஆனால் யோகாவில் ஒன்றான பாலாசனத்தை தினமும் செய்து வந்தால், இரத்தத்தில் சர்க்கரையின் அளவைச் சீராக வைக்கலாம்.

**உயர் இரத்த அழுத்தம்**

உயர் இரத்த அழுத்தமானது பல காரணங்களால் ஏற்படுகிறது. அதனை நாள்தோறும் பிராணயாமம் செய்து வருவதன் மூலம் சரிசெய்யலாம்.

**ஒற்றைத் தலைவலி**

போதிய இரத்தச் சுழற்சி உடலில் இல்லாததால், மூளைக்குச் செல்லும் இரத்தத்தின் ஓட்டம் குறைவாக இருக்கும் போது ஒற்றைத் தலைவலி ஏற்படுகிறது. எனவே உடலில் இரத்த ஓட்டத்தைச் சீராக வைப்பதற்கு சிரசாசனம் செய்ய வேண்டும்.

**முதுகு வலி**

கணினியின் முன் வேலை செய்வோர் பலர் பாதிக்கப்படும் பிரச்சினைகளுள் ஒன்று தான் முதுகு வலி. இத்தகைய முதுகு வலியைப் போக்க சூரிய நமஸ்காரம் செய்து வலியைச் சரிசெய்யலாம்.

**மனஇறுக்கம்**

மன அழுத்தத்தைப் போக்க சிறந்த வழி என்னவென்றால், அது யோகா தான். எனவே மாத்திரைகளை போட்டு மனதை அமைதிப்படுத்த விரும்பாதவர்கள், அதனைச் சரிசெய்ய உட் [illegible] நிலையைச் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான அன்பான இல்லத்தை யாழ்ப்பாணத்தில் உருவாக்கும் எஸ்.ஓ.எஸ்



சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளினால் தாய், தந்தை உறவினர்களால் கைவிடப்பட்ட சின்னஞ் சிறுவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்கும் நோக்கத்தோடு உலகில் 133 நாடுகளில் 500இற்கும் அதிகமான எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, இவ்வமைப்பின் மூலம் ஆயிரக்கணக்கான சமூக சேவைகளும், செயற்றிட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

சுமார் 65 ஆயிரம் சின்னஞ்சிறுவர்கள் தாய் தந்தையற்றோர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, கல்வி கற்று சமுதாயத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். இதைத் தவிர 4.5 இலட்சத்திற்கும் அதிகமான பிள்ளைகள் குடும்ப வலுவூட்டல் திட்டம் மூலம் நன்மை பெறுகின்றனர். இரண்டாம் உலகப்போரின் தாக்கத்தால் 1949ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் டாக்டர் ஹேர்மன் மைனர் என்பவரால் ஆஸ்திரியா நாட்டின் இன்ஸ்டன் நகரத்தில் உருவாக்கப்பட்டதே எஸ்.ஓ.எஸ். சிறுவர் நல நிறுவனம்.

இன்று உலகமெங்கும் இதன் கிளைகள் வியாபித்து ஆதரவற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி வருகின்றன. இலங்கையிலும் பெற்றோர்களால் கைவிடப்பட்ட மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வழி தவறிப்போன சிறுவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், சமுதாயத்தில் அவர்களும் ஓர் அங்கமாக வாழவும் இலங்கையில் முதலாவது எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமம் 1979ஆம் ஆண்டு பிலியந்தலையில் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 1984 ஆம் ஆண்டு' இரண்டாவது எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமம் நுவரெலியாவில் ஆரம்பிக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டு காலியிலும், 1993 ஆம் ஆண்டு அநுராதபுரத்திலும், 1999 ஆம் ஆண்டு மொனறாகலையிலும், 2009ஆம் ஆண்டு வடக்கிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமங்களில் நுவரெலியாவிலும் யாழ்ப்பாணத்திலும் மாத்திரம் தமிழ் பேசும் சிறுவர்கள் இருக்கிறார்கள். ஏனைய நான்கு சிறுவர் கிராமங்களிலும் சிங்கள மொழிபேசும் சிறுவர்கள் மாத்திரமே இருக்கிறார்கள். அதேவேளை நுவரெலியாவில் தமிழ் ,சிங்கள மொழிபேசும் சிறுவர்களும் வசிக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. நுவரெலியாவில் 1984ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சிறுவர் கிராமத்தில், மலையகத்தில் உள்ள தோட்ட, கிராம,நகரப்பகுதியில் உள்ள சிறுவர்களுடன் வட,கிழக்குப் பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் சிறுவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். தற்பொழுது வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கென ஒரு கிராமம் அமைக்கப்பட்டு வருகிறது.

நுவரெலியாவில் 1984ஆம் ஆண்டு 7 சிறுவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சிறுவர் கிராமத்தில் தற்பொழுது 100 தமிழ்,சிங்கள சிறுவர்கள் வசிக்கின்றனர். இக்கிராமம் ஆரம்பிக்கப்பட்டு 28 வருடங்களில் 65 யுவதிகளும் 45 இளைஞர்களும் திருமணம் முடித்து வெளியே சென்றுள்ளனர். அத்தோடு 60 பேர் தொழில் நிமித்தம் இக்கிராமத்திலிருந்து வெளியேறியுள்ளனர். மேலும் இக்கிராமத்தில் உள்ள 12 மாணவர்கள் புலமைப்பரிசில்கள் பெற்று இலங்கையில் உள்ள பிரபல பாடசாலைகளிலும், ஒரு மாணவன் மொறட்டுவை பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்கின்றார்கள். அதேவேளை ஒரு மாணவன் சப்ரகமுவ பல் கலைக்கழகத்தில் கல்வி கற்று வெளியேறி தற்பொழுது ஒரு தனியார் துறையில் தொழில் புரிகின்றார். நுவரெலியா சிறுவர் கிராமத்தில் தற்பொழுது 10 சிறுவர்களுக்கு ஒரு செவிலித்தாயுடன் ஒரு குடும்பம் என்ற அடிப்படையில் 10 குடும்பங்கள் இருக்கின்றன. இதில் 6 சிங்கள மொழிபேசும் குடும்பங்களும் 4 தமிழ் மொழிபேசும் குடும்பங்களும் அடங்கும்.

இங்கு கடமை புரியும் செவிலித்தாய்மார்கள் குடும்பப் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு தன்னலம் கருதாது சேவை செய்து வருகின்றனர். இத்தாய்மார்களுக்கு எஸ்.ஓ.எஸ் நிறுவனம் மாதாந்தம் ஊதியம், உணவு, மருத்துவ வசதி, ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி மற்றும் அவர்கள் ஓய்வு பெற்ற பின் ஓய்வூதியமும் வழங்குவதுடன், அவர்கள் 60 வயதைத் தாண்டியபின் இக்கிராமத்திலே தங்கியிருப்பதற்கான வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சிறுவர் கிராமத்திற்கு 10 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களே சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். தற்பொழுது 14 வயதுக்கு மேற்பட்ட ஆண் பிள்ளைகளுக்கென தனியான வீடும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சிறுவர் கிராமங்களுடன் இணைந்ததாக முன்பள்ளிகள், வேலை செல் இளைஞர் கிராமங்கள், விளையாட்டுத் துறை, சுகாதார சேவைகள், குடும்ப வலுவூட்டல் திட்டம் போன்றவையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன, இது போன்று, யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கான அன்பான இல்லம் கடந்த 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பத்தொன்பதாம் திகதி செட்டிக்குளம் மெனிக் பாம் வலயம் நான்கில் 280 தமிழ் பேசும் சிறார்களுடன் தற்காலிக எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம் ஆரம்பிக்கப்பட்டது. போரில் பெற்றோர்களை இழந்த, பெற்றோரைத் தொலைத்த, பெற்றோரால் கைவிடப்பட்ட சிறார்கள் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்துக்குள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான அத்தியாவசியத் தேவைகள் மற்றும் கல்வி வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.

ஒன்றரை, வருடமாக செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தில் இயங்கிவந்த எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமம் 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி வவுனியா நீதிமன்றக் கட்டளைக்கிணங்க 80 சிறார்களுடன் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. மற்றைய சிறார்களின் பெற்றோர்கள் எங்களால் தேடப்பட்டு நீதிமன்றக் கட்டளைக்கிணங்க அவர்களது பெற்றோர்களுடனும் இரத்த உறவினருடனும் இணைக்கப்பட்டனர். 2010 டிசம்பர் 14இல் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்ட சிறார்கள் வெவ்வேறு நான்கு வீடுகளில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை நிரந்தர எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்திற்கான கட்டுமானப்பணிகள் நல்லூர் நாயன்மார்கட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இச்சிறார்கள் யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டு கல்வியூட்டப்பட்டு வருகின்றனர். எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தின் கட்டுமானப் பணிகள் மிகத்துரிதமாக ஒரு புறம் நடைபெற்றுக்கொண்டிருக்க, இன்னுமொரு பாரிய செயற்திட்டமான குடும்ப வலுவூட்டல் செயற்றிட்டத்திற்காக யாழ்ப்பாணத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள சில கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. சிறார்கள் பொருளாதார நிலமை காரணமாக கைவிடப்படுவதைத் தடுக்கும் பொருட்டு சிறார்களைத் தத்தமது இரத்த சம்பந்த குடும்பத்துடன் இணைத்து குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்த உதவுவதன் ஊடே சிறார்கள் தமது பெற்றோருடன் இணைந்து இருப்பதையும், அவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் தனித்து விடப்பட முடியாத சூழ்நிலையை உருவாக்கி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் செயற்றிட்டம் இதுவாகும்.அத்தோடு எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தினுள் சிறார்களுக்கான முன்பள்ளி, கணினி நிலையம் என்பன உள்ளடங்குகின்றன. பாலர் பாடசாலை, எஸ். ஓ.எஸ் சிறுவர் கிராம குழந்தைகளுக்காக மட்டுமல்லாது, ஏனையவர்களுக்கும் கல்வியை வழங்கும் நோக்கோடு உருவாக்கப்பட்டு வருகிறது. சமூக மையமானது சமூகத்துடன் இணைந்த மருத்துவ உதவி வழங்குதல் மற்றும் சமூகத்துக்கும் எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்துக்குமான நல்லுறவைப் பேணும் நிலையமாகவும் அமைக்கப்படுகிறது. எஸ்.ஓ. எஸ். சிறுவர் கிராமங்கள் சார்ந்த சமூகத்துக்குமான சேவையினை வழங்குகிறது.

எஸ்.பே.மகதாஸ்

# புத்தகசாலை

## நூல்: 'மெய்யியல்'




98 வயது வரை வாழ்ந்து கணிதம், அளவையியல், மெய்யியல், எளிய ஆங்கில நடை ஆகிய பல்துறையில் சிறப்பு எய்தி நோபல் பரிசும் பெற்றவர் பேட்றண்ட் றஸல். 20 ஆம் நூற்றாண்டு சிந்தனை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். அவருடைய பெரிய அட்டைப் படத்துடன் மூன்று முக்கிய சமகால மெய்யியலரையும் தாங்கிய பெரு நூலை எமக்குத் தந்துள்ளார் பேராசிரியர் நா.ஞானகுமாரன்.


பல்கலைக்கழக மாணவரும் கல்வி ஆர்வலரும் விரும்பிப் படிக்கும் நடையில் அவர் இதனை வெளியிட்டுள்ளார். மெய்யியலின் தோற்றம், வளர்ச்சி வெவ்வேறு நாடுகளில் காலந் தோறும் தோன்றிய வல்லுநர்களின் பங்களிப்பு எல்லாவற்றையும் ஒரு கலைக் களஞ்சியக் கட்டுரைபோல் எழுதியுள்ளார். மெய்ப் பொருள் ஆராய்ச்சி, தருக்கம் [அளவையியல்] ஆதியில் தோன்றியநாடு இந்தியா. கிரேக்க அறிஞர், சீன அறிஞர் தம் சூழலுக்கு ஏற்ற வகையில், ஆழ் சிந்தனையை வளர்த்து மக்களை வழிப்படுத்தினர்.

நவீன உலகில், சாதாரண மக்களைப் பாதித்த பொதுவுடைமை, டார்வின் சிந்தனை, விஞ்ஞானமே முழுமையான அறிவு என்ற வாதம் எல்லாம் அவரது விளக்கத்தைப் பெற்றுள்ளன. சீனர் உற்பத்தித்திறன் மிக்கவர்களாய் உலகை ஆளமுற்பட்டாலும் அவர்களது சிந்தனையாளர் அறிவின் வெவ்வேறு துறைகளை ஆராய்ந்த விவரம் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

இன்று போரின் விளைவாக நாடு முழுவதும் உளவியற் பிரச்சினைகள் பரந்துகிடக்கின்றன. மருத்துவ உளவியல், சமூகஉளவியல், கல்வி உளவியல், புராதன மக்களின் உளவியல் போன்ற பல்துறைகளை விளக்கியுள்ளார். மனம் பற்றிய மெய்யியல் வேறாகத் தரப்பட்டுள்ளது.

ஆ.சபாரத்தினம்.

## நூல்: 'வகுப்பறையில் முகாமைத்துவம்'



வகுப்பறைக் கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் முக்கியமானதொரு காரணியாக வகுப்பறை முகாமைத்துவம் அமைகின்றது. அத்தோடு வகுப்பறை முகாமைத்துவத்தில் பல்வேறு காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பொருத்தமான முகாமைத்துவம் வகுப்பறையில் காணப்படுகின்றபோது தான், வகுப்பறைச் செயற்பாடான கற்றல் – கற்பித்தலில் வெற்றியடைய முடியும். ஆசிரியர்கள் இதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டும், விளக்கிக் கொண்டும் செயற்பட வேண்டும் என்பதைச் சரிவர விளங்கி எமது ஆசிரிய கல்வியியலாளர்களாகிய சு.பரமானந்தம், பொ.சத்தியநாதன் ஆகிய இருவரும் சேர்ந்து இந்த நூலை உருவாக்கி வெளியிட்டுள்ளனர்.

ஆசிரிய கல்வியியலாளர்கள் தனியே விரிவுரையாளர்களாக நின்று விடாது ஆசிரியர் கல்வி உலகுக்கு தேவையான நூல்களை தேவையறிந்து ஆக்கித் தருபவர்களாகவும், கல்வி ஆய்வுகளில் ஈடுபட்டு புதிய சிந்தனைகளை வெளியிட்டு உதவுபவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த நூலினை ஏனைய ஆசிரியர்கள் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

க.பேர்ணாட்,
வவுனியா, தேசிய கல்வியியற் கல்லூரி

## நூல்: "எழுதி மகிழ்வோம்"




ஆற அமர ஓர் இடத்திலிருந்து, எழுத்துச் செயற்பாடுகளில் ஈடுபடுவதென்பது, சிறு பிள்ளைகளுக்கு கசப்பான விடயமாகும். அந்தக் கசப்பான விடயத்தை, இனிமையான முறையில், பிள்ளைகள் ஆர்வத்தோடும், அக்கறையோடும் ஈடுபட வைப்பதே ''எழுதி மகிழ்வோம்'' நூலின் தலையாய நோக்காகும். உண்மையில் பிள்ளைகளை ''மகிழ்வோடு எழுதத் தூண்டும்' ஒரு முன் முயற்சியே 'எழுதி மகிழ்வோம்' எனும் தமிழ் எழுத்துப் பயிற்சிக்கான ஏடு ஆகும்.

இந்த நூலாசிரியர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் கணிதம் கற்பிப்பதில் புதுமைகளைக் கையாண்டு, மாணாக்கர்களை வெற்றியடையச் செய்ததோடு அல்லாமல், 'துல்லியம்' என்ற சஞ்சிகையையும் கொண்டு வந்தவர். கணித பாட ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளராகப் பல நிலைகளில் பணியாற்றிய ஒரு மூத்த கல்வி நிர்வாக சேவை அதிகாரியான இவரது அனுபவம், இந்த நூலினூடாக மிளிர்வதனைக் காணலாம்.

கணிதப் புலமை மிக்க இவர், சிறார்களிடையே கல்வியில் புதுமையைப் புகுத்தி, அவர்களை எழுதுவதில் ஆர்வமோடு ஈடுபட வைப்பதனையே தனது – துல்லியமான – இலக்காகக்கொண்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளார் என்றே கூறலாம். இந் நூலின் செயல் 01 ஆனது பிள்ளைகளைத் தம்பால் ஈர்த்து, நூலின் செயல்களுடன் ஒன்றுபட வைக்கின்றது.தொடர்ந்து செயல் 02 ஆனது, பிள்ளைகளை எழுத்துக்களுக்கான திசைமுகப் பயிற்சியில் விருப்போடு இணைந்து கொள்ளத் தக்கவாறு அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்று தொடர்ந்து வரும் செயற்பாடுகளும், பிள்ளைகளது இயல்பிலான ஊக்கங்களுக்கும், நாட்டங்களுக்கும் உரமூட்டத் தக்கவாறு அமைக்கப்பட்டுள்ளன.

செயல் 05 இலிருந்து, மிக எளிமையான நான்கு எழுத்துக்களைப் பிள்ளைகள் மகிழ்வுடன் எழுதிப் பயிலும் வாய்ப்பினை வழங்குகின்றது. தொடர்ந்து மேலும் நான்கு எழுத்துக்களுடன், எட்டு, பன்னிரண்டு எழுத்துக்கள் என வளர்த்துச் செல்லப் படுவது, பிள்ளைகளை மிக இலாவகமாக அதில் ஈடுபடுத்துவதாக அமையச் செய்கின்றது. இதனால் பிள்ளைகள் சோர்வு இன்றி, தன்னம்பிக்கையுடன் முன் செல்லத் தக்கவாறு மிக நேர்த்தியாக செயல் ஒழுங்குகள் இடம் பெறுவது, ஆசிரியரின் கல்வி பற்றிய ஆழ்ந்த, அகன்ற, நுண்ணிய புலமையைக் காட்டுகின்றது.

முன் பள்ளிச் சிறார்களுக்கும், ஆரம்பக் கல்வி முதனிலைச் சிறார்களுக்கும், இவ் ஏடு மிகப் பயன்மிக்கதாகும். ஏனைய ஆரம்பக் கல்வி இரண்டாம், மூன்றாம் நிலை சிறார்களுக்கு மட்டுமன்றி, இடை நிலைக் கல்வியில், உறுப்பமையவும், எழுத்துத் திசைமுகத்திறகமையவும் எழுத இடர்படும் மாணவர்களுக்கும் ஏற்ற ஒரு செயல் நூல் 'எழுதி மகிழ்வோம்' ஆகும்.

செ.செல்வதாஸன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரிய நடத்தையே மாமனிதனுக்கான அடையாளம்!

(கடந்த வாரத் தொடர்ச்சி)

சமூகம் உங்களை மதிக்க வேண்டும் என்று விரும்பும் அதே நேரத்தில், சமூகத்திலுள்ளவர்களையும் நீங்கள் மதிக்க வேண்டும். மனிதனிடம் இருக்கும் ஓர் உன்னத ஆற்றல் என்னவெனில், தன்னை மாற்றிக் கொள்ளுதல். ஒரு தமிழன் அமெரிக்காவிலோ அல்லது பிரிட்டனிலோ அல்லது கனடாவிலோ சில ஆண்டுகள் தொடர்ந்து வாழ்ந்தால், அந்த நாட்டு மக்களில் பலரை விட தெளிவாக ஆங்கிலம் பேசுவார் மற்றும் அவர்களின் கலாசாரத்தை கிரகித்துக் கொள்வார். இதுதான் ஒரு மனிதனுக்கு இருக்கும் மாண்பு.எனவே, எம்முடைய நடத்தை நெறிமுறைகளை சிறப்பான வகையில் மாற்றிக் கொள்வது எமக்குச் சாத்தியமான ஒன்றே.''ஒரு சிறந்த பண்புநலன் என்பது, ஒரு குறிப்பிட்ட நாட்டில் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் அனைவரும் போற்றக்கூடியதாக இருக்க வேண்டும்'' நாம் முன்பு சொன்னது போல், ஒரு மனிதனின் முதல் பள்ளிக்கூடம் அவனது இல்லம்தான். முதல் ஆசிரியர்கள் அவனது பெற்றோர்தான். தந்தை செய்யும் ஒரு தவறான செயலை, மகன் பயமின்றிதானும் செய்கிறான். ஒரு தாயின் தவறான நடவடிக்கையை ஒரு மகள் பிற்காலத்தில் தயக்கமின்றிப் பின்பற்றுகிறாள். நன்கு படித்தவர்கள் என்று அறியப்படும் பல குடும்பங்கள்கூட, பொது இடங்களில் நாகரிகமாக நடந்துகொள்வதில்லை. இது எதைக் காட்டுகிறதென்றால், பாடத்திட்ட குறைபாட்டை அல்லது வீட்டின் பண்பாட்டு குறைபாட்டை காட்டுகின்றது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒரு நடத்தை நெறிமுறைக் கோட்பாடு உண்டு. அதைக் கடைப்பிடிப்பதும், மீறுவதும் சமூகத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதேசமயம், ஒரே பழக்கம் ஒரு சமூகத்தால் வ்ரவேற்கப்படும் அதேவேளை இன்னொரு சமூகத்தால் விரும்பப்படமாட்டாது. உதாரணமாக, இந்தியாவில், ஒரு பரிசுப்பொருளை ஒருவர் மற்றவருக்கு அளிக்கையில், அதை உடனே பிரித்துப் பாப்பதும் விரும்பத்தக்கதல்ல மற்றும் நாகரிகமானதல்ல. ஆனால், அமெரிக்காவில், ஒரு பரிசுப்பொருள் அளிக்கப்பட்டால், அதை உடனே பிரித்துப் பார்த்து, தனது சந்தோஷம் அல்லது கருத்தை தெரிவித்துவிட வேண்டும். இதுபோன்ற பழக்கங்கள் பெரிய விஷயமல்ல. ஆனால், மானுட ரீதியான பண்புகளே அனைத்து இடங்களுக்கும் தேவை. சிறந்த நடத்தை நெறிமுறைகள் என்றால் அது வெறும் வரட்டுத் தத்துவம் என்பதாக இருக்கக்கூடாது. எந்தச் சூழ்நிலை என்றாலும், ஒரு சம்பிரதாயத்தை கட்டாயம் கடைப்பிடிப்பது என்பதல்ல சிறந்த நெறிமுறை. பிறருக்கு நன்மை தரக்கூடியதாகவும், பிறரைத் தொந்தரவு செய்யாததாகவும், பிறரைச் சந்தோஷப் படுத்துவதாகவும் இருப்பதே சிறந்த நடத்தை நெறிமுறை. ஒரு குறையைக் கண்டால், அதற்கான பழியைப் பிறரின் மீது போடாமல், உங்களால் முடிந்ததை செய்து அந்தக் குறையை நீக்க முற்பட வேண்டும். ஒரு நல்ல பொன்மொழி உண்டு, ''இருட்டு, இருட்டு என்று சொல்லிக் கொண்டிருப்பதை விட, உன்னால் முடிந்தால் ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றிவை'' என்பதே அது.



பொது இடத்தையோ அல்லது பொதுச் சொத்தையோ சேதப்படுத்தாமல், சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பதில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பங்கு உண்டு. சமூக அளவில் சீரிய நடத்தை நெறிமுறையே இதை அடைவதற்கான வழியாகும். படித்தவர்கள் செய்கிறார்கள் என்பதற்காகவோ, பணக்காரர்கள் செய்கிறார்கள் என்பதற்காகவோ ஒரு விஷயத்தை கண்மூடித்தனமாக பின்பற்ற வேண்டியது அவசியமில்லை. பகுத்துப் பார்த்தே நாம் செயலாற்ற வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும், குடும்பப் பொறுப்பு என்பதைத் தாண்டி, சமூகப் பொறுப்பும் உண்டு. யார் எக்கேடு கெட்டால், எனக்கென்ன என்று இருக்கக்கூடாது. ஏனெனில், மற்றவரும் அப்படியே நினைத்தால், உங்கள் நிலைமையும் கஷ்டமாகிவிடும்.ஒவ்வொரு இடத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற கலாசார வரைமுறை உண்டு. அவற்றை எவரொருவர் கர்ம சிரத்தையோடு பின் பற்றுகிறாரோ, அவரே சமூகத்தில் மிகவும் மதிக்கப்படும் நபராகவும், அனைவராலும் விரும்பப்படும் நபராகவும் இருப்பார்.

இ.வலையவன்

# வாசகர் திருமுகம்

## மக்களுக்கு வசதியான பஸ் சேவையே தேவை

கடந்த 08.03.2013 அன்று நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தேன். போக்குவரத்து வசதியைப் பற்றியும் அடிக்கடி ஒலிபெருக்கி மூலம் அறிவித்தார்கள். ''நயினாதீவிலிருந்து குறிகாட்டுவான் வரைக்குமான படகு சேவை அரைமணித்தியாலயத்துக்கு ஒரு தடவை நடைபெறுகிறது. பிற்பகல் 5.30 மணி வரை சேவை இடம்பெறும். குறிகாட்டுவானிலிருந்து யாழ்.வரையான தரைவழிப் போக்குவரத்துச் சேவையும் சிறப்பாக உள்ளது. அடியார்கள் திரும்பிச் செல்கின்ற பிரயாணத்தை எண்ணி அவதிப்படாமல் வழிபாடுகளை மேற்கொண்டு ஆறுதலாக திரும்பிச் செல்லலாம்'' என்ற இந்த அறிவித்தலைக் கேட்டபோது மகிழ்ச்சியாக இருந்தது

ஆனால் அம்மனை வழிபட்டுவிட்டு திரும்பி வந்த பயணத்தில் அதாவது பிற்பகல் 4.30 மணிக்கு படகில் ஏறி குறிகாட்டுவானுக்கு 4.55 இற்கு வந்த எமக்கு அதிர்ச்சித் தகவல் காத்திருந்தது. அளவுக்கு அதிகமான சனம் ஏறியதால் பஸ் போய்விட்டது; இனி பஸ் இல்லையாம் என்று அங்கிருந்தவர்கள் கூறினர். பிற்பகல் 5 மணிப் படகில் வருபவர்களையும் எதிர்பார்த்து பிற்பகல் 5.25 மணி அளவில் வழமையாகப் புறப்படும் தனியார் பஸ்ஸின் கடைசி சேவையும் 5 மணிக்கு முன் புறப்பட்டுவிட்டது. பி.ப 6 மணிக்கு சேவையில் அரச போக்குவரத்துக்குச் சொந்தமான கடைசி பஸ் 3 மாதமாக சேவையில் இல்லையாம். நானும் என்னோடு வந்த 15 பேரும் திகைத்து நின்றோம். பிற்பகல் 5 மணிப் படகிலும் 10 பேர் வந்து சேர்ந்தனர். 2 கைக்குழந்தைகள், 5 சிறுவர்கள் உட்பட 25 பேர் நின்றிருந்தோம்.

கோயிலுக்குப் பொருள்கள் கொண்டு வந்த லொறியே எமக்குத் தஞ்சமானது. லொறியில் ஏறி மிகவும் கஷ்டப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம். வரும் வழியில் வழமையான கடைசி பஸ்ஸை எதிர்பார்த்து கொழும்புப் பயணிகளும் காத்து நின்றனர்.

அதிகளவு பயணிகள் பஸ்ஸில் ஏறியதால் 5 மணி பஸ் குறித்த நேரத்துக்கு முன் புறப்பட்டுவிட்டது. சரியோ, பிழையோ ஆனால், குறித்த பஸ் சாரதி தங்கள் தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவருடன் அல்லது நேரக்காப்பாளருடன் தொலைபேசி மூலம் கதைத்து 5.30 மணிக்கு வேறு ஒரு பஸ்ஸைச் சேவையில் ஈடுபடுத்தியிருக்க வேண்டும். அது நடைபெறவில்லை. இதற்கு பொறுப்பானவர்கள் இந்த முறைகேட்டுக்குப் பதில் சொல்வார்களா?

மாலை 6 மணிக்குரிய இ.போ.ச. பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு தாம் இ.போ.ச. முகாமையாளரைக் கேட்டுள்ளதாகவும், விரைவில் ஆரம்பிக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் கோயிலைச் சார்ந்த ஒருவர் சொன்னார்.

சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் வேண்டுகின்றேன். நாம் பயணித்த ''அருள் அம்பாள்'' எனும் லொறி உரிமையாளர் எவரிடமும் பணம் அறவிடவில்லை என்பது நன்றியுடன் பாராட்டப்பட வேண்டிய நினைவில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

**செ.சிவராசா, கொக்குவில்**

## எங்கள் பகுதிகளில் மரணித்து விட்டதா மனிதம்...?

ஒரு நாள் மதியம் 12 மணி இருக்கும். ஒரு கோயில் திருவிழாவுக்கு பணி செய்துவிட்டு எனது பாலகனைப் பள்ளியிலிருந்து கூட்டி வருகிறேன். உரும்பிராய் மருதனார் மட வீதியால் செல்கிறேன். பார்ப்பதற்கும் வீதி மிக அழகும், அகலமும். வாகனங்களின் வேகம் வார்த்தைகளில் சொல்ல முடியாது. அண்ணா பாமிற்கு முன்னால் பார்த்தேன். கோர விபத்து நடந்துள்ளது. ஓட்டோ ஒன்று, படி வாகனத்துடன் நேருக்கு நேர் மோதிச் சிதைந்து கிடந்தது.

எல்லோரும் கூடிநின்று பார்த்துக் கொண்டு நின்றார்கள். எவருக்கும் எப்படி நடந்தது என்ற விபரம் சரியாகத் தெரியவில்லை. ஒருவர் சொன்னார் . விபத்தில் சிக்கிய ஒருவரின் "கண்ணொன்று காணுக்கை கிடக்குது நேருக்கு நேரே மோதிய 'படி' வாக னம் தப்பித்து ஓடி விட்டதாம்'' என்றார்.

மறுநாள் வெளிவந்த பத்திரிகைகளில் பார்த்தேன். மூன்று பேர் படுகாயமாம். அடித்தாயே ஆண்மகனே, நீ என்ன ஆடவன் தானோ ஐயா? அடிமனது நெருடலையோ அநியாயத்தை எண்ணி? மனிதமே, நீ என்ன மரணித்து விட்டாயோ.. நீதியே நீயென்ன வீதிகளில் தூங்குகிறாயா?

**கேசவ், ஊரெழு**

## திருமுறை ஓதுவதற்கு நடவடிக்கை வேண்டும்

ஆலயங்களில் தேவாரத் திருமுறைகள் படிப்பது தொடர்பாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் எஸ்.லலீசன், உதயன் பத்திரிகையில் கருத்துப் பக்கத்தில் எழுதியிருந்தார். இந்த விடயம் தொடர்பாக பிறிதொரு நாள் இன்னொருவர் உதயன் பத்திரிகையில் அதே பக்கத்தில் எழுதியிருந்தார்.

ஆலயங்களில் திருமுறைகள் ஓதப்படுவது சரியான முறையில் அமைவதில்லை என்றும், பண்முறை பாதுகாக்கப்படுவதில்லை என்றும் பலவாறாக எழுதப்பட்டிருந்தது. இந்த விடயம் உண்மையே. இதனைப் போக்குவதற்குத் திருமுறைகள் பயிலும் மாணவர்களுக்குப் பண உதவி வழங்கி ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் திருமுறைகளைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என்று லலீசன் எழுதியிருந்தார்.

பயிலும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் கொடுப்பதை விட ஆலயங்களில் திருமுறைகள் ஓதுபவர்களுக்கு பணம்கொடுக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும். ஓதுபவர்களுக்கு மாதாந்த ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

இப்படிச் செய்தால் திருமுறைகள் படிப்பவர்கள் எண்ணிக்கை தானாகவே அதிகரிக்கும். ஆலயங்களில் திருமுறைகள் ஒழுங்காக பண்முறை வழுவாமல் பாடப்பட முடியும். இதன் மூலம் ஆலயங்கள் தரமுள்ள ஓதுவார்களை நியமிக்க முடியும். முதலில் கூடிய வருவாயுள்ள ஆலயங்களில் இதனை மேற்கொள்ளவேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகத்தினர் முன்வருவார்களா? ஊக்கமளிப்பரா?

**அ.வசந்தன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூவே



பூமியில் பூத்த பூவே
எனக்கோர் வரம் தருவாயா?
உன் சிரிப்பில் பாதியைத் தந்துவிடு
இங்கு சிரிப்பை மறந்து
போர் வடுக்களைச் சுமக்கும்
முகங்கள் ஏராளம்!
உன் சிரிப்பு முடிவில்லாதது
உன்னால் மட்டுமே
மலரும் போதும் சிரிக்க முடிகிறது
பறிக்கும் போதும் சிரிக்க முடிகிறது
எனவே
தயவுசெய்து
சிரிப்பே தெரியாத
சிடுசிடுத்த முகங்களுக்காய்
உன் சிரிப்பில் பாதியைத் தந்துவிடு!

அ.சுபாசினி
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

# பாடசாலைக் காலம்



பாடசாலைக் காலம் என்பது ஒரு சொர்க்கம் மாதிரி. அங்கு நாம் செய்யும் குறும்புகள், ஆசிரியரின் தண்டனை, ஏச்சு எல்லாம் ஒரு விளையாட்டு மாதிரி. பாடசாலை முடிந்ததும் வீதியில் மாணவர்களுடன் சண்டை பிடிப்பது எல்லாம் பாடசாலைக் காலத்திலே தான். பாடசாலைக்காலம் என்பது எப்படி வரும், எப்படிப் போகும் என நமக்குத் தெரியாது. பாடசாலைக் காலமே மிகுந்த மகிழ்ச்சியான காலமாகும். பல்கலைக்கழகத்திலோ, வேலை பார்க்கும் இடங்களிலோ இப்படி ஒரு காலம் வராது. நாம் பாடசாலைக் காலத்தை மிகவும் கவனமாகக் களிக்க வேண்டும். அதிலே தான் இன்பம், துன்பம், துக்கம் எனும் மூன்றும் அடங்கியுள்ளன.

த.கல்கிராம், 10 'ஏ',
யா/பரியோவான் கல்லூரி




## அறிந்து கொள்வோம்

★ இரத்த ஓட்டம் இடைவிடாது நடைபெறுவதைக் கண்டுபிடித்தவர் -
வில்லியம் ஆர்வி

★ பறவைகளின் அரசன் என்று அழைக்கப்படும் பறவை-
கழுகு

★ அரண்மனைகளின் நகரம்-
கல்கத்தா

★ கடல் நீரில் அதிகம் உள்ளது-
சோடியம் குளோறைட்

★ வெள்ளை யானைகளின் நாடு-
தாய்லாந்து

★ உயிரினங்களிலே பறவைகளுக்கு மட்டும் அதிக பார்வை சக்தி உண்டு.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

★ ஸ்கூட்டரைக் கண்டுபிடித்த நாடு எது?
இங்கிலாந்து

★ நிலக்கரியின் சிறப்புப் பெயர் யாது?
கறுப்பு வைரம்

★ கடல் மட்டத்துக்குக் கீழே உள்ள நாடு எது?
டென்மார்க்

★ சுரப்பிகளில் பிரதானமான சுரப்பி எது?
பிட் யூட்டரி சுரப்பி

★ உலக சுற்றுச் சூழல் தினம் எப்போது?
ஜூன் 5

★ உலக சமாதான தினம் எப்போது?
ஆகஸ்ட் 6

★ அமெரிக்காவின் தேசிய பறவை எது?
கழுகு

★ இந்தியாவினுடைய பிரதமர் யார்?
மன்மோகன் சிங்

★ முட்டையிடும் ஆண் விலங்கு எது?
நத்தை

★ நாக்கில்லாத உயிரினம் எது?
முதலை

க.கீர்த்தனன், தரம் 10,
யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்

## தத்துவம்

நதி
என்றால்
கரையுண்டு
பூமி
என்றால் தரை உண்டு
நீர்
என்றால் நுரை உண்டு
மனிதன்
என்றால் குறை உண்டு

ச.சங்கமன், 7'பி'
யா/ஹாட்லி கல்லூரி.

# வழிகாட்டி!

**சென்றவாரத் தொடர்ச்சி.......**



வீரர்களும் அவ்வாறே அந்தக்கிராமத்திற்குப் போய் கோடரி, கடப்பாரை சம்மட்டிகளுடனும் திரிந்த யாவரையும் பிடித்து வந்தனர். அவர்களில் மாகதனும் ஒருவன். அரசன் அவர்களை விசாரிக்காமலேயே தன் காவலர்களிடம் இந்தத் துரோகிகளை யானையின் கால்களுக்கு அடியே போட்டு மிதிக்கச் செய்யுங்கள் என்று கட்டளையிட்டான்.

வீரர்களும் அவர்களை இழுத்துச் சென்று ஓரிடத்தில் நிறுத்தினர். பட்டத்து யானையை அவர்கள் கொண்டு வந்ததும், அந்த யானை மாகதனைப் பார்த்ததும் சட்டென நின்றது. பிறகு பின் வாங்கி பயந்தது போல ஓடி விட்டது. வீரர்கள் வேறொரு யானையைக் கொண்டு வந்தும் அதுவும் அவ்வாறே செய்தது. இம்மாதிரி பல யானைகள் செய்யவே அந்த அதிசயத்தை அவர்கள் மன்னனிடம் போய்க் கூறினார்கள்.

அவர்கள் யானைகள் தம்மிடம் வராதிருக்க ஏதாவது தாயத்து கட்டிக் கொண்டிருப்பார்கள் போலிருக்கிறது. அவர்களைச் சோதனை போட்டு தாயத்துகளை அகற்றி விட்டு யானைகளை அவர்களின் மீது ஏவுங்கள் என்று மன்னன் கட்டளையிட்டான்.

ஆனால் வீரர்கள் சோதனை போட்டுப் பார்த்ததில் யாரிடமும் ஒரு தாயத்து கூட இருக்கவில்லை. அதைக் கூறவே மன்னன் சரி. அவர்களை எல்லாம் என் முன் கொண்டு வந்து நிறுத்துங்கள் என்றான். வீரர்களும் அவர்களை மன்னன் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

மன்னனும் உங்களுக்கு யானைகளைக் கட்டுப்படுத்தும் மந்திரம் ஏதாவது தெரியுமா? என்று கேட்டான். அதற்கு மாகதன் அரசே எங்களுக்கு ஒருவித சக்தி வாய்ந்த மந்திரம் தெரியும். ஆனால் அது நீங்கள் நினைக்கும் சக்தியுள்ள மந்திரம் அல்ல என்றார்.

அதென்ன அதிசய மந்திரம்? என்று மன்னன் கேட்கவே மாகதனும் எங்களில் ஒருவர் கூட எந்தவொரு உயிருக்கும் தீங்கு இழைக்க மாட்டோம். பொய் பேச மாட்டோம். போதை தரும் பொருள்களைச் சாப்பிட மாட்டோம். ஜீவராசிகளிடம் அன்பு செலுத்துகிறோம். பிறருக்கு உதவுகிறோம். பாதைகளைச் செப்பனிட்டு குளங்கள் வெட்டி, சத்திரங்கள் கட்டுகிறோம். இந்த வழிகளைக் கடைப்பிடிக்கும் மந்திரம் தான் எங்களுக்குத் தெரியும் என்றார்.

இதைக் கேட்ட மன்னன் ஆச்சரியப்பட்டு இப்படி நல்ல செயல்கள் புரியும் உங்களை அந்த கிராம அதிகாரி ஏன் கலகக்காரத் துரோகிகள் என்று குற்றம் சாட்டினான்? என்று கேட்டான். மாகதனும் நீங்கள் தீர விசாரிக்காமல் அவன் கூறியதை நம்பி விட்டீர்கள் என்றான்.

நீங்கள் கோடரியும் கடப்பாரையும் எடுத்துக் கொண்டு திரிந்து மற்றவர்களை பயமுறுத்துவதாக அவன் கூறினான். உங்களிடம் இவை எல்லாம் இருக்கவே நானும் நம்பி விட்டேன் என்றான் மன்னன்.

மாகதனும், இவை எல்லாம் நாங்கள் பொதுப்பணி புரிய எடுத்துச் செல்கிறோம். யாரையும் தாக்குவதற்காக அல்ல என்றான். மன்னன் நன்கு விசாரணை நடத்திய போது மாகதனின் முயற்சியால் அந்த ஊரார் திருந்தியதும், கிராம அதிகாரிக்கு முன்பு கிடைத்து வந்தது போல லஞ்சம் கிடைக்கவில்லை என்பதும் தெரிந்தது.

பொய்க் குற்றச்சாட்டுகளைக் கூறியதோடு பல ஆண்டுகளாக லஞ்சம் வாங்கி வந்ததற்காகவும் மன்னன் அவனது சொத்துக்களை எல்லாம் பறிமுதல் செய்ததோடு சிறையில் தள்ளினான். அதனை மாகதனிடமே கொடுத்து கிராமத்து நலனுக்காக உபயோகப்படுத்துமாறு கூறி இனிமேல் நீங்கள் தான் அந்த கிராமத்துத் தலைவர். நான் இனி எந்த அதிகாரியையும் நியமிக்கப் போவதில்லை என்றான். அது மட்டுமல்ல தன் பட்டத்து யானையையே அவன் மாகதனுக்குக் கொடுத்துக் கௌரவித்தான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org